
ஒரு காதல்
நிவந்தம்
பாலகுமாரன்

# Contents

1

2

3

4

5

6

7

8

9

10

# 1

வீரம் என்பது மிகப் பெரிய பொய் என்று தோன் றிற்று ராஜேந்திர சோழ தேவருக்கு.

இரண்டு கைகளையும் மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு திருவையாறு காவிரிக் கரையின் ஓரம் நின்று கொண்டிருந்தார். தலைக்குமேல் அரை நிலவு குதிரைக் குளம்பின் காலடி போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது' குளம்பின் தடமே இத்தனை பிரகாசம், இவ்வளவு பெரி யது எனில் குதிரையின் பிரகாசம் அதன் நீள அகலம் கற்பனை செய்ய முயன்று தலை உதறிக் கொண்டார்.

சிரிப்பு வந்தது. பிறை நிலவை குளம்பு என்று யாரும் கற்பனை செய்வார்களா? இது குதிரையின் குளம்படி என்றால் நான்கு இருக்க வேண்டுமே என் பார்கள். சீறி ஓடுகிற குதிரையின் குளம்படி தள்ளித் தள்ளிதான் விழும். இடது முன்கால் தான் ஓடும் போது அழுத்தமாய் பதியும். அது பூமியில் ஊன்றி உந்தி உடம்பிழுக்கும். பொறி பறக்க ஓடுகிறபோது இடைவெளி அதிகமாகும். இந்த நிலவு, குதிரையின் ஒரு கால், இடதுமுன்கால், மற்றவை வானத்தில் எங்கோ இருக்கும்.

எல்லையில்லாதது பிரபஞ்சம் என்கிறாரே சர்வசிவ பண்டிதர். அந்த எல்லையே இல்லாத இடத்தில் எங்கேனும் இன்னொரு குளம்படி இருக்கும். ஒரு வேளை பூமி இன்னொரு குளம்புத்தடமா...எல்லையில்லா பிரபஞ்ச வெளியோரம் நின்று பார்த்தால் பூமியும் அரை நிலவாய் இப்போது தெரியுமோ.

ச்சே...எனக்கென்ன நேர்ந்து விட்டது, ஏன் இப்படி யோசிக்கிறேன், ஆனால் நான் எதை யோசிப்பினும் இந்த குதிரை குணம் போகவில்லை.

ஐந்து வயதில் சேணம் பிடித்து துள்ளியேறிய குதிரை ஓட்டம் இந்த முப்பத்தி மூன்று வயது வரை குறையவில்லை. இரவும் பகலும் காலையும் மாலையும் குதிரையிலேயே வலம் வந்த வாழ்க்கை, மயக்க நினைவிலும் மறக்க முடியவில்லை. ஆனால் அத்தனை தொலைவு பயணமும் வீண்.

திக் விஜயம் ஒரு விரயம். வீரம் ஒரு பொய் மிகப்பெரிய பொய். நான் தவறான இடத்தில் தவறாய் வளர்க்கப்பட்டு விட்டேன்.

ராசராசசோழருக்கு மகனாய், ஒரே மைந்தனாய், சோழ சாம்ராஜ்யத்திற்கு வாரிசாய் நான் பிறந்திருக்கக் கூடாது.

முடி கொண்ட சோழன், கங்கை கொண்ட சோழன், விக்கிரம சோழன், ஏன்... பண்டித சோழன் என்றும் அழைக்கிறார்கள். இந்தப் பட்டங்கள் எல்லாம் வெறும் ஓசைகள்.இரண்டு வாயில் காவலர்கள் தொண்டை கிழிய கூவ, சபை அமைதியாகி, எழுந்து நிற்கும் சலசலப்பு மட்டும் கேட்க வைக்கும் உத்திகள்.

நான் உள்ளே நுழைய சபை மொத்தமும் எழுந்திருக்கும். அத்தை மட்டும் மாடத்தில் உட்கார்ந்திருப்பாள். வயதாகி விட்டதாம் எழுந்திருக்க முடியாதாம். அது தவிர ராஜேந்திர சோழன் உங்களுக்கு அரசன். எனக்கு என்ன அதனால் இவன் நான் பார்த்து பிறந்த பிள்ளை. இதோ இந்த உள்ளங்கையில் நான் தூக்க, வீறிட்டு முகம் சிவக்க முதல் குரல் கொடுத்தான். என் கையால் சங்கெடுத்து மருந்து புகட்டி வாய் துடைத்த குழந்தை. இவன் வட தேசம் வென்றதும் வாட்ட சாட்டமாய் நிற்பதும் இந்த அத்தை குந்தவை தேவி கொடுத்த மருந்தினால்தான்."

"இப்படி ஒரு பிள்ளை என் தம்பி ராசராசனுக்கு பிறக்க வேண்டும் என்று நான் செய்துகொண்ட நேர்ச்சை ஒன்றா இரண்டா. எத்தனை நிவந்தம். எவ்வளவு பூஜை. என்னால் முடியாது எழுந்திருக்க."

எழுந்திருக்க வேண்டாம், வாய் பொத்தி பேசாமலா வது இருக்கலாமல்லவா ஒவ்வொரு அரசியல் விவகாரத்திலும் முடிவு சொல்ல முயல்கிறபோது அத்தை இடையூறு நிச்சயம் வரும்.

பழையனூர் பிரம்மதேயத்தை, அந்தணர்களுக்கு வரியில்லாது தானமாய் கொடுக்கப்பட்டிருந்த ஊர் நிலத்தை வெள்ளான் வகை நிலமாக மாற்ற பேசியபோது அத்தை இடைமறித்தாள். உன் தகப்பன்

கொடுத்த தானத்தை எப்படிப் பிடுங்கலாம் நீ என்று வாதிட்டாள்.

கங்கை வரை சென்று வென்று திரும்பிய படைத் தளபதிகள் தஞ்சைக்கு வட பகுதியில் பல ஊர்களில் பாடிகள் அமைத்து தங்கியிருந்தார்கள்.

போரில்லா காலத்தில் உழுது பயிரிட்டு சாகுபடி செய்து கொள்ள உதவி கேட்டார்கள். விளை நிலம் அத்தனையும் அந்தணர்களிடம் இருந்தது.

"என் வீரர்களுக்கு, என் வெற்றிக்கு பாடுபட்ட மறவர்களுக்கு நான் உதவ வேண்டாமா?" ராஜேந்திர சோழர் திரும்பிக் கேட்ட போது சீறினாள்.

"உதவி என்று ஒருவர் செய்வதை ஒரு பொழுதும் தடுக்கிறவள் அல்ல இந்த குந்தவை. நீ கொள்ளையடித்து வந்த பொன்னில் கொஞ்சம் கொடுத்தனுப்பு." சபை நடுவே கட்டளை போல் பேச்சு வந்தது.

விண்ணப்பித்த வேளைக்காரப் படை குந்தவை தேவியாரின் சீற்றம் கண்டு அஞ்சி பொன் போதும் அரசே, நிலம் வேண்டாம் என்று பின்னடைந்தது.

பொன் பொருள் புண்ணியமேயில்லை என்பது ராஜேந்திரருக்குப் புரியும். எத்தனைப் பொன் கொடுப்பினும் விளைநிலம் தானம் தருவதுபோல் ஆகாது. வேளைக்காரப் படையினர் அரசரைக்கண்டு பொற்காசுகள் வாங்க வந்திருப்பது தெரிந்ததும், பழையனூர் அந்தணர்கள் ஒரு கழஞ்சுக்கு இரண்டு கலம் நெல்விற்பதை உடனடியாய் கலம் நெல் ஒரு கழஞ்சு என்பார்கள், தானம் வாங்கின காசுதானே. தாயேன் என்பார்கள். எல்லாப் பண்டங்களும் விலையேறும் உழவுகுடி மக்கள் திண்டாடுவார்கள். பூசலும் பொறுமலும் அதிகமாகும்.

உடனடியாய் ஆயிரம் கழஞ்சும் ஆயிரம் கலம் நெல்லும் அன்பளிப்பாய் அறிவித்தபோது வீரர்கள் சிறிது முகம் மலர்ந்தார்கள். இந்த அத்தை முகம் சுருக்கினாள்.

உடனடியாய் ஐம்பத்தியோரு ஊர்களிலிருந்து அந்த ணர்களை வரவழைத்து ராஜேந்திரன் எதிரே நிறுத்தி னாள். தானம் கொடு என்றாள். அத்தனை ஊர்களை யும் ஒன்றாக்கி திரிபுவன மாதேவி சதுர்வேதி மங்கலம் என்று பெயரிட்டாள். கூட்டிக் கழித்து கணக்குப் போட ஐம்பத்தோராயிரத்து ஐம்பது கலம் நெல் ஆண்டொன்று அவர்கள் தானமாய் பெற்றார்கள், இது தவிர முப்பத்தியி ரண்டரை பொற்காசுகளும் தானம் கேட்டார்கள்.

வருடா வருடம் தவறாது இந்த தானம் நடக்க அத்தை செப்பேடு செய்து இந்த நிவந்தம் வெட்டச் செய் தாள்.

அம்மா திரிபுவன மாதேவி பெயரால், தானம் என்று சொல்லி விட்டாள். ராஜேந்திரன் மறுக்க மாட்டான். மறுக்கக் கூடாது என்று தந்திரம் செய்தாள்.

இதெல்லாம்கூட ஒழிந்து போகட்டும். மகாதேவர் அரு ளால் சோழ நாட்டில் பஞ்சமில்லை. செல்வச்செழிப் புக்கு குறைவில்லை. தானம் கொடுப்பதில் கூச்ச மில்லை. படை வீரருக்கு கொடுப்பதில் அத்தை செய் யும் இடைஞ்சல் தான் கோப மூட்டியது.

இன்று காலை சபை கூடியபோது மாடத்தில் அத்தை யில்லை. அத்தையின் கணவர் அப்பாவின் அருமை நண்பர். முதன் முதலாய் ராஜேந்திரனுக்கு வாள் வீசச் சொல்லிக் கொடுத்த வந்தியத்தேவர், கீழே முதல் ஆச னத்தில் அமர்ந்திருந்தார். நேர் எதிரே மும்முடிச் சோழ பிரம்மராயர் கிருஷ்ணன் இராமன் உட்கார்ந்திருந்தார்

உள்ளே நுழைய, வந்தியந் தேவரும் பிரம்மராயரும் எழுந்து வணக்கம் சொன்னார்கள்.

வந்தியத்தேவர் நாகரிகம் உள்ளவர். அத்தை போல முரட்டு சுபாவம் அல்ல அவருடையது. நீ அரசன் நான் உன் தளபதி. இந்தச் சபையில் உன் வருகைக்கு எழுந்து வணங்குவது என் கடமை. என் வணக்கத்தை ஏற்கக் கூச்சப்படாதே, ராஜேந்திரா என்றார்.

முடி முழுவதும் நரைத்து, முன் கைகளில் சுருக்கம் விழுந்தபோதிலும் அழகு குறையாத கிழவர். வெண் தாடி வெள்ளை தலைமுடி கூட அவருக்கு சுகமாய் இருக்கிறது. இன்னமும் பெண்கள் வெட்கப்படுகிறார்கள், வந்தியத் தேவரைப் பார்த்து.

அவரையும் விட மூத்தவர் கிருஷ்ணன் இராமனான மும்முடிச் சோழ பிரம்மராயர். இன்னமும் வாள் தரித்து சபைக்கு வருகிற அந்தணர். அதிகம் பேசுவதில்லை, ஆனால் அத்தனை அரசியல் விவகாரமும் விரல் நுனியில் நிற்கும்.

"நீங்கள் என் வருகைக்கு எழுந்திருக்க வேண்டாம் பிரம்மராயரே."

கண்கள் மூடி மறுத்து தலையசைத்தார்.

"ஒரு நாள் உமது மகன் ராஜாதிராஜன் அரியணை ஏறி சபைவரினும் நாம் எழுந்து நிற்போம். அரசனை அதிகாரி மதிக்கவில்லையெனில் அதிகாரியை குடிபடை மதிக்காது. வளையாத மூங்கில் வில்லாகாது." வளைந்து லணக்கம் சொன்னார்.

அத்தை இதைக் கேட்டுவிட்டு ராஜேந்திரரின் மூத்த மகனிடம் கேலி செய்தாளாம்.

"வில் எப்போது வளையும்! ராஜாதி ராஜா குறி பார்க்கப் படும் போதுதானே. இனி அந்த அந்தணர் வளைந்து குனிந்தால் கவனமாய் இரு. கறுப்பு அந்தணன் அதிலும்

கத்தி எடுத்த அந்தணனை நம்பலாமா" என்று கேட்டா ளாம்.

ஆனால் அத்தை செய்யும் இடையூறுகளை அவரோ வந்தியத் தேவரோ கண்டு கொள்வதே இல்லை. தன் பிள்ளை ராஜாதிராஜன் அத்தையிடம் நட்புக் கொவ்வ தையும் தடுக்க முடியவில்லை.

தஞ்சையில் பெண்கள் அரசியல் அதிகமாகி விட்டது.

அத்தை சபையில் இல்லாதபோது கடற் கொள்ளைகள் பெருகி வருவது பற்றி பேச்சு வந்தது. கடாரத்து கப் பல்கள் சோழ மரக்கலங்களை வழிமறிக்கின்றன என்று வணிகர்கள், வியாபாரம் செய்யும் செட்டிமார்கள் விண் ணப்பித் திருந்தார்கள்.

பேசிக்கொண்டிருந்தபோது இடி முழக்கம் போல, கட் டியக்காரன். திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் என்று அப்பாவின். ராச ராசரின் மெய்கீர்த்தி முழுவதும் கட்டியமாக சொல்லி, பல போர்களில் வென்று பாண் டியனின் தேஜஸை பிடுங்கியெறிந்தவரான ராசராசரின் தமக்கையார் வந்தியத்தேவரின் மாதேவியார் குந்தவை பிராட்டியார் வருகிறார் என்று கூற

சபை எழுந்து நின்றது. ராஜேந்திர சோழர், பிரம்மராயர், வந்தியத் தேவர் தவிர அனைவரும் எழுந்து வணங்கி னார்கள். அத்தை. புருஷனைப் பார்த்து மெல்லச் சிரித் தாள். பிரம்மராயரை வணங்கினாள். வாழ்த்து சொல் லும் வண்ணமாய் ராஜேந்திரனை நோக்கி கை உயர்த்தி னாள்.

பேச்சு அறுந்து மௌனம் நிலவிற்று.

"என்ன விஷயம் இன்று சபையில்?" அத்தை விசாரித் தாள்.

சபை மௌனமாய் இருந்தது.

“வெறும் பேச்சா?” குந்தவை பிராட்டி தோள் குலுக்கி பேச பலர் முகம் சிறுத்தது.

“கடற்கொள்ளைகள் பற்றி நாகையிலிருந்து புகார் வந்திருக்கிறது.”

“அப்படியா. யார் கொண்டு வந்தது?"

“சதாசிவ மாயிலட்டியார்."

“எங்கே?” அத்தை தேடினாள்.

சதாசிவர் எழுந்திருக்க மெல்ல பின்னால் சாய்ந்து கொண்டு ஏறிட்டு நோக்கினாள்.

“அரண்மனைக்கு வராது நேரே சபைக்கு வந்துவிட்டீர்களா? - என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள் அரண்மனைக்கு?"

சதாசிவர் கை பிசைந்தார்.

“அவர் புகார் கொண்டு வந்திருக்கிறார் அத்தை.' “ராஜேந்திரர் கோபமாய் பேச அத்தை கண்டு கொள்ளவேயில்லை.

“அதாவது கடற்கொள்ளைக்காரர்கள் உங்களை வேட்டி மேல் துண்டோடு, சோழர் சபைக்குத் துரத்தி விட்டார்கள். அப்படித்தானே?"

சபை சிரித்தது. ராஜேந்திரர் ஏறிட்டுப் பார்க்க, அடங்கிற்று.

“என்ன செய்வதாக உத்தேசம்?''

“பேசிக் கொண்டிருக்கிறோம்?"

“பேசிவிட்டு முடிவு சொல்ல இதென்ன திருமணமா, ராஜேந்திரா?"

“இது கடற்போர் குந்தவை. நம்மிடையே மரக்கலங்கள் அதிகமில்லை” வந்தியத்தேவர் மறுமொழி சொன்னார்.

“அதைச் சொல்லுங்கள். ஈழம் முதல் வேங்கி வரை பரவி யிருக்கிற சோழ நாட்டின் கிழக்கும் மேற்கும் காவலற்று இருக்கின்றன. என்று சொல்லுங்கள். படை மொத்தமும் வடபுலம் குவித்து விட்டு கையைப் பிசைகிறோம் என்று சொல்லுங்கள்.”

“தெற்கே பாண்டி நாட்டிலும்...”

“உன் படைகள் ஆட்சி செய்கின்றன என்பது தெரியும், ராஜேந்திரா. ஆனால் தெற்கு என்பது பாண்டிய நாடு மட்டுமல்ல ஈழமும்கூட, ஈழம் போகும் மரக்கலங்கள் மறிக்கப்பட்டால் ஈழத்தில் மறுபடி சிங்களவர் கலவரம் நடக்கும்.”

“அத்தை, அது தான் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறேனே.”

“கடற்போர் பற்றி கரையில் உட்கார்ந்து பேசுவதா? பாண்டியரது மணி முடியும் அரசுச் சின்னங்களும் ஈழத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது, கவர்ந்து விட்டாய். எப்போதும் தாக்கி சூறையாடித் திரும்புகிறீர்களே ஒழிய திடமான ஒரு மாறுதல். தெளிவான ஒரு அரசியல் ஏற்பட கவனம் செலுத்துவதில்லை. கங்கை வரையில் போய் பானையில் தண்ணீர் கொண்டு வருவதற்கு பெயர் போரல்ல.”

“அத்தை...” ராஜேந்திரர் கோபமாய் எழுந்திருக்க சபை மிரண்டது.

அத்தை அசையவில்லை.

“இரண்டாம் முறையாக என்னை என் சபையில் இழித்துப் பேசுகிறீர்கள்.”

“உன் சபையா இது? உயரமான இடத்தில் நீ உட்கார்ந்திருந்தால் உன் சபை என்கிறாயா? பிரம்மராயர் உனக்கு மட்டும் மந்திரியா? என் கணவர் வந்தியத்தேவர் உன்

னால் நியமிக்கப்பட்ட தளபதியா? மும்முடிச் சோழ போசரும் முத்தரையரும் உனக்கு சேவகம் செய்யவே பிறந்திருக்கிறார்களா? இன்றைய உன் பெருமை, உன் தந்தை போட்ட பிச்சை. என் தம்பி ராசராசன் சோழ மண்டலத்துக்கு அளித்த பரிசு. 'ராசராசன் கால்பட்ட இடத்தில் நீ மறுபடி படையெடுத்து நிலை நிறுத்திக் கொண்டாயே தவிர, வேறென்ன சிறப்பு உனக்கு? கங்கை கொண்டவன் என்கிறாயா? முழுக்க முழுக்க அந்தப் பெருமை அரையன் ராசராசனைச் சேரும். அந்த சாத்த மங்கலத்து சோழ தளபதி மட்டும் போனான். வென்று வந்தவனை வரவேற்ற பெருமை மட்டும் உனக்கு."

சபை நடுவே நொந்துபோய் ராஜேந்திரர் அமர அத்தை பேச்சு சுவர் பட்டு எதிரொலித்தது.

"ராஜேந்திரா, வயதாகி விட்டதே தவிர விவேகம். போதவில்லை உனக்கு. சோழப்படை வடபுலம் போனது வீண். இரண்டு வருடங்கள் முழு விரயம். பாதி ஈழம் கைப்பற்றி விட்டு ஈழத்தின் தென் பகுதியில் எதிரிகளை ஒதுக்கிவிட்டு கடற்பகுதிகளை கவனிக்காது கங்கை வரை போய் என்ன பயன்?"

"போரென்று புறப்படுகையில் மறித்து நின்றால், அபசகுனம் என்று பேசாதிருந்தேன். சாளுக்கிய தேசத்தை சரி செய்து விட்டு திரும்புவாய் என்று நினைத்தேன் வங்காளம் வரை படை நடத்திக் கொள்ளை அடித்து ஏதேதோ கொண்டு வந்திருக்கிறாயே தவிர உருப்படியாய் நீ செய்தது என்ன? இந்தச் சபையில் உனக்கு இதை சொல்பவர்கள் யாருமில்லை என்பதால் நான் சொல்கிறேன்."

"தனியாகச் சொல்லியிருக்கலாம்" வந்தியத் தேவர் மனைவியின் பேச்சை ரசிக்காமல் அலுத்துக்கொண்டார்.

“அரண்மனைக்கு ராஜேந்திர தேவர் வந்தால் அல்லவா பேசமுடியும். அருண்மொழி நங்கைக்கும் அம்மங்கைக் கும் அப்பாவின் முகமே மறந்துவிட்டது. சோழ அரசரே நேரில் வந்தாலும் அவன் தைல ஓவியத்தைத்தான் அப்பா என்று அழைப்பார்களோ என்று தோன்றுகிறது."

“குந்தவை பிராட்டியாரே" பிரம்மராயர் மெல்லத் திரும்பி னார்.

“ராஜேந்திர சோழர் புகழ் சோழ குல மன்னர்களின் சரித் திரத்தில் தனி இடம் பெற்ற விஷயம். வில் வளைத்து அம்புவிட இலக்கு தைத்தால் அம்பைக் கொண் டாடுவதில்லை. வில்லுக்கும் மாலை இல்லை. யார் சரம் கொடுத்தார்களோ அவர்களைப் புகழ்வதுதான் இயல்பு. தளபதி அரையன் ராசராசன் அம்பு இந்த சபை வில். வளைத்துச் சரம் தொடுத்தது ராஜேந்திரர். இந்தச் சபை இது அறியும்."

சபைக்கூட்டம் தலையாட்டி விண்ணதிர வாழ்த்திற்று.

“நான் மட்டும் வசைபாடுகிறேனே என்று வேதனைப் படுகிறீரா பிரம்மராயரே. சோழ மண்டலம் பல தலை முறைகளுக்கு வளமான இடமாக இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் பேசுகிறேன். சோழ சரித்திரம் அழியாது இருக்க வேண்டுமே என்கிற கவலையில் பேசுகிறேன். கைப்பற்றிய இடங்களுக்கு காவலாய் நம் படை அமர்த்தி, அங்குள்ள மக்கள் தங்களை சோழ மக் களாய் நினைத்துக் கொள்கிற நிலை வர வேண்டுமே என்று நினைக்கிறேன். மாற்றரசர் பெண்டிரும், பண்டா ரமும், யானையும் கொணர்வது மட்டுமே போரின் சிறப் பல்ல. மக்களின் உயர்வு முக்கியம். அமைதியான வாழ்வு முக்கியம்."

“எங்கே அமைதிக்குப் பங்கம் வந்துவிட்டது குந்தவை?" வந்தியத் தேவர் வினவினார்.

"வணிகப் பெருமக்கள் கையுறை கூட இல்லாமல் அரசரிடம் வந்து கலங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன என்று விண்ணப்பிப்பது தெரியவில்லையா?"

"இது ஒரு சலசலப்பு."

"இது பெரிதாகும். சோழ சாம்ராஜ்யத்தில் பாதுகாப்பான வாழ்க்கை இல்லை என்கிற பேச்சு வரும்." இடுப்பில் கைவைத்து அத்தை பேசினார்.

"அப்பாவுக்கும் கங்கை வரை போகும் ஆசையிருந்தது."

ராஜேந்திரர் கரம் தட்டிப் பேசினார்.

"அதை நான் தடுத்தேன். சோழ நாட்டை பலப்படுத்து. வளம் பெறச் செய் என்று வழி மாற்றினேன். நிலமளந்ததும், சோழ மண்டலம் முழுவதும் ஊடறுத்து கால்வாய் வெட்டியதும், குடவோலைத் தேர்வு முறை பலப்பட்டு கிராம ஆட்சி நடைபெற்றதும் உலகமே வியக்கும் வண்ணம் ராஜ ராஜேஸ்வரம் கட்டியதும் உன் தந்தை. ராசராசன் விவேகன் ராஜேந்திரா." -

"உனக்கு எங்கேனும் ஒரு சிவன் கோயில் கட்ட வேண்டும். அவ்வளவு தானே அத்தை?"

"கொள்ளையடித்தலை நிறுத்து. போர் என்கிற பெயரால், ஊர் எரித்து சூறையாடுவதை நிறுத்து." அரசவை முழுவதும் குந்தவை பிராட்டியார் குரல் எதிரொலித்தது.

"போர் என்பது பூச்செண்டால் அடிப்பதல்ல."

"மாற்றரசர் பெண்டிரும், பண்டாரமும் கொண்டு வருதலா? ஊர்களை எரிப்பதா? சோழ நாட்டில் வளமை இல்லை என்று கங்கை வரை போனாயா?"

"பிராட்டியாரே நீங்கள் எதை குற்றம் சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. கங்கை வரை படையெடுத்தது தவறு என்கிறீர்களா? பண்டாரம் கொணர்ந்

தது மறுப்பா? இல்லை..." அந்தணக் கிழவர் எழுந்து கேட்டார்.

"உங்களுக்குப் புரிந்துவிட்டது பிரம்மராயரே."

"இல்லை அம்மணி. ஒரு சபையில் அரசன் மீது குற்றம் சொல்ல முற்படுகையில் தெளிவும், அமைதியும் முக்கியம். சோழ அரசியலில் குடி மக்களுக்கு மிகுந்த உரிமை உண்டு.அதே சமயம்..."

'அத்துமீறக் கூடாது' வந்தியத் தேவர் வார்த்தையை முடித்தார்.

இரண்டு கிழவர்களும் தனக்கெதிரே திரும்பியது அத்தைக்கு இன்னும் சினமூட்டியது.

"பெண் அதிகம் பேச மாட்டாள், எளிதாய் திசை திருப்பி விடலாம் என்று நினைக்கிறீரா, பிரம்மராயரே?"

"குறை எதுவாயினும் சபை கேட்கும். தெளிவு முக்கியம்."

"தஞ்சை முழுவதும் ஆட்டமும், பாட்டமும், கூத்தும் அதிகரித்து வருகின்றன."

"நல்லது தானே இது. கலைகளின் இருப்பிடம் தஞ்சை என்று பெயர் வந்து விட்டதே. ராசராசரின் பெரு முயற்சியில் வந்த விளைவல்லவா இது."

"ஆடல் மகளிருக்கு ஆண்டுக்கு நூறு கலம் கொடுத்து சிவத்தொண்டு செய்வித்த காரியம் அது. அந்த ஆடல் மகளிருக்கு காவலாகவும், ஊழியம் செய்யவும் இரு நூறு கலம் நெல் தரப்பட்டது."

"உண்மை" பிரம்மராயர் தலையசைத்தார்.

"இங்கோ மாற்றரசர் பெண்டிரை கைது செய்து வந்து வேலைக்காரப் படை வசம் ஒப்புவித்து..." குந்தவை பிராட்டி முகத்தில் வேதனையும் வெட்கமும் கவிழ நிறுத்

தினார். சற்று தலை குனிந்தார். "அவர்களுக்கு, அந்தப் பெண்களுக்கு குழந்தைகளும் பிறந்திருக்கின்றன.'

"அடிமை வியாபாரம் அதிகரித்து விட்டது பிரம்மராயரே. அதுவும் பெண்ணடிமை வியாபாரம். கோவிலுக்கு நெல் குத்த என்று பெண்களை விலைக்கு வாங்கி..."

"கால காலமாய் நடப்பது தானே இது."

"தடுக்கப்பட வேண்டும் பிரம்மராயரே. ஏன் இது அதிகரித்து விட்டது என்று யோசிக்க வேண்டும். இதன் விளைவுகள் என்ன என்பதை பிரம்மராயராவது சிந்திக்க வேண்டும். பெண்களை வேதனைப்படுத்தும் நாடு வளமாக வாழாது ராஜேந்திரா."

"இன்னமும் புரியவில்லை. எங்கு தவறு நடந்தது? என்ன அத்து மீறல்? குறிப்பிட்டு சொன்னால் சரி செய்யலாம்" பிரம்மராயர் கனிவோடு கேட்க,

அத்தை இருக்கை உதைத்து எழுந்தாள்.

"உங்களுக்குப் புரியாது பிரம்மராயரே. முப்புரி நூலுக்கு மேல் உடை வாளை இறுகக் கட்டியிருக்கும் உங்களுக்குப் புரியாது. அர்க்கியம் விடும் கரங்களால் பல பேர் சிரம் கொய்து கொக்கரித்து மும்முடிச் சோழ பிரம்மராயர் என்று மூன்று அரசருக்கு கை கட்டி சேவகம் செய்து வளர்ந்த உங்களுக்குப் புரியாது. ரிக் வேத சாகை சொன்ன வாயால், 'போர் போர்' என்று வெறியேற்றிய புத்திக்கு பெண்களின் வேதனை புரியாது. சோழ தேசப் பெண்களுக்கு என்ன வேதனை என்பது தெரியாது. இந்த சபையை விட்டு இல்லத்திற்குப் போய் உமது மனைவி கோசலையை கேட்டுப்பாரும். உனக்கு ஏதும் வேதனை உண்டா கோசலை 'என்று கேட்டுப் பாரும். எதுவாயினும் மனது விட்டு என்னிடம் சொல் என்று கெஞ்சிப் பாரும்.

"ஒன்று நிச்சயம். இந்தப் போக்கு வளருமானால் சோழ தேசத்தின் வலிவும், பொலிவும் விரைவில் மறையும் என்பது நிச்சயம்."

அத்தை வெளியேறினாள். சபை விழித்தது.

"அரசே" பிரம்மராயர் மெல்ல தலை நிமிர்த்தி கவலையுடன் பார்த்தார்.

"உடனடியாய் நாம் நாகை கிளம்புவோம். நீங்களும் வந்தியத் தேவரும் தளபதி அரையன் ராசராசனும் முன்னே செல்லுங்கள். கடற்கரை பகுதி பலவீனமானதாய் நல்லதல்ல நான் இங்கு ஒரு நாள் தங்கி ராஜாதி ராஜனுக்கு தஞ்சை பாதுகாப்பு பற்றி விளக்கிவிட்டு அவரை இங்கே தலைமைப் பொறுப்பில் அமர்த்தி உங்களிடம் வந்து சேருகிறேன்."

"அத்தை என்ன சொல்கிறார் பிரம்மராயரே? எதைக் குற்றம் என்கிறார்?"

"நான் வந்து சொல்கிறேன். வணிகக் குழுவும் அரசரோடு பயணப்படட்டும்."

"அரண்மனைக்குச் சென்று குந்தவைப் பிராட்டியாரை சினம் தணிவித்துப் பிறகு புறப்படலாமா?" வணிகர் தலைவன் கேட்க ராஜேந்திரர் சீறினார்.

"தேவையில்லை. என் அனுமதியின்றி அரண்மனைக்கு எவரும் போக வேண்டாம். அரண்மனைப் பெண்டிரும் என் அனுமதியின்றி வெளியே போகக்கூடாது."

"ராஜேந்திரா, அமைதியாய் இரு." வந்தியத்தேவர் சைகை செய்தார். எழுந்து வணங்கி நின்றார். ராஜேந்திரர் ஆசனம் நகர்த்தி நிற்க சபை எழுந்து நின்றது. சற்று தளர்ந்த நடையில் மன்னன் வெளியேறுவது குறித்துக் கவலை கொண்டது.

பிற்பகலில் வணிகர் குழு முன்னே செல்ல, ராஜேந்தி ரர் பின் தொடர்ந்தார். தஞ்சை எல்லையில் வேளைக் காரப் படை மன்னரைக் கண்டதும் சூழ்ந்து கொண்டது. இரவு தங்கி விருந்துண்ண வற்புறுத்தியது. மறுபடி போர் உண்டா என்று கேட்டது. எந்தத் திசையில் யுத்தம் என்று வினவியது.

மாலையில் நடந்தது அனைத்தும் ராஜேந்திரர் மறந் தார். மறவர் கூட்டத்துடன் நடந்த பல போர்கள் பற்றி நினைவு கூர்ந்தார். அந்தி சரிய மாட்டு வண்டியில் ஐயா ரப்பன் கோவிலிருந்து தளிச்சேரி பெண்டுகள் எனப் படும் தேவரடியார்கள் வேளம் வந்து இறங்கினார்கள். பலவிதமான கும்மிகள் ஆடினார்கள். ராசராசரைப் பற் றிய நாட்டிய நாடகம் துவங்கிற்று. அவருடைய வெற்றி கள் புகழ்ந்து பாடப்பட்டன. ராஜ ராஜேஸ்வரம் கோவில் கட்டத் திட்டமிடப்பட்டது நாட்டியமாய் ஆட ராஜேந்திரர் மெல்ல எழுந்து காவிரிக்கரைக்குப் போனார்.

மேலே நிலவு, கீழே காவிரி, புரட்டாசி மாதப் புழுக்கம். தென் திசைக் காற்று குறைந்து, வடதிசைக் காற்றுக்கு மாறும் நேரம்.

உள்ளேயும் புழுங்கிற்று.

எவன் மனதிற்குள் சஞ்சலமின்றி அமைதியோடு இருக் கிறானோ அவனே வீரன் என்று நாடகத்தில் ஒரு வரி வந்தது'

இது உண்மையெனில், நான் நினைத்துக் கொண்டிருக் கிற வீரம் பொய். மிகப்பெரிய பொய்.

சிறிதளவு கூட மனதில் அமைதியில்லை.என்று பட்டத் திற்கு வந்தேனோ அன்றிலிருந்து நெல் முனையளவு கூட நிம்மதியில்லை. இந்த நிம்மதியின்மைக்குக் கார ணம் நானா? பிறரா?

கேள்வி வந்தது.

கேள்விக்குப் பதில் போல அருண் மொழிப் பட்டன் மும் முடிச் சோழ பிரம்மராயன் மகன்-உத்தம சோழ பிரம்மரா யன் என்ற பட்டம் பெற்றவன், ராஜேந்திரரின் வயது ஒத்த அந்தண வீரன் அருகே வந்தான்.

“என்ன கவலை ராஜேந்திரா?” உரிமையுடன் தோளில் கை வைத்தான்.

தோளில் விழுந்த அத்த அழுத்தமான பிடி ராஜேந்திர ருக்கு அந்நேரம் தேவைப்பட்டது...

# 2

அப்பாவின் காலத்திலிருந்தே அருண் மொழிப் பட்டன் தான் ராஜேந்திரனுக்கு அமைச்சன் என்பது முடிவாகி விட்டது. ஒரே வயது, ஒத்த நண்பர்கள் ஒன் றாய் உண்டு தூங்கி, சண்டை பயிற்சி செய்து, அரசியல் கற்று வளர்ந்தார்கள்.

ஒற்றை வெள்ளரிப்பிஞ்சு ஒடித்து, இரண்டாக்கித் தின் பார்கள். ராஜேந்திரன் தோளில் ஏறி அருண் மொழிப்பட் டன் காவிரியில் நீர் விளையாட்டு ஆடியிருக்கிறான்.

ஆனால் இத்தனை சிநேகமும், அரண் மனையில் அல் லது அரசவையில், பெட்டிக்குள் பம்பாய் ஒளிந்து விடும். தந்தையும், மன்னரும் இருக்கும் சபையில் அருண் மொழி கேள்வி கேட்டாலொழிய பேசமாட்டான். அரச ருக்கு தான் பிராண சிநேகிதம் என்று காட்டிக் கொள்ள மாட்டான்.

குதிரையில் வரும்போது கூட இணையாக வராது நாலு குதிரை தொலைவில் தான் வருவான். மெய்க் காவலன் படையைச் சூழ்ந்து கொள்ள விட்டு அதற்குப் பின்னே கண் பார்க்கும் தொலைவில் வருவான். சதா நேரமும் ராஜேந்திரரையே கவனித்துக் கொண்டிருப்பான்.

வெளி ஊரில் விருந்து நடக்க உணவு வகைகளை மடக்கி, முதலில் தான் உண்டு விட்டு, ராஜேந்திரருக்கு இவைகள் மட்டும் உண்ண அனுப்பு என்று கட்டளையிடுவான். பணிப்பெண் யார், என்ன பெயர் என்று விசாரிப்பான். சயன அறைக்கு வந்து சுற்றிப் பார்த்து காவல் மாற்றுவான். அபாயமான இடம் என்று தெரிந்தால் தானே வாசலில் சால்வை விரித்து அமர்ந்திருப்பான்.

மாமன்னர் ராசராசர் மரணப் படுக்கையில் ராஜேந்திரன் கைப்பற்றி கிடந்த போது, அருண் மொழிப்பட்டன் எங்கே என்று கேட்டு, இவன் வந்ததும் ஏறிட்டுப் பார்த்து 'அருண் மொழி எனக்கொரு..." என்று அவர் சிரமப்பட்டு பேசத் துவங்க, அருண் மொழிப்பட்டன் வாள் உருவி ராஜேந்திரனுக்குப் பின்னால் விரைப்பாக, வெகு நேரம் ராசராசன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். தன் இடது தோள் கேயூரம் கழற்றி அதை அருண் மொழிப் பட்டனுக்கும், வலது தோள் கேயூரம் கழற்றி ராஜேந்திரனுக்கும் தந்தார்.

சோழ மன்னரின் மிகப் பெரிய மரியாதை இது. தன் புதல்வனுக்கு இணையாய், அவனுக்கு துணையாய் வாழ்நாள் முழுவதும் இரு என்கிற கட்டளை இது.

எதற்குமே கலங்காத அருண்மொழிப்பட்டன் கைகள் நடுங்க, கேயூரம் வாங்கி கண்களில் ஒற்றிக் கொண்டு அழுதான். மன்னரின் உயிர் மெல்ல அடங்குகையில் காதில் கர்ண மந்திரம் சொன்னான். அவன் வலது கை மன்னரின் நாடியைப் பார்த்துக் கொண்டிருந்தது. இடது

கை அவரின் தலையை சற்று உயர்த்திப் பிடித்திருந்தது. மன்னரின் வலக் காதில் கர்ணமந்திரம் சொல்லியபடி இருக்க, இடது காதில் சர்வசிவ பண்டிதரால் பஞ்சாட்ச ரம் ஓதப்பட்டது.

ராசராசர் தலை சரிய அத்தை குந்தவை, 'என்ன என்ன என்று பதறினாள்.

மந்திரம் ஓதுதலை நாடி அடங்கும் வரை நிறுத்த வில்லை. கடைசித் துடிப்பு அடங்கியதும் எழுந்து ராஜேந்திரரைப் பார்த்தான்.

அத்தை 'ஐயோ' என்று கூவினாள். என்ன சொல் என்று கட்டளையிட்டாள்.

“மன்னரானீர் ராஜேந்திரரே” என்று பதிலிறுத்து விட்டு, ராசராசரின் கைகளை அவர் மடி மீது படிமமாய் வைத்து விட்டு வெளியேறினான்.

‘மன்னரானீர் ராஜேந்திரரே' என்கிற சொல், அருண் மொழிப்பட்டனின் அந்தக்குரல் இப்போதும் அவ்வப் போது உள்ளே கேட்கும்.

இது இதம். இவன் இதம் சொல்பவன். பேச்சால் மட் டுமில்லை, செய்கையால், பார்வையால் இதம் சொல் பவன் இங்கே இவன் இந்த அரையிருட்டில் தோளில் அழுந்தக் கைவைத்ததும் கூட இதம் கருதினான்

“என்ன கவலை ராஜேந்திரா' என்று ஒருமையில் அழைத்ததும் இதம் தான். ராசராசர் உயிரோடு இருக் கும் போது ராஜேந்திரர் சாளுக்கிய தேசம் நோக்கி முதன் முறையாய் படையெடுத்துப் போன போதும், அறுக்க முடியாத காடுகளை அறுத்து, தகர்க்க முடியாத கோட் டைகளைத் தகர்த்து வெற்றிவாகை சூடிய போதும், அருண்மொழியோடு தான் ராஜேந்திரர் கைகோர்த்து அலைந்தார்.

அப்போது இளவரசு பட்டம்கூட இல்லை. வெறும் அரசகுமாரன் என்கிற யோக்கியதை மட்டும் தான். இன்று மன்னராகி மணிமுடி சூடிய பிறகும் இந்த நட்பு மாறவில்லை.

"வானம் பார்த்து மெல்ல சிரித்தாயே என்ன தெரிகிறது?" அருண்மொழிப்பட்டன் வினவினான். -

"அந்தப் பிறை நிலவு குதிரையின் குளம்படி. மற்றொரு குளம்படி நாமிருக்கும் பூமி. மீதி இரண்டு எங்கே?'

"அடேயப்பா... எவ்வளவு பெரிய குதிரை. இதை யோசிக்கத்தானா காவிரிக் கரைக்கு வந்தது?"

"இல்லை. நாட்டிய நாடகத்தில் மனம் செல்லவில்லை."

"அதிலும் குறிப்பாய் உன் தந்தை கோயில் கட்டிய படலம் ரசிக்க முடியவில்லை."

"அப்படியில்லை அருண்மொழி..." பிரகதீஸ்வரர் கோவிலை எவர் வெறுக்க முடியும். செயற்கரிய செயல் அது" - ராஜேந்திரர் தென் திசை நோக்கி கும்பிட்டார்.

"நம்மால் செய்ய முடியுமோ என்கிற பயமும் வருகிறது இல்லையா?" அருண்மொழிப்பட்டன் வினவினான்.

"என் வேலை இதுவல்ல."

"ஏன்?"

"அப்பாவுக்குத் தோன்றியதெல்லாம் எனக்கு தோன்ற வேண்டுமா?"

"அப்போது கங்கை கொண்டது அப்பாவின் விருப்பம் நிறைவேற்றுவதாக இல்லையா?"

"இல்லை. எனக்குத் தஞ்சையில் தங்கப் பிடிக்கவில்லை.போர் என்கிற பெயரில் வடபுலம் சுற்றினேன்."

"பழையாறையில் தங்கலா மே."

“அதுவும் சரியான இடமல்ல.”

“என்ன வேதனை அந்த இடங்களில்.'

“எனக்கு முன் பல சோழ மன்னர்கள் கீர்த்தியோடு இருந்திருக்கிறார்கள் அருண்மொழி, அத்தை சொன்னது போல் என் அரசு, என் அவை, என் மாளிகை. என் மணி முடி எல்லாம் பலபேர் இட்ட பிச்சை. நான் உருவாக்கியது ஏதுமில்லை.”

“இதில் பொரும என்ன இருக்கிறது ராஜேந்திரா?”

“நீ இந்த வேதனையை அனுபவித்ததில்லையா?"

“இல்லையே...”

“உனக்குத் தெரியவில்லை அருண்மொழி, உன் தந்தை மும்முடிச் சோழ பிரம்மராயர் அனுமதியின்றி எந்த முடிவும் இன்னமும் நீ செய்ய முடியாது. என் வயதுதான் உனக்கும் உன் திருமணம்கூட உன் இஷ்டத்திற்கு நடந்திருக்காது உன் பயணங்கள் உன் விருப்பம் போல் நடை பெறாது. புகழ் உச்சிக்குப் போனவர்களின் பிள்ளைகளுக்கு இடர் பாடுகள் அதிகம். என்ன செய்தாலும் தந்தை போல் மகன் இல்லை என்பார்கள்.

“நான் உன் கூற்றை ஏற்கவில்லை ராஜேந்தியா. என் திருமணம் செம்மையாய் நடந்த விஷயம். என் தந்தையின் கூத்தி சரபன் தொண்டவையின் உதவியது. இன்று வரை தெரியாது. நான் தான் குடந்தைக்குப் பெண் பார்க்கச் சென்று, பிடித்திருக்கிறது என்று சொல்லி, நேரே சரபன் தொண்டவையிடம் விஷயம் சொல்லி, இருவரும் ஒரு வருடம் பழகினார்கள், பிறகு தான் திருமணம் நடந்தது.”

“உன் தாய்க்கு சரபன் தொண்டவை பற்றி..."

“தெரியும்...”

“நீ போய் வருவது...?”

“அப்பாவே அழைத்துப் போய் அறிமுகப்படுத்தினார்.”

“தொண்டவை கெட்டிக்காரியா?”

“தமிழில், வடமொழியில் நல்ல புலமை. தர்க்க சாஸ்திரம் கற்றவர். ஓவியம் எழுதுகிறார். யாழ் வாசிக்கிறார். என் அப்பாவின் மீது மிகுந்த பிரேமை. என் மீது அளவில்லாத வாஞ்சை. இன்று என் மனைவி சீதை என் வீட்டு வாயிலில் வரையும் எல்லா கோலமும் அவர் கற்றுக் கொடுத்தது.”

“அருண்மொழி. தொண்டவையை. அரண்மனைக்கு அழைத்து வந்து...”

“வேண்டாம். குந்தவை பிராட்டியார் ஏற்க மாட்டார்கள் தேவையின்றி அவமானப்படுத்துவார்கள்.”

“உண்மை...” ராஜேந்திரர் நெட்டுயிர்த்தார். காவிரிக் கரை மீது குத்திட்டு உட்கார்ந்தார். தொலைவில் வாத்தியங்கள் துரிககதியில் இயங்கி நாடகம் முடியும் ஓசை கேட்டது.

“ச்சே” என்று தலையசைத்தார்.

“என்ன...ச்சே?”

“ஒரு க்ஷணம் உன் மீது மிகப் பெரிய பொறாமை வந்து விட்டது. அருண் மொழி, நான் நீயாய் இருக்கக் கூடாதா என்று தோன்றி விட்டது.”

மறு முறையும் அருண்மொழி ராஜேந்திரர் தோளில் கை வைத்தான்.

“வேண்டுமெனில், வீரமாதேவி மட்டும் அரண்மனைக்கு வெளியே வரவழைத்து...”

“வேண்டாம் அருண்மொழி. தஞ்சை அரண்மனை அரசியலில் உன் தந்தையின் தனிப்பட்ட வாழ்க்கையை சிதறடிக்க வேண்டாம்.”

“கிளம்பலாமா நாகை நோக்கி என்று பார், வணிகர்கள் இந்நேரம் வெகு தூரம் போயிருப்பார்கள்.”

“அது குறித்துப் பேசத்தான் வந்தேன், கடற்படை. யோடு சம்பந்தம் கொண்ட வீரர்கள் ஏழாயிரம் தேர்வுசெய்ய சொல்லி மூன்று குழுக்களாய் நாகை அனுப்பச் சொல்லிவிட்டேன். தளபதி போசன் தேர்வு செய்கிறார். உங்களுடன் வந்தியத்தேவர் வருகிறார். என் தந்தை அநேகமாய் பாதி வழியில் அல்லது பயணத்தின் இறுதியில் சேர்ந்து கொள்வார்.”

“நீ?”

“நான் குடந்தை வரை போகலாம் என்று... சீதை அங்கிருக்கிறாள். விடை பெற்று வரலாம் என்று... சீதைக்கு இது பேறுகாலம்.”

“நல்லது. நீ புறப்படு. சீதைக்கு என் வாழ்த்துச்சொல். நல்லபடி மகவு ஈன்றால் ஐயாரப்பருக்கு நான் முத்து வடம் சமர்ப்பிக்கிறேன். சோழ சக்கரவர்த்தி ராஜேந்திரர் அன்பாய், நூறு கழஞ்சு பொன் தருகிறேன். வட்டி சங்கும் அரைஞாணும், நகைகளும் செய்து கொள்ளட்டும்.”

"மன்னரே” அருண்மொழி “தாங்காத அன்பு தாங்களது" குழறினான்.

“இல்லை அருண்மொழி. நான் உன் ராஜேந்திரன், பிள்ளைக்கால நண்பன்.”

“இந்த அன்புக்கு என் உடலும் உயிரும் அர்ப்பணம்”

“இதற்கு ஆயிரக் கணக்கில் ஆள் இருக்கிறார்கள். அருண்மொழி. நான் போருக்கு புறப்பட தன் சிரம றுத்து பலி தருபவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த

ராஜேந்திரனை புரிந்து கொண்டு அன்பு செய்யத்தான் ஆளில்லை அருண்மொழி தவிர."

ராஜேந்திரர் அவனை அணைத்துக் கொண்டு நாடக இடம் நோக்கி நடக்க, வட்டமாய் ஆங்காங்கே நின்ற மெய்க் காவலர் சரசரவென்று விலகிக் கொண்டார்கள்.

ஒரு மெய்க்கா வலன் அருண்மொழி அருகே வர, அவன் காதோடு அருண்மொழி சில கட்டளைகளைத் தந்தான். சோலைக்கு அப்பால் வைத்திருந்த குதிரை மீது ஏறி னான்.

குதிரை குடந்தை நோக்கிப் போகவில்லை. ஆற்றில் இறங்கி தஞ்சை நோக்கிப் போயிற்து. ஏதேனும் பொய் சொல்லி சக்கரவர்த்தியை நாகைக்கு அனுப்பிவிட்டு உடனே தஞ்சைக்கு வரும்படி பிரம்மராயரின் கட்டளை. அருண் மொழிப்பட்டன் இருளைக் கிழித்துக் கொண்டு தெற்கே போனான்.

# 3

மூன்று சோழ அரசர்களுக்கு முதல் அமைச்சராய் சேனாதிபதியாய் இருந்த கிருஷ்ணன் இராமன் என்கிற மும்முடிச் சோழ பிரம்மராயர், அரண்மனை முற்றத்தில் கருங்கல் பலகையில் உட்கார்ந்திருந்தார்.

குந்தவைப் பிராட்டிக்குச் சொல்லி அனுப்பிவிட்டு காத் திருந்தார். தேவையில்லாமல் அரண்மனைக்குள் அதி காரிகள் யாரும் போவதில்லை. யாரேனும் உடல் நலம் இல்லா திருந்தால் விசாரிக்க. அல்லது கட்டுக்காவல் சோதிக்க வருவதுண்டு. எந்த நேரமும் இப்படிக் காத்து உட்கார்ந்ததில்லை.

அரண்மனைக் கதவு திறந்தது. அதிகாரிச்சி முத்தான பொன்னங்கை வெளியே வந்தாள். நல்ல உயரம். அள்ளி முடித்தகொண்டை வெற்றிலைச் சிவந்த வாய். இடுப்பில் குத்துவாள் உறையுடன் தொங்கியது.

உலகின் வேறு எந்த தேசத்திலும் உடைவாள் தரித்த அதிகாரிச்சியைக் கண்டதில்லை. பாண்டியரோ சேரரோ சாளுக்கிய தேசமோ பெண்களை அதிகாரி யாக நியமித்ததில்லை. இடுப்பில் குத்துவாளும், நடை யில் அலட்சியமும் உள்ள பெண்கள் சோழ தேசத்தில் தான் உண்டு.

இந்த அதிகாரிச்சிகள் மன்னன் தவிர வேறு யாரை வேண்டுமானாலும் அரண்மனை வாசலில் நிறுத்த அதி காரம்.உள்ளவர்கள். அரண்மனைச் சேவகம் தவிர முத் தான பொன்னங்கைக்கு ஐயாரப்பன் கோவிலில் அதி காரம் வேறு. இருந்தது. சோழ அரசிகள் அளித்த நிவந் தங்கள் சரிவர நடத்தப்படுகிறதா என்று மேற்பார்வையி டும் பொறுப்பு இருந்தது.

முத்தான பொன்னங்கை வணங்கினாள்.

“ஐயன் சற்றுநேரம் காத்திருக்க வேண்டும். பிராட்டியார் இப்போது வந்து விடுவார்கள். ஐயன் தாகத்துக்கு ஏதா வது தரட்டுமா?

பிரம்மராயர் தலையசைத்து மறுத்தார். காத்திருந்தார்,

சோழ தேசத்தில் பெண்கள் நிலை உயர்ந்து விட்டது. பயம் வெகுவாய் குறைந்து விட்டது. இதற்குச் சோழ அரண்மனைப் பெண்டிர் காரணம். அரசியல், கலை. மதம் எல்லாவற்றிலும் அவர்கள் செல்வாக்கு இருப்பது காரணம். குந்தவை போன்ற புத்திசாலிப் பெண்கள் கார ணம்.

மாமன்னர் ராசராசரை ஆட்டி வைத்த பெண் குந்தவை. தமக்கையின் அனுமதியின்றி எதுவும் செய்த தில்லை. ராசராசர். அதே அதிகாரம், ஏன் அதை விட கூடுதல் அதிகாரம் ராஜேந்திரரிடம் காட்டப்படுகிறது. ராஜேந்திர ருக்குப் பிடிக்கவில்லை. இது தொடருமானால் அரண்ம னையில் குழப்பம் நிச்சயம். அரண்மனைக் குழப்பம் அர சவைக்கு வரவும், அதிகாரிகளிடம் பரவவும் நேரமாகாது.

ஒன்று. பெண்ணை தெய்வமென ஏற்றுக் கொள்ள வேண்டும். அல்லது புறம் தள்ளி வைத்தல் வேண்டும். ராஜேந்திரரால் இரண்டுமே செய்ய முடியவில்லை.

வணக்கம், பிரம்மராயரே. இன்று சங்கடஹர சதுர்த்தி பூஜை முடித்து விட்டு வந்தேன். தாமதமாகி விட்டது. மன்னிக்க வேண்டும். நான் இப்படி அமரலாமா?"

கற்பலகையின் மறு ஓரம் சுட்டிக் காட்டினார்.

"அமருங்கள் பிராட்டியாரே."

"பிராட்டியாரேவா? குந்தவை என்று அழையுங்கள் போதும். நான் உங்கள் மடியில் அமர்ந்து பிரபந்தம் கற்ற வள்."

"இருக்கட்டும் அம்மா."

"அம்மா வா, குந்தவை என்று அழைக்கமாட்டீர்களா?" மென்மையான குரலில் கேட்டாள்.

பிரம்மராயர் சிரித்துக் கொண்டார். இந்த மென்மை அர சவையில் எங்கே போயிற்று?

"அழைத்தீர்களாமே தாயே."

"ஆம். என் மனதில் ஏக சங்கடங்கள்."

"என்னிடம் சொல்லுங்கள்."

"உங்களைப் பற்றியும் ஒரு சங்கடம் உண்டு அதில்."

“என்ன சங்கடம் அம்மா?”

“உங்கள் மனைவி கோசலையைச் சந்தித்தேன்.”

“ம்ம்.”

“சரபன் தொண்டவையிடம் உங்கள் மருமகளை அறிமுகப்படுத்தினீர்களாம். சரபையும் சீதையும் நல்ல ஸ்நேகமா.”

“அம்மா?”

“அது என் சொந்த விஷயம். உனக்கு எதற்கு என்கிறீர்களா? குடி மக்கள் குறையை அரச குடும்பம் காது கொடுத்து கேட்க வேண்டும். முடிந்தவரை உதவிகள் செய்ய வேண்டும். இது பற்றி உங்களிடம் பேசுவதாய் உங்கள் மனைவி கோசலைக்கு வாக்குக் கொடுத்து விட்டு வந்தேன்."

“அம்மா, கோசலை குழந்தை. வயதாகி விட்டதே தவிர...”

“இப்படிச் சொல்லியே பெண்களைப் புறம் தள்ளப் பார்க்கிறீர்கள்.”

“கோசலையை எந்தப் புறமும் தள்ளி விடவில்லை, என் மனைவியாய், மதிப்பாய்..."

“அதெல்லாம் சரி. ஆனால் உங்கள் மருமகளை, உயர் குலத்து அந்தணப் பெண்ணை தளிச்சேரி பெண், தேவரடி யார், நக்கன் சரபன் தொண்டவையிடம் அறிமுகப் படுத்தி பழகவிட்டு... நல்லதா இது? ஆடலும் பாடலும் கற்ற தளிச்சேரி பெண்டிரிடம் அந்தணப் பெண்ணுக்கு என்ன வேலை? அதுவும் சரபை உங்களுடைய...” குந்தவை பேச்சு நிறுத்தினாள்.

“இது விசாரிக்கத்தானா?”

“இல்லை, அரசியல் பேசவும் அழைத்தேன்...”

“பேசுங்கள்.”

“நான் கேட்டதற்கு என்ன பதில்?”

“இது கட்டளையா அம்மா”

குந்தவை யோசித்தாள். “இல்லை பிரம்மராயரே. வேண்டுகோள். கோசலைக்கென்று சில நியதிகள் உண்டு. அவர் தனது மருமகள் எவ்விதம் இருக்க வேண்டும் என்கிற கோட்பாடு உண்டு. ஏன் இப்படி?”

“சரபன் தொண்டவை தேவரடியார்தான். என்... விருப்பத்திற்குரிய கிழத்திதான். ஆயினும் விவேகம் உள்ளவள். சரபையிடம் என் மருமகளை நான் அழைத்து போக வில்லை. என் மகன் அழைத்துப் போனான். நான் தடுக்கவில்லை,சில பதிகங்களும், சில கோலங்களும் அவளிடம் என் மருமகள் சீதை கற்றுக் கொண்டாள். இது என் மகனின் விருப்பம்.”

“இது எப்படி...”

“என் மகனுக்கு சரபையிடம் மிகுந்த மரியாதை. அவளையும் அம்மா என்று அழைக்கிறான். அது ஒரு நல்ல உறவு தாயே.”

“இதில் கோசலையை புறக்கணிப்பானேன்.”

“புறக்கணிக்கவில்லை. கோசலை தேவையில்லாது ஆச்சாரம் பார்க்கிறாள்... நானும் என் மகனும் மனிதர்களிடம் நல்லது கெட்டது மட்டுமே கவனிக்கிறோம்.”

“ஒரு வேளை சபை போல இன்னொரு தளிச்சேரி பெண் உமது மகனுக்கு கிடைக்க, சீதை உம்மிடம் வந்து அழுதால் என்ன செய்வீர் பிரம்மராயரே...”

“சீதை கெட்டிக்காரப் பெண்.”

“அனுசரித்துப் போய் விடுவாள் என்று நம்புகிறீரா?”

“இல்லையம்மா. என் மகனை எப்படி வளைத்துப் போடுவதென்று அவளுக்குத் தெரியும்.”

“அடேயப்பா. அதற்குத்தான் சரபையிடம் பயிற்சி எடுத்தாளோ."

“ஆம். நல்ல மனைவியாய் இருக்க சில பயிற்சிகள் தேவைப்படுகிறது. தேவையற்ற நாணமும், மௌடீகமும்... குடும்பத்தில் விரிசல் தரும்."

“அடடே. பிரம்மராயரே, நல்ல புருஷனாய் இருக்க எவரிடம் பயிற்சிக்கு ஒரு ஆணை அனுப்புவது?”

“ஏன் உங்கள் கணவர் வந்தியத் தேவரிடம் அனுப்பலாமே.”

“அது லட்சத்தில் ஒரு பிரகிருதி. மேலும்..."

“மேலும் உங்களைப் போன்ற மனைவி கிடைத்த அதிர்ஷ்டசாலி. என் மகன், வந்தியத் தேவரைப்போல் இருக்க வேண்டும் என்று விரும்பினேன். என் மருமகளை நல்ல பெண் மணியிடம் பழக அனுமதித்தேன்.”

“குடும்பத்தில் உள்ள அக்கறை அரசியலில் இப்போது இல்லையோ?”

“ஏன் இல்லை?"

“ராஜேந்திரனை நல்லவனாய் வளர்க்க விருப்பம் உண்டா?”

“சோழ மன்னர் உத்தமமானவர்."

“அதுதான் வயிறுமுட்ட குடித்துவிட்டு கூத்துபார்த்துக் கொண்டிருக்கிறானோ... ஒவ்வொரு இரவும்.”

“க்ஷத்திரியன் மது அருந்துவது தவறல்ல."

“அது போர்க் காலங்களில்.” குந்தவைப் பிராட்டி கூச்சலிட்டார்.

"உங்கள் கோபம் என்னவென்று சொல்லுங்கள்."

“ராஜேந்திரன் அரண்மனைப் பக்கம் வருவதேயில்லை. அவன் பெண்டிரும், குழந்தைகளும் படும் வேதனைக்கு அளவேயில்லை.”

“நான் அவரிடம் சொல்கிறேன்.”

“சொல்ல எனக்குத் தெரியாதா?”

“என்ன செய்ய வேண்டும் அம்மா?”

“யோசியுங்கள் பிரம்மராயரே. பிரச்னையைச் சொன்ன பிறகு என்ன செங்ய வேண்டும் என்று ஒரு முதன் மந்திரி கேட்பதா?"

“நான் அரசியலில் மட்டும் மந்திரி. போர்க்காலத்து சேனாதிபதி. இது வீட்டு விவகாரம்.”

“இதற்கு வேறு ஆள் போட்டுக் கொள்ளலாமா?"

“உங்கள் விருப்பம்.”

“மன்னரோடு போன உங்கள் மகனை, அதற்காகவே அழைத்து வரச் சொல்லியிருக்கிறேன். ஆட்சேபணை இல்லையே.”

“அம்மா, அவன் குழந்தை."

“ஆ... ஆ.... தசையாடுகிறது.”

“இல்லையம்மா. அரசியலில் தெளிவு இல்லாதவன் அவன். வீட்டு விவகாரங்களில் மன்னருக்கு என்ன செய்து விட முடியும்?”

“குட்டி பதினாறு அடி பாயும்.”

“உண்மை. கங்கைக் கரையில் அவன் யோசனைப்படி தான் யானைப் பாலம் கட்டப்பட்டது. பல வெற்றிகளுக்கு என் மகன் காரணம். உத்தம சோழ பிரம்மராயன் என்று என் கண் முன்னே என் பிள்ளை பட்டம் பெற்றது எனக் குப் பெருமை... ஆனால்...”

“என்ன ஆனால்?”

“இம்மாதிரி கணவன் மனைவி விஷயங்களில் அனுபவம் வாய்ந்தவனல்ல.” -

“அவன் திருமணமானவன் தானே. சீதை உண்டாயிருக் கிறாளாமே. மன்னவருக்கு உதவ இதை விட என்ன தகுதி வேண்டும். தன் மனைவியை ஒரு தேவரடியாரிடம் அனுப்பி ஓவியமும், பாடல்களும் கற்றுத் தெரிந்து வர அனுப்பிய பிள்ளை எப்படிச் சாதாரண பிள்ளையாகும்.”

“எதைக்குறித்து பேசுகிறீர்கள் என்று புரியவில்லை.”

“பிரம்மராயருக்கு வயதாகி விட்டது.”

“உங்களுக்கும் கூட தாயே.”

“ஆம். எனக்கு வயதாகி விட்டது ராயரே. என்று என் தம்பி இறந்தானோ, என்று மாமன்னன் ராசராசன் உயிர் துறந்தானோ அன்றே மடிந்து போயிருக்க வேண்டிய வள். ராஜேந்திரனை நினைத்து வாழ்ந்து, கொண்டிருக் கிறேன். மரணம் என்னை மெல்ல மெல்ல நெருங்குகி றது பிரம்மராயரே.”

“அம்மா தீர்க்க சுமங்கலியாய் நீடுழி...”

“போதும்” குந்தவை கை உயர்த்தி நிறுத்தினாள். “நான் வாழ்ந்தவரை போதும். பிறரை வாழ வைக்க சில செய்ய வேண்டும்."

பிரம்மராயர் மௌனமாய் இருந்தார்.

“ராஜேந்திரனின் மனைவிகளுக்கு அறிவு போத வில்லை. செல்லமாய் வளர்ந்த அரசகுமாரிகள். சாதுர் யம் சுத்தமாய் இல்லை. நாகைக்கு கடற்போர் என்று கிளம்பியவன் கட்டிய பெண்களிடம் ஒரு வார்த்தைகூட பேசாது போகிறான்,”

“அவருக்குச் சில வேதனைகள் இருக்கின்றன தாயே.”

“தெரியும். அதில் நான் ஒன்று.”

“நானும் ஒன்று.”

“ஆம். வயதானவர்களை அவனுக்குப் பிடிக்கவில்லை.”

“ஒரே வீட்டில் பத்துப் பதினைந்து வயதான கிழங்கள் இருப்பது வாலிபர்களுக்குச் சிரமம் தான்.”

"சரி, அதற்காக நானும் நீங்களும் பிராணஹத்தியா செய்து கொள்ள முடியும்?"

“விலகி நிற்கலாம்.”

“விலக விட்டால் தானே.'அத்தை நீங்கள் சொல்லுங் கள். அவரை வரச்சொல்லுங்கள்', என்று ஐந்து மனைவி களும் அழுகிற போது..."

“கோபம் வருகிறது.”

“ஆம், பிரம்மராயரே.”

“கோபத்தைவிட கேடான விஷயம் எதுவுமில்லை.”

“தெரியும்.”

“நாம் கோபப்பட ராஜேந்திரர் ஆங்காரமடைகிறார். அரண்மனை விட்டு வெகு தொலைவில் போக ஆசைப் படுகிறார். கங்கைக்குப் போனதுகூட...”

“இப்படி ஒரு ஆங்காரம்தானா?”

“ஆம் தாயே.”

“சரி. அவன் தஞ்சையிலேயே மகிழ்வோடு இருக்க வழி யென்ன?”

“நீங்கள் சொல்லுங்கள்."

“சரபன் தொண்டவையிடம் ராஜேந்திரனின் மனைவி யரைப் பழக விட்டு...

“வேண்டாம் அம்மா.”

"ஏன்?"

"சரபை க்ஷத்திரியப் பெண்களின் வேகத்தை தாங்கமாட்டாள். கோசலைப் பேச்சுக்கே வருத்தப்படுகிற பெண் அவள்."

"நான் கட்டளையிட்டு அனுப்புகிறேன்."

"கட்டளையில் அன்பும் மதிப்பும் வராது.'

"பிறகு?"

"எனக்கொன்று தோன்றுகிறது."

"சொல்லுங்கள்,"

"கோபப்படக் கூடாது."

"கோபமூட்டும் விஷயமா."

"ஆம்."

"சொல்லுங்கள்."

"சற்று சங்கடமான விஷயம்."

"புத்தியும் சூட்சமமும், கலைத்திறனும் உள்ள... தளிச்சேரி பெண்டிர்களை அரண்மனைக்கு வரவழைத்து..."

"இல்லை தாயே..."

"பிறகு?"

"ஒரே ஒரு தளிச்சேரிப் பெண்ணிடம் ராஜேந்திரனை அனுப்பு..."

குந்தவை கண்களை மூடிக் கொண்டாள்.

"வேதனைப்படுத்தி விட்டதா ஏன் பேச்சு?"

"இல்லை ராயரே."

"உண்மையாகவா?"

"என் எண்ணமும் அதுவே."

“சிறுவீர்கள் என்று பயந்தேன்.”

“சிற்றம் வருகிறது உண்மைதான். ஆயினும் வேறு வழி யில்லை. பிரம்மராயரே.”

“அம்மா.”

“நக்கன் பரவை என்று ஒரு தளிச்சேரிப் பெண். திருவா ரூர்க்காரி, நேற்று தஞ்சை ராஜராஜேஸ்வரத்தில் சந்தித் தேன்.”

“சொல்லுங்கள்.”

“அவளிடம் பிரச்சினைகளைச் சொன்னேன்.”

"உடனே வா?”

“இல்லை. பல நாட்கள் அவளிடம் பேசிய பிறகு அவள் பௌத்த நூல்களில் நல்லவை அநேகம் இருக்கிறது என்கிறாள். அவை எனக்கும் பிடித்திருந்தன."

“பௌத்தமா?”

“ஆம், சகல உயிர்களையும் மதித்தல், புலால் உண்ணா திருத்தல், அன்பே முதல் செயலாய் வாழ்தல்... அவள் கெட்டிக்காரி, நிறைய பேசினாள்."

“பிறகு...?”

“தஞ்சையில் மாற்றரசர் பெண்கள் படும் வேதனைக ளைச் சொன்னாள். அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட வேண்டும் என்றாள்?”

“பிறகு?”

“எனக்குச் சொன்னவைகளை ராஜேந்திரனுக்கு கற்றுக் கொடுப்பாயா என்று கேட்டேன். அதற்கு அருமையான பதில் சொன்னாள்.

“என்ன பதில்?"

“தான் என்ற அகம்பாவம் அற்றவர் கற்றல் எளிது என் றாள்.”

“புரிகிறதம்மா... மன்னராய் ராஜேந்திரர் பேசுவதை விட அவளிடம் சாமான்யனாய் போக, புரியவைக்க முடியும் என்கிறாளா?'

"ஆம், ராயரே. நானும் நீங்களும் அவனால் மதிக்கப் படு கிறோமே ஒழிய செவிமடுக்கப்படுவதில்லை. எனவே தான்...”

“என் மகன் அருண்மொழியை இச்செயலுக்குத் தேர்ந் தெடுத்தீர்களா?”

“ஆம்.”

“முக்கோக்கிழானடிகளும், பஞ்சவன் மாதேவியும் சொல்லித்தர இயலாத..."

“காதல் பாடத்தை ராஜேந்திரன் கற்கப் போகிறான்." குந் தவை தொலைவில் நோக்கினார்.

“ஆசிரியர் ஏற்பாடாகி விட்டது. இனி மாணவர் அங்கே போக வேண்டும். போக வைக்கும் பொறுப்பு..."

“உங்கள் மகன் அருண்மொழி உத்தமசோழ பிரம்மராய னுடையது.”

“தங்கள் கட்டளை.”

“கட்டளையிட நான் யார்? இது வேண்டுகோள்.”

“அம்மா, சோழர் குல உப்பைத் தின்று வளர்ந்தது எங் கள் குடும்பம். சோழர் குல மேன்மையும் வளர்ச்சி யுமே எங்கள் கடமை. நானும் என் பிள்ளையும் இதைச் செய்து தருகிறோம்?”

“ராயரே, இதில் நான் சம்பந்தப்பட்டிருப்பது..."

“எவருக்கும் தெரியாது."

“உங்கள் மகனுக்கும் தெரியக் கூடாது ராயரே."

“மன்னிக்க வேண்டும் தாயே. ஒரு சட்டத்தின் சகல நுனிகளும் தெரியாதவன் அதைச் சரிவர செய்ய இயலாது மேலும் என் மகன் கெட்டிக்காரன். இதில் நீங்கள் சம்பந் தப்பட்டிருப்பதை ஊகிக்க நேரம் ஆகாது."

குந்தவைப் பிராட்டி மௌனமாய் தரை நோக்கி நின்றிருந்தாள்.

“புரிகிறது உங்கள் எண்ணம். சரி...ஆனால்... என் மகன் வாக்கு மீற மாட்டான், தாயே."

வாசலில் குதிரைச் சப்தம் கேட்டது.

அதிகாரிச்சி முத்தான பொன்னங்கை வாசல் நோக்கி ஓடினாள். பெரும் கதவுகள் திறந்தாள். அரண்மனை முற்றத்துக்குள் அருண்மொழிப்பட்டன் நுழைந்தான்.

குதிரை விட்டிறங்கி தந்தையையும் குந்தவைப் பிராட்டியையும் தனித் தனியே வணங்கினான்.

அவர்களின் சிந்தனை வயப்பட்ட முகம் அவனை அச்சுறுத்தியது. பெரிய சதுரங்கம் துவங்கப்பட்டது உள்ளுணர்வில் தைத்தது.

# 4

“இது முத்து மாலை. இது பச்சைப்பட்டு. முத்து மாலை ராஜேந்திரரை பரவைக்கு அடையாளம் காட்ட. பச்சைப்பட்டு நீ யார் என்பதை அவளுக்கு சொல்ல.

“சொன்னவை அனைத்தும் நினைவிலிருக்கிறதா அருண்மொழி. இது ஏதோ பெண்கள் விஷயம் என்று அலட்சியமாகவோ அவமதிப்பாகவோ இருக்க வேண்

டாம். அரண்மனைப் பெண்கள் மீது அக்கறையும் தன் குழந்தைகள் பற்றிய பொறுப்பும் ராஜேந்திரனுக்கு வர வேண்டும். போர் போதும். ஆளுகைக்கு உட்பட்ட இடங் களில் நமது பிடி இறுக்கமாக இருந்தால் தான் எதிர் காலத்திற்கு நல்லது. மறுபடி கோதாவரி கிருஷ்ணை வரைக்கும் - ராஜேந்திரன் போகக்கூடாது. பரவைக்கு என் அன்பைச் சொல். முடிந்தால் நீயும் பௌத்தம் பற்றி படி."

அருண்மொழி வணங்கி பொருட்களை வாங்கிக் கொண்டான்.

"அதிகாரிச்சி முத்தான பொன்னங்கை திருவாரூர் வந்தோ அல்லது நீயிருக்குமிடம் கண்டு பிடித்தோ அவ் வப் போது தகவல் சொல்லுவாள். அவள் மாறுவேடத் தில் வரக்கூடும் நந்தி தேவர் நலமா என்பதே அடையா ளச் சொல். பச்சைத் துண்டு போர்த்த வேண்டும் என்பது உன் மறுமொழி. புரிந்ததா? நல்லது, போய் வா."

"நான் விடைபெறுகிறேன், பிரம்மராயரே. மஹாதேவர் சோழ நாட்டை காக்கட்டும்." குந்தவைப் பிராட்டி எழுந் தார். பிம்மராயரை வணங்கினார். உள்ளே நடந்தவர் திரும்பினார்.

"அருண்மொழி, உன் மனைவிக்கு என் ஆசிகள்.' கையி லிருந்த ஆறு வளையல்கள் கழற்றி நீட்டினாள். அருண் மொழி முன்னேறி பெற்றுக்கொண்டான்.

குந்தவைப்பிராட்டி படிகள் ஏறி திரும்பி மறைந்தார்.

தகப்பனும் பிள்ளையும் ஊடுருவிப் பார்த்துக் கொண் டார்கள். முற்றம் தாண்டி வாசலுக்கு வர முத்தான பொன் னங்கை வாசற் கதவு தாழிட்டாள்.

"அப்பா, நான் மன்னரைத் தொடரவேண்டும். விடை பெறுகிறேன்."

“குடந்தை போகிறாயா.”

அருண்மொழி மௌனமாய் இருந்தான். “போய் விட்டு நாகை புறப்படு. நிறை மாதக்காரி. உன்னைப் பார்க்க ஆசைப்படுவாள்.”

“சரி.”

“சரபையை மருத்துவச்சிகளோடு அடிக்கடி போய் பார்த்துக் கொள்ள சொல்லியிருக்கிறேன், ஒரு வேளை சரபையை அங்கு சந்தித்தால்... வேண்டாம்.”

“சொல்லுங்கள் அப்பா.” -

“இன்னும் ஒரு மாத காலம் நான் அங்கு வரமுடியாது என்று சொல்.”

“ஏன்?”

“சரபை காரணம் கேட்கமாட்டாள். உனக்கும் தேவையில்லை.”

“சீதைக்கு ஏதும் சேதி உண்டா?”

“என் ஆசிகள்”

அப்பாவின் குரலில் ஒரு அலுப்புத் தெரிந்தது. தேரில் அமர்ந்து வீடு நோக்கிப் போனார். அருண்மொழி குதிரை மீது தாவி அமர்ந்தான்.

மொத்த விஷயமும் அசிகையாய் பட்டது. சோழ தேசத்து மாமன்னரை பல போர்களைக் கண்டு வெற்றி பெற்றவரை பல தேசப் பிரச்சினைகள் ஆராய்ந்து தீர்த்து வைக்கும் மாமனிதரை, ஒரு தேவரடியாரிடம் அனுப்பி என்ன செய்யப் போகிறார்கள். இது என்ன அபத்தம். இதற்கு பச்சைப்பட்டு முத்துமாலை என்று அடையாளங்கள் ஏன். ரகஸிய சங்கேதங்கள் ஏன். ராஜேந்திரர் நினைத்தால் ஆயிரம் தேவரடியார்களை வரிசைப்படுத்தி தனக்கென்று தேர்ந்தெடுக்கலாம். இந்தப் பரவை

என்ன செய்துவிட முடியும். தெலுங்கு சோழப் பெண் களை விடவா அழகு, மேலைச் சாளுக்கிய பெண்களை விடவா கட்டான தேகம், வங்கத்துப் பெண்களின் நிறம் வருமா. எல்லாம் சரி... ஒரு ஆணின் ஆவேசத்தைப் பெண் மாற்ற முடியுமா? ஆவேசப் படாது இருக்கும் ஆண் வெற்றி பெற முடியுமா; ராஜேந்திரர் அரண்ம னையே கதி என்று இருந்தாலும் ஏதாவது சொல்லுவார் கள். "வேடிக்கை பார்க்கவாவது இரண்டு போர்க்களம் அழைத்துப் போயேன் என்று நொந்து கொள்வார்கள்.

பெண்கள் ஒரு முட்டாள் பிறவிகள், போர் வேண்டாம் என்கிற குந்தவைப் பிராட்டி போரால் கிடைத்த பொன் னும் பொருளும் வேண்டாம் என்பாரா. இவர் கோயில் கட்ட பொன்னும் பொருளும் செடியிலா விளைகிறது?

அப்பாவின் அமைதிதான் ஆச்சர்யமாய் இருக்கிறது. சோழ சாம்ராஜ்யத்தில் மன்னருக்கடுத்தபடி மிகுந்த அதிகாரம் உள்ளவர், குந்தவைப் பிராட்டியிடம் அடங் கிப் போவது புதிராய் இருக்கிறது. அப்பாவை அடக்கக் கூடிய அளவுக்கு குந்தவை எப்படி வலியுள்ளவரானார்.

ஐயாரப்பன் சன்னதி வெறிச்சோடி இருந்தது. மன்னர் நாகை நோக்கி நகர்ந்து விட்டார். ஊர்க்காவல் ஆள் மட் டும் குதிரை சத்தம் கேட்டு மடக்கி நிறுத்தினான். முகம் பார்த்ததும் வணங்கி வழிவிட்டான். இம்மாதிரி ஊர்க்கா வல் அதிகாரியும், கிராமத் தலைவர்களும்தான் சோழ தேசத்தின் முதுகெலும்புகள்.

குடந்தை நகருக்குப் போகும் வழியில் பல கிராமங்க ளில் நகரில் காவல் பலமாய் இருந்தது மக்கள் திண் ணைகளில் பயமின்றி தூங்கிக் கொண்டிருந்தார்கள். இப்படி கிராமங்களுக்கு சுய ஆட்சி கொடுத்தது ராச ராசர்தான். அவர் ஆட்சியின் விளைவுதான். குந்தவைப் பிராட்டி இதற்கு நானே காரணம் என்று கூறிக் கொண்

டார். இருக்கலாம். இதை செவ்வனே பிரித்து நடத்தி யது பிரம்மராயர். அவரை முற்றிலும் புரிந்து கொண்டவர் ராஜேந்திரர். இப்போது குடும்பக்காய்ச்சல் அரசியலாகப் பார்க்கிறது. அதுதான் அப்பாவுக்கு அலுப்போ... இதைத் தடுக்க முடியாதோ.

கேரளந்தக சதுர்வேதி மங்களத்தின் நுழைவாயிலாய் குடந்தை இருந்தது. குடந்தை நெருங்கக் கீழ்வானம் சிகப் பாயிற்று. மேலும் கிழக்கு நோக்கி வயல்களூடே போனான். சொந்த ஊரான அமண்குடி நோக்கி குதி ரையை விரட்டினான். வெளிச்சம் மெல்ல எழுந்து, நீர் நிலைகள் பளபளத்து, சுற்றியுள்ள மரங்களின் நிழல் நீர் நிலையில் விழுந்து குளிர் காற்று அதிகரித்து பச்சை வயல்களை தாலாட்டியது.

இப்படி ஒரு தேசம் எங்கேயும் கண்டதில்லை. எல்லாக் காலமும் பூ பூக்கும் இடம், ஏதேனும் விளையும் இடம் சோ ழ தேசம்தான்,

அமண்குடி வாசலில் அப்பா கட்டிய துர்க்கை கோவில் இருந்தது. பிரம்மராரார் நுளம்பம்பாடியி லிருந்து கொண்டு வந்த வெள்ளைப் பிள்ளையார் வெள்ளைக் கல் சிவலிங்கம், உக்கிரமான துர்க்கை வடிவம். அப்பா இந்தக் கோவிலுக்கு ராஜராஜேச்வரம் என்று பெய ரிட்டார். ராசராசரின் நினைவாய் போற்றினார். அருகே உள்ள முன்னூறுவர் குளத்தில் இறங்கி கடன்கள் முடித்து குளித்துவிட்டு குதிரையை நடத்தி ஊருக்குள் போனான்.

ஊர் மேடான இடத்தில் இருந்தது. காவிரி கரை புரண் டாலும் பாதிக்கப்படாதபடி கட்டப்பட்டிருந்தது. ஊர் அந் தணப் பிள்ளைகள் அவன் வருகையைப் பார்த்து விட்டு சீதையிடம் சொல்ல ஓடினார்கள்.

சீதை அவன் சீதை, நிறைந்த வயிறும், வாய் நிறைய வெற்றிலையும், பருத்த முலைகளிடையே தொங்கும் திரு மாங்கல்யமுமாய் வாசலுக்கு வந்து நின்றாள். கண் கள் வரவேற்றன, கர்ப்பிணிக்குச் சிரமம் என்பதால் கச்சு அணியவில்லை போலும்.

வாருங்கள் என்று அழைத்துவிட்டு உள்ளே போனாள். மாமனும் மாமியும் எழுந்து நின்று வரவேற்றார்கள். குச லம் கேட்டு விட்டு வாசலுக்குப் போனார்கள்.

"நலமா சீதை. மருத்துவச்சி என்ன சொல்கிறாள்."

"வரும் பௌர்ணமிக்குள் பிள்ளைப் பேறு ஆகிவிடும் என்கிறாள். நீங்கள் ஏன் இப்படி கறுத்துக் கிடக் கிறீர் கள்?"

நிறைய வேலை. பௌர்ணமிக்கு இன்னும் நான்கு நாட் கள் தானே."

"ம்ம்... இப்போதே எட்டி எட்டி உதைப்பது தெரிகிறது தங் குவீர்கள் அல்லவா.''

"இல்லை. நாகை போக வேணும்"

"நாளையா."

இல்லை, இப்போதே மன்னரைத் தொடரவேணும்.'

"மாலை போகலா மல்லவா"

"இல்லை சீதை. அரசு வேலையாய் போகிறேன்."

'இன்று சரபை வருவதாய் சொல்லியிருக்கிறார், பார்த்து விட்டுப் போகலாமே."

"அப்படியா."

"தங்குவீர்கள் அல்லவா."

"சரி. அப்போது மாலையே போகிறேன்,"

"அதாவது சரபையைத் பார்த்து விட்டு."

“ஆமாம்.”

சரபை வரவில்லையென்று தெரிந்திருந்தால் உடனே, கிளம்பியிருப்பீர்கள்."

“சீதை, என்ன பேச்சு இது.

"என்னை இந்த நிலையில்கூட ஒரு பொருட்டாக மதிக்கவில்லையே.”

“மதிக்கா மல்தானா இரவு முழுவதும் பயணம் செய்து அமண்குடி வந்திருக்கிறேன்."

“உணவு முடிந்ததா.”

“இல்லை. உன் கையால் சாப்பிட வேண்டுமென்று வந்திருக்கிறேன்."

“என் கையால்... அடாடா, மூன்று மாதங்களுக்குப் பிறகு சீதையின் நினைவு வந்து விட்டது.”

“சண்டை போட்டே ஆக வேண்டுமா.”

“எடுத்தவுடனே சரஸம் செய்ய முடியுமா. கொஞ்சம் சண்டை, இரண்டு வசவு, கொஞ்சம் கண்ணீர்... பிறகு கொஞ்சினால்தான்..."

“கொஞ்சியது போலிருக்கும்.”

சீதை சிரித்தாள்.

“வா, அருகில் வா." அருண்மொழி கூப்பிட்டான்.

“ம்ஹூம், என் அப்பா வாசலில் இருக்கிறார்.

“மெல்லக் கதவு சார்த்திவிட்டு வா.”

“நன்றாய் இராது.”

“சரி நான் கிளம்புகிறேன். சரபையை குடந்தையில் பார்த்துக் கொள்கிறேன்.”

“அடேயப்பா, கோபத்தைப் பார்.”

நெஞ்சில் கை வைத்து தள்ளிவிட்டு வாசலுக்குப் போனாள்.

"அம்மா, அவர் எண்ணெய் ஸ்நானம் செய்யப் போகி றார். கதவு சாத்தி வை. தடக்கென்று யாராவது உள்ளே வரப் போகிறார்கள். ஏற்கனவே வீட்டில் ஏகத்துக்கு திருஷ்டி..."

கதவு சார்த்தப்பட்டது.

மெல்ல அருகே வந்து அருண்மொழியை ஆரத் தழு விக் கொண்டாள். கன்னங்களில் முத்தமிட்டாள்.

"யம்மா எத்தனை ஏக்கமாகி விட்டது தெரியுமா." நெஞ் சில் புரண்டாள்.

"அழகாய் இருக்கிறாய் சீதை."

"உண்மையாகவா."

"பூப்போல இருக்கிறாய்."

"சூடிக் கொள்ள முடியாது."

"வேண்டாம். பார்த்துக் கொண்டேயிருந்தால் போதும்."

"ஆசையில்லையா."

'உண்டு. பூவுக்கு நோகுமே.'

"அம்பிகே" சீதை வாய்விட்டு நெட்டுயிர்த்தாள்.

"இப்படி ஒரு புருஷன் பூர்வ ஜென்ம பலன்."

"நீயும் தான் சீதை. ஆமாம், நான் எண்ணெய் ஸ்நானம் சொல்லவேயில்லையே."

"செய்து கொண்டால் போகிறது. வேட்டி களைந்து விட்டு உட்காருங்கள். நான் தேய்த்து விடுகிறேன்."

"நீ சொன்னதற்காகவா."

"பிறகு புருஷனோடு கொஞ்சப் போகிறேன். கதவு சார்த்து என்றா சொல்ல முடியும். இரண்டு நாழிகை கதவு பக்கம் யாரும் வர மாட்டார்கள்."

"சீதை நீ கெட்டிக்காரியாகி விட்டாய்."

"இது சரபை சொல்லிக் கொடுத்தது. எண்ணைக்கு உட் காருங்கள்." -

வேட்டி களைந்து விட்டு மரப்பீடம் மீது கோவணமும் பூணூலுமாய் உட்கார, சட்டம் மாதிரி மார்பும், துதிக்கைப் போல புஜமும், கரு கருவென்ற குடுமியும், தூண்கள் போல தொடைகளுமாய் இருக்கிற புருஷனை ஆசை யுடன் பார்த்தாள். குனிந்து எண்ணை தடவ அவன் குறும்புகள் செய்தான். அவள் வயிற்றில் கை வைத்து குழந்தை உதைப்பதை உணர்ந்தான்.

பெரிய அண்டாவை விறகடுப்பில் ஏற்றி கொதிக்கக்' கொதிக்க ஜலம் விட்டு குளிக்க, கொல்லைப்புறம் நந் தவன மாயிற்று. புவீஷனுக்கும் மனைவிக்கும் நேரம் போவதே தெரியவில்லை.

ஜபம் முடிந்து உணவு உண்டு வெற்றிலை போட வாச லில் மாட்டு வண்டி குலுங்கிற்று.

சாபை இரண்டு மருத்துவச்சிகளுடன் உள்ளே வந்தாள்.

"அட சின்ன ஐயன் வந்திருக்கிறாரா, நான் எதிர் பார்க்க வேயில்லை. நலமா." -

உயரமும், திடமும், மெல்லிய அலங்காரமும் சந்தன வாச னையுமாய் சரபை அருகே வந்தாள். நெற்றியில் நரை துவங்கியிருந்தது. கண்களுக்குக் கீழே வயது தெரிந் தது.

"உங்களைப் பார்க்கவே தங்கியிருக்கிறார். இல்லையெ னில் வாசலோடு விசாரித்து விட்டு போகிறவர் தான்."

“வேற்றிலை போட்டுக் கொண்ட விதம் வாசலோடு போகிறவராய் தெரியவில்லையே. கிளிமடிப்பு வெற்றி லையல்லவா காட்டியிருக்கிறது."

“அது சும்மா...” சீதை வெட்கப்பட்டாள்.

“இருக்கட்டும். என்ன விஷயம், அருண்மொழி?”

“அப்பா நாகை போகிறார். வர ஒரு மாதமாகும்.”

முகம் வாடிற்று. நிமிர்ந்தது.

“பிறகு...?”

“தனியே பேச வேண்டும்.”

“சீதை உனக்கு அந்நியமில்லை. இங்கேயே சொல்.”

“அம்மா குந்தவைப் பிராட்டியிடம் உங்களைப் பற்றி குற் றம் சொல்ல அப்பாவிடம் விசாரணை நடந்தது.”

“உனக்கு எப்படித் தெரியும்.”

“அரண்மனை முற்றத்தில் நின்று அவர்கள் பேசுவதைக் கேட்டேன்."

“என்ன குற்றம்.”

“சீதையிடம் நீங்கள் பழகுவது பற்றி..."

“இது புதிதில்லை...பிறகு?”

“ராஜேந்திரர் பற்றி ஏக குற்றங்கள். சபையிலேயே விவா தங்கள் நடந்தன. வடபுலம் போனது தவறு என்று குந்த வைப் பிராட்டி கூறினார்.”

“இது அரசியல்.

“இல்லை. அரண் மனைப் பெண்டிர், ராஜேந்தி ரன் மனைவியர் குந்தவைப் பிராட்டியாரிடம் மன்னர் அரண்மனைக்கு வருவதேயில்லை. படைவீரர்களுடன் அமர்ந்து நாட்டியம் பார்க்கிறார். என்று அழுதார்களாம்.

உன் போர் பெண்ணடிமைகள் விற்பதில் தான் முடிந்தி ருக்கிறது என்று பிராட்டி குற்றம் சொல்கிறார்."

"அதனால் ராஜேந்திரர் நாகை போய்விட்டாரா."

"கடற்கொள்ளைகள் நடக்கின்றன என்று கேள்விப் பட்டு போயிருக்கிறார்."

"உன் தந்தை பிரம்மராயரிடம் பிராட்டி வீட்டு விவகாரம் மட்டுமே பேசினாரா."

"இல்லை அம்மா ராஜேந்திரர் மறுபடி வடபுலம் போகா திருக்கவும் குடும்பத்தில் நாட்டம் கொள்ளவும், பரவை என்பவரை பணித்திருக்கிறாராம்,"

"திருவாரூர், தியாகராசர் கோவில் தளிச்சேரி பெண் தலைக்கோலி, நக்கன் பரவை."

"ஓ...என்னிடம் நாட்டியம் கற்ற பெண் சதலைக் கோலியா, வயதாகியிருக்குமே. அவள் வயது இருபத்தி யேழு இருபத்தி எட்டு ஆண்டுகள் ஆகியிருக்குமே."

"எனக்குத் தெரியாது. ஆனால் இந்த மொத்த முயற்சி யும் கேவலமாக இருக்கிறது. சிங்கத்தை தென்னங்குச்சி யால் துரத்தப் போகிறது போல....."

சரபை தலை குனிந்து யோசித்தாள்.

"இல்லை அருண்மொழி, இது யானையை அங்கு சத் தால் அடக்குவது போல நடந்தாலும் நடக்கும்."

"என்னம்மா இது...சாதாரண தளிச்சேரிப் பெண்."

"நானும் தான் அருண்மொழி."

சீதை திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள். "சோழ அரசிய லில் உன் தகப்பனாரை விட வலியுள்ளவர்கள் உண்டா. என்னை அவர் எப்படி நேசிக்கிறார் என்று உனக்குத் தெரியாதா. ஆனால் குந்தவைப் பிராட்டி கலக்கமடை வது அரண்மனைப் பெண்டிருக்காக அல்ல. ராஜேந்தி

ரருடைய மகன்களை நினைத்து வருத்தம் கொள்கிறார் என்று தோன்றுகிறது. அரசர் புதல்வர்களை அலட்சியம் செய்து விடுவாரோ என்று அச்சம் வந்திருக்கிறது.

"எப்படி அம்மா. வாரிசு..."

"இல்லை அருண்மொழி. தாய்க்கும் தந்தைக்கும் பிணக்கு எனில் மகன் தாய் பக்கமே நிற்பான். இது இயல்பு. அரசரின் புதல்வர்கள் அரசரை வெறுத்து விடக் கூடாது என்று பிராட்டி கவலை கொள்கிறார். பரவையை பிராட்டி தேர்ந்தெடுத்தது போகத்துக்கு இல்லை. ஸ்நே கத்துக்கு. நடக்கட்டும். இதில் உன் பங்கு என்ன."

"பாவை நடத்தும் நாடகத்துக்குப் பார்வையாளன்."

"கவலையாய் இருக்கிறதா."

"இல்லை."

"இகழ்ச்சியாய்ப் படுகிறதா."

"ஆமாம்."

"உன் மனைவியைப் பெண் பார்த்து விட்டு என்னி டம் ஓடி வந்தாயே ஏன். உன் மனைவியை என்னிடம் அனுப்பி பதிகம் கற்றுக் கொள்ளச் சொன்னாயே எத னால். அம்மா அம்மா என்று என்னிடம் வாஞ்சையாய் பழகிவிட்டு தளிச்சேரி பெண்டிர் என்று எப்படி இழிவாய் நினைக்க முடிகிறது உன்னால்?"

"தாயே, நான் யாரையும் இழிவாய் கருதுபவனல்ல. சோழ அரசியலை ஒரு பெண் நிமிர்த்த முடியும் என்கிற எண் ணம்..."

"முடியும் அருண்மொழி. நடுவே நான் திருவாரூர் வருகி றேன். சிக்கல் இருப்பின் என்னிடம் சொல்."

"அம்மா நீங்கள் எதற்கு இந்த குழப்பத்தில்"

“உண்பதும் உடுப்பதும் சோழர் சொத்து. எனக்கும் நன்றிக்கடன் உண்டல்லவா. சீதையிடம் சொல்லி விட்டு புறப்படு. இரண்டொரு நாளில் குழந்தை பிறந்துவிடும். நான் இங்கு பேறு காலம் முடியும் வரை தங்கியிருப்பேன். கவலைப்படாதே. கொல்லைப்புற தோட்டத்தில் சில கீரைகள் பறிக்க வேண்டும்.”

மருத்துவப் பெண்களுடன் பின்பக்கம் விரைந்தாள். கொல்லைக்கதவு சார்த்தப்பட்டது.

"உங்களுக்கு நிறைய கஷ்டம். அரசாங்க வேலையில் என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. இத்தனைக்கும் நடுவே என்னைப்பற்றி கவலைப்பட வேண்டாம். குழந்தை பிறந்த சேதி கிடைத்ததும் முடிந்த போது ஒரு நடை வந்து போங்கள். நான் உங்கள் நினைவாகவே இருப்பேன். உங்களைப் பற்றி உங்கள் குழந்தையிடம் கதைகள் சொல்வேன். அவனுக்குப் புரிகிறதோ

இல்லையோ...இப்போதேகூட பேசுகிறேன். உத்தம சோழ பிரம்மராயர் அர்த்தம் தெரியுமாடா உனக்கு. சோழ குலத்துக்கு மட்டுமே உத்தமனில்லை. எனக்கும் உத்தமனாய்....” சீதைக்கு அழுகை வந்தது. கன்னத்தில் நீர் இறங்கியது. கண்ணீல் நீர் வழிய சிரித்தாள்.

“எனக்கு உன் பேச்சின் உள்ளர்த்தம் புரிகிறது சீதை. உன்னைத் தவிர வேறு பெண்ணை என் மனசு கூட தீண்டாது.”

“ச்சே, ச்சே நான் முரட்டுத்தனமாய் எதையும் சொல்லவில்லை, இரவு பகலாய் பல காதம் பிரயாணம் செய்து போர் செய்து, அரசாங்க வேலையாய் அலைந்து அப்பா என்று மனசு கவலை மறக்க நாட்டியமோ கூத்தோ...”

“இல்லை. சீதையோடு பேசியதும் பாடியதும், ஆடியதும் கூடியதும் நினைத்துக் கொண்டிருப்பேன்.”

சீதை விழி விரியப் பார்த்தாள். அவன் முகத்து உறுதி உணர்ந்தாள். எழுந்து தடவிக் கொண்டாள்.

“அமண்குடி தேவி, மகிஷாசுர மர்த்தினி உங்களோடு இருப்பாள். போய் வாருங்கள். நீங்கள் வந்த பிறகு நான் குழந்தையோடு தஞ்சை வருகிறேன்.”

அருண்மொழி மூட்டையைப் பிரித்தான். ராஜேந்திரர் கொடுத்த நூறு கழஞ்சுப் பொன்னும். குந்தவைப் பிராட்டி கொடுத்த ஆறு வளையல்களும் எடுத்து விவரம் சொல்லிக் கொடுத்தான். “உதவிக்கு வந்த சரபையை வெறும் கையோடு அனுப்பாதே. மருத்துவச்சிகளுக்கும் நிறைய கொடு. -

கிளம்பினான். சகலரிடமும் விடை பெற்று காளி கோவிலை வலமாய் வந்து அமண்குடி விட்டு நாகை நோக்கி குதிரை செலுத்தினான்.

சீதையின் முகம் கூடவே வந்தது. கச்சு அணியாத. முலைகளும், கட்டிக் கொண்ட இதழும், சூல் கொண்ட வயிறும் எண்ணைக் குளியல் குறும்புகளும் உள்ளே வரிசையாய் ஓடின.

வேலையைப் பற்றிய கவலை முற்றிலும் மறைந்தது. வழி நெடுக ராஜேந்திரருக்கு மக்கள் கோலாகலமாய் வரவேற்பு கொடுத்திருப்பது தெரிந்தது.

நாகை நகரத்து விளிம்பில் பிரம்மராயர் அவனுக்குக் காத்திருந்தார்.

“என்ன. நல்ல செய்தி ஏதும் உண்ட.”

“இனிமேல் வரும். இன்றோ நாளையோ பிள்ளைப் பேறு ஏற்பட்டு விடும் என்று சரபை சொன்னார்கள் இது அமண்குடி தேவி பிரசாதம்.”

இரண்டு வாடிய மலர்கள் கொடுக்க கண்ணில் ஒற்றிக் கொண்டு தலையில் சொருகிக் கொண்டார்.

“நடமாட்டம் விரைவாக இருக்கிறது வீதிகளில்... என்னப்பா காரணம்.”

“இருபது மரக்கலங்களுக்கு அறுபது நாள் உணவு சேகரிக்கச் சொல்லியிருக்கிறார் மன்னர். மரத் தச்சர்கள் நூற்றுக் கணக்கில் வரச்சொல்லியும் உத்தரவிட்டிருக்கிறார்.”

“போரா”

“உடனடியாய் இல்லை. காவலுக்கான மரக்கலங்கள் பழுது பார்க்கப்படுகின்றன. புதிய கலங்கள் கட்ட படம், வரைகிறார்கள். வணிகக் கலங்களில் சோழப் படைகள் துணைக்குப் போகின்றன. இரண்டு வருடங்களில் உக்கிரமான ஒரு கடல் கடந்த படையெடுப்பு நிச்சயம்.”

“ஏனப்பா.”

“கேசவமாயிலட்டி என்கிற வணிகனை ஸ்ரீவிசயத்து மரக்கலப்படை கைது செய்து அவனை சவுக்கால் விளாறியிருக்கிறது” அப்பா புதிய கதை சொன்னார்.

“ராஜேந்திரர் நாகை வந்ததும் வணிகர்களை சந்தித்திருக்கிறார். கேசவமாயிலட்டி மேலே துணி போர்த்தி உடல் நடுங்கியிருக்கிறான். மன்னரைக் கண்டதும் மேல் துணி எடுக்கிற வணிகன் போர்த்தியபடியே நிற்பது கண்டு மன்னர் மெல்ல வந்து அவன் துணி அகற்ற, உடல் முழுவதும் சவுக்கு விளாறல், கத்தி கீறல்கள்.

“மன்னர் என்ன இது என்று கேட்டிருக்கிறார்.

“கேசவன் வாய்விட்டு கதறி விட்டான்.

“சவுக்கால் அடித்து ஸ்ரீவிசயம் வாழ்க என்று சொல்லச் சொன்னார்கள். சொன்னேன். மறுபடி அடித்து சோழ தேசம் வீழ்க என்று சொல்லச் சொன்னார்கள். இடைவிடாது அடித்தார்கள். என்னால் அடி தாள முடியவில்லை அரசே அடித்த இடத்தில் உப்பு நீர் ஊற்றி ஊற்

றிக் கீறினார்கள். வலி பொறுக்காமல் சோழ தேசம் வீழ்க என்று சொல்லி விட்டேன்.

குமுறிக் குமுறி அழுதான். மன்னர் அணைத்து சாமதானப் படுத்தினார்.

"மன்னர் மாயிலட்டியை விட்டு இரண்டு அடி நடந்திருப்பார். கேசவ மாயிலட்டி சோழவீரன் இடுப்பிலிருந்து வாள் உருவி சோழ மன்னர் வாழ்க என்று கூறி தன் சிரம் அறுத்துக் கொண்டானாம்.

"மன்னர் அதிர்ந்து போய்விட்டார். கேசவன் தகனத்திற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன. அவன் சிதையில் அவன் மனைவி தீப்பாய்கிறாள்.

பொதுமக்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ராஜேந்திரர் நேரே வந்து தடுத்தும் மறுத்துவிட்டாளாம்.

"நான் தீண்டிய என் புருஷனை தீ தீண்டும் போது என்னைத் தென்றல் தீண்டவிடுவேனா. என் கணவன் மீது ஆணை, தீக்குளிப்பேன் என்று சொல்லிவிட்டாளாம்."

"ஆளுயரச் சிதை அடுக்கப்பட்டு விட்டது. நெய் பானை வர வேண்டும்."

அருண்மொழி உறைந்து போனான். "சோழ தேசப் பெண்கள் விசித்திரமானவர்கள்."

"உடனே மன்னர் அருகே போ. அருண்மொழி" அப்பா கட்டளையிட அருண்மொழி விரைந்தான்.

கடற்கரை மணலில் சிதை அடுக்கப்பட்டிருந்தது. மன்னர் கிரீடமும், மார்பு கவசமும் கழற்றிவிட்டு கைகட்டி கடல் பார்த்து நின்றிருந்தார். -

அருண்மொழி அருகே போய் நின்றான். தலை திருப்பி வா என்று தலையசைத்தார்.

சோழவீரர்கள் கேசவ மாயிலட்டி உடலை தூக்கி வந் தார்கள். பின்னே பெண்கள் அழுகுரல் கேட்டது

சிதை மீது உடல் வைத்தார்கள். கேசவ மாயிலட்டி உட லைச் சோழ உபதளபதி வாளால் வகுத்தான். கேசவன் தற்கொலை செய்து கொள்ளவில்லை. போரில் இறந் தான். அது விழுப்புண் என்று அர்த்தம். நீர் தெளித்து ஏழு வயது பிள்ளை சடங்குகள் செய்து திரும்ப' கேசவன் மனைவி மேடையேறினாள். மஞ்சள் ஆடை உடுத்தி பெரிய குங்குமம் நெற்றியில் வைத்து அரளி மாலை அணிந்து வெளியே தாலியும் வாயில் தாம்பூலமும் தரித்து கைகூப்பி கணவனை வலம் வந்தாள். முடிந்த சடையை விரித்துவிட்டாள். பிள்ளை தீ மூட்ட நெய்யில் ஊறிய கட்டை திகு திகுவென்று எரிந்தது. கடற்காற்றில் உயரே எழும்பியது,

கைகூப்பி கண் மூடி அந்தப் பெண் நிற்க, சோழ வீரர்கள் தங்கள் கேடயங்களில் ஒரே லயத்தில் வாளை ஓங்கி ஓங்கி அடித்தார்கள். எக்காளம் முழங்கியது முரசுகள் அதிர்ந்தன.

சோழம், சோழம், சோழம், என்று பலரும் வெறியோடு கூவ அந்தப் பெண் சரேலென்று தீப்பாய்ந்தாள்.

பளிச்சென்று அத்தனைக் கூட்டமும் அமைதியாயிற்று. அந்தப் பெண்ணின் ஓலம் மட்டுமே பலரின் காதையும் நிறைத்தது.

மன்னர் கண் மூடினார். அவர் உடம்பு துடித்தது' துக்கம் எங்கும் பரவியது. -

மன்னர் தாவி தீப்பற்றியெரியும் சிறை மேடை மீது ஏறி னர். வாள் உருவி கர்ஜித்தார்.

“சோழ மக்களே, சோழ மக்களே, எமக்குப் பணி செய் துவந்த கேசவ மாயிலட்டியை அடித்து சித்திரவதை

செய்த கடார தேசத்து மன்னனைக் கொல்வேன். அவன் பெண்டிரின் மூக்கும், முலையும் அரிந்து எறிவேன். கடாரம் முழுவதும் கைப்பற்றி கடற்கரை எரியூட்டுவேன். இது என் வாள் மீது ஆணை, வணிகக் குலம்மீது ஆணை, மகாதேவர் மீது ஆணை."

"ஆணை, ஆணை" என்று சோழப்படை எதிரொலித்தது.

"கேசவ மாயிலட்டி சிரமறுத்த இடத்தில் நடுகல் நடப்படும். அவருக்கும் அவர் மனைவிக்கும் நீர் தாகம் தணியும் பொருட்டு இங்கே தண்ணீர் பந்தல் நடப்படும்."

சிதையை வணங்கிவிட்டு ராஜேந்திரர் கீழறங்கினார் கூட்டம் விட்டு வெளியேறினார். அருண்மொழி பின் தொடர்ந்தான்.

# 5

"பிரம்மராயரே, நூறு புதிய மரக்கலங்கள் செய்ய வேண்டும். நெடுந்தொலைவு போகவும். எதிரி கலங்களைத் தாக்கி உடைக்கவும் அவை பயன்படவேண்டும்.

"அதுவரை வணிகர்கள் கடல் வாணிபம் செய்ய வேண்டாம். அவர்கள் கவனம் உள் நாட்டில் திரும்பட்டும், வாணிப இழப்புக்குச் சோழ பேரரசு நஷ்டஈடு தரும் என்று சொல்லுங்கள்.

"நமது வீரர்களை அவ்வப்போது மரக்கலம் ஓட்டப் பழகச் சொல்லுங்கள். கடலோடு பரிச்சயம் வரட்டும்.

"நான் மறுபடி சோழ தேசம் முழுவதும் பயணம் செய்யப் போகிறேன்.'

“சேனாதிபதி அரையன் இராசராசனும், போசனும் படைக்கல பயிற்சி தர நீங்கள் மரக்கலத் தயாரிப்பு கவனியுங்கள்.

“வந்தியத் தேவரும் நானும்...” ராஜேந்திரர் தொடர்ந்து பேச பிரம்மராயர் மறித்தார்.

'வந்தியத் தேவரை இழுக்கடிப்பானேன். வயதாகி விட்டதே அவருக்கு. பதஞ்சைக்கு அவரை அனுப்பி இளவரசர் ராசராசாசித்தனுக்குப் போர்ப் பயிற்சி தரச் செய்யலாமே.”

“நல்ல யோசனை. வந்தியத்தேவருக்கு பயணம் பிடிக்குமே என்று நினைத்தேன்.”

“வேகம் குறைவுபடும்.”

“உண்மை.” ராஜேந்திரர் யோசித்தார்.

“அப்போது, நானும் அருண்மொழியும் மெய்க் காவலர்களோடு...”

“எனக்கு ஒரு யோசனை அரசே.”

“என்ன அருண்மொழி.

“மக்கள் எங்கும் உங்களை மொய்த்துக் கொள்கிறார்கள். மக்கள் பிரச்சனையை, நாட்டு நடப்பை அதிகாரிகளே சொல்கிறார்கள்.”

“ஆமாம். அதற்கென்ன?”

“அதிகாரிகள் இடையூறின்றி மன்னர் என்கிற தடையின்றி மக்களோடு மக்களாய் கலந்து பழகினால் என்ன.”

“அடையாளம் தெரியாமலா போகும்.''

“மாறு வேடம் பூணுவது சுலபம். உங்களைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டும்.''

“நான் நாகையில் இல்லை என்றால் எங்கே மன்னர் என்று படை வீரர்களிடம் கேள்வி வராதா?"

நீங்கள் கடற் பயணம் புறப்படுகிறீர்கள். மரக்கலம் எறுகி நீர்கள். உடனே கடற்கொள்ளை தடுக்கப் புறப்படுகிறீர் கள். ஏறி சற்று தொலைவு போய் ஒரு படகில் இறங்கி இரவோடு இரவாய் கரையேறி... தெரிஞ்ச கைக்கோள் குதிரைப் படை உபதளபதியாய் உருமாறி சோழ தேசம் முழுவதும்...”

மன்னர் முகம் மலர்ந்தது.

“அருமையான யோசனை. ஏற்பாடு செய்.”

அருண்மொழி வெளியேறினான்.

“அரசே..."

“என்ன பிரம்மராயரே."

“அருண் மொழி மட்டும் துணைக்குப் போதுமா?'

“நான்கு படை வீரர்களை தேர்வு செய்யுங்கள் அமைதி யானவர்களாய், துரிதமாய் இயங்குபவர்களாய்...”

“உங்கள் இடம் எனக்குத் தெரிய வேண்டுமே. எப்போ தும் தொடர்பு கொள்ள, ஒரு வழி வேண்டுமே."

“வணிகர்களைச் சோழ தேசம் முழுவதும் போகச் சொல் லியிருக்கிறோமல்லவா. எதிர்ப்பட்ட வணிகரிடம் பிரம் மராயருக்குப் பரிசு என்று ஒரு குத்துவாள் உறையுடன் கொடுப்பேன். உறைக்குள் என் ஓலையிருக்கும்.”

“அருண் மொழிக்கு இது தெரிய வேண்டாம் மன்னா."

"நல்லது, பிரம்மராயரே..." திடுமென மன்னர் விளித்தார். நாகை நகர் மாளிகை மாடத்திலிருந்தவர் வீதியை உற் றுப் பார்த்தார்.

"அந்தப் பெண் யார்” சுட்டிக் காட்டினார்.

அதிகாரிச்சி முத்தான பொன்னங்கை.

"குந்தவை பிராட்டி என்னை வேவு பார்க்க அனுப்பியிருப்பாரோ."

"இருக்காது மன்னா. விசாரித்து வரச்சொல்லவா."

"வேண்டாம். வேறு வகையில் இதை கவனித்துக் கொள்கிறேன்."

"குந்தவைப் பிராட்டி நல்லதே செய்திருக்கிறார் இல்லையெனில் கடற்போர் பற்றிய எண்ணம்..."

"போரை அரண்மனைப் பெண்கள் நிர்ணயிப்பதில்லை பிரம்மராயரே. மாற்றரசர் திமிரும். நம் வலிவும் மோதுமிடமது."

"உண்மை " பிரம்மராயர் ஆமோதித்தார்.

"நல்லது. நீங்கள் போகலாம். எனக்கு சற்று உறக்கம் தேவை."

மறு நாள் காலை நன்றாய் விடிந்த பிறகு மன்னர் மரக்கலமேறினார். கூடவே படகில் வந்த வணிகர்களை தடுத்து நிறுத்தினார்.

"நான் நேரே கடாரம் போகப் போவதில்லை. கடலோடு என்னைப் பரிச்சயப்படுத்திக் கொள்ள சிறிது தூரம் சஞ்சாரம் செய்யப் போகிறேன். ஈழம் வரை போய் நமது படைகளை உற்சாகப்படுத்தி விட்டு வருவேன். கவலை விடுக. விடை தருக."

வணிகர் கூட்டம் அரை மனதுடன் கலம் விட்டு இறங்கியது. -

நங்கூரம் எடுத்து பாய்விரித்த கலம் கிழக்கு நோக்கிப் போயிற்று. புள்ளியாய் மறைந்தது. சரியாய் ஒரு பகல் ஒரு இரவு கழிய மரக்கலத்தை நாகை நோக்கி போகச். சொல்லிவிட்டு மன்னர் மரக்கலத்திலிருந்து பட

கில் இறங்கினார். அருண்மொழியும், காரியும், மாறனும், தென்னவ னும் படகுக்கு மாறினார்கள்.

அந்த ஐவர் குழுவின் படகு கரை தொட்டது.

ஆள் இல்லாத புதர்கள் மண்டிக் கிடக்கும் காடுகளுடே போகும் போது எதிரேநீலகங்கன் என்னும் உபதளபதி குதிரைகளுடன் வருவது தெரிந்தது.

நாகையிலிருந்து கப்பல் புறப்பட்டதும் இவனைத் தனி யாக குதிரைகளுடன் பிரம்மராயர் தெற்கு நோக்கி அனுப்பி விட்டார்.

இடையே ஓய்வெடுத்து மறுநாள் இராஜேந்திரர் திருவா ரூர் நுழைந்தார்.

சாதாரணச் சாய வேட்டியும், வெள்ளை மேல் துண்டும் காலில் ஒரு கழலும் நெஞ்சில் முத்துச் சரமும், வலக்கை விரலில் வெள்ளி மோதிரமுமாய் உடை மாறியிருந்தது. பட்டத்துக் கத்தியை கலத்தில் விட்டு விட்டு. மாட்டுத் தோல் உறையுடன் கூடிய கத்தி இடுப்பில் அணிந்திருந் தார். புதர் போன்ற மீசை நறுக்கப்பட்டிருந்தது. காதில் குண்டலங்களுக்கு பதில் சாதாரண வளையம் இருந் தது.

அருண் மொழி முப்புரி நூலை அகற்றிவிட்டு தாடி வளர்த்துக் கொண்டிருந்தான். எந்த அரசியல் அதிகா ரச் சின்னமும் இன்றி மார்பின் குறுக்கே வீரச்சங்கிலி அணிந்து கொண்டான்.

ராஜேந்திரர் தன் பெயரை பரஞ்ஜோதி என்று மாற்றிக் கொண்டார். அருண் மொழிப் பட்டனை நம்பி என்று அழைக்கச் சொன்னார். மக்களால் அதிகம் அறியப் படாத அந்தப் படை வீரர்கள் அவர்கள் பெயருடனே இருந்தார்கள்.

மண்சாலை, வயல்களுக்கு நடுவேயும், சோலைகளை ஊடறுத்தும் போயிற்று.

ஒரு பொன் கழஞ்சுக்கு அறுவருக்கும் சத்திரத்தில் சோறும், பொறித்த கறியும் கிடைத்தன. குதிரைகளுக்கு நீரும், தீனியும் காட்டப்பட்டன.

அரசர் பிரயாணக் களைப்பு தீரச் சற்று நேரம் திண் ணையில் படுத்திருந்தார். அருண்மொழிப் பட்டன் சத்தி ரத்து வாசலில் குழம்பியவாறு உட்கார்ந்திருந்தான், வந்த வேலை எப்படித் துவங்கும். எங்கே துவங்கும் எப் போது துவங்கும் ஒன்றும் புரியவில்லை.

யாரோ குதிரையில் தெருவோடு வருவது தெரிந்தது. சத்திரத்து வாசலில் குதிரை நின்றது. ஊர்க்காவலன், அவன் கையிலிருந்த கோலும், கங்கணமும் அறிவித் தன.

வந்து வணங்கினான். "வணக்கம். சோழர் குலம் வாழ்க."

"வாழ்க."

'நீங்கள் யார்?"

"தெரிஞ்ச கைக்கோளப் படையின் வீரர்கள். உபதள பதி பரஞ்சோதி தலைமையில் திருவாருர் வந்திருக்கி றோம்."

"அரசாங்க அலுவலா?"

"இல்லை. திருவாரூர் பெருமானுக்கு நேர்ச்சை, கங்கை நோக்கி படையெடுத்துப் போனபோது, உயிருடனும், அங்கஹீனமின்றியும் வந்தால் வந்து தரிசிப்பதாய் ஒரு வேண்டுதல்."

'நல்வரவு. நான் ஊர்க்காவல். சத்திரம் செளகர்ய மாய் இருக்கிறதா. மரண பயம் அறுக்கும் தியாகராாசர் சன்னதி யிது. சோழ மன்னர்கள் அனைவரும் தரிசித்து வணங்

கியதுண்டு. உடம்பெல்லாம் தொண்ணூற்று விழுப்புண் பட்ட விஜயாலயன், காவிரி இரு கரையும் கவினுறு கோயில்கள் கட்டிய ஆதித்த சோழர், மதுரையும், ஈழமும் வென்ற பராந்தகர், சிவநெறிச் செல்வர், கண்டராதித்தர். நமது ராசராசர் அனைவரும் நிவந்தங்கள் அளித்து வணங்கிய திருக்கோயில் இது. எப்போது கோயிலுக்கு வருகிறீர்கள்?"

"உச்சி வெய்யில் தாழ..."

"நல்ல நேரம். உங்கள் வருகையை கோயிலுக்கு அறிவித்து விடுகிறேன். ஒரு கேள்வி

"மன்னர் எங்கே?"

சட்டென்று அருண்மொழிக்கு முகம் மாறிற்று.

"கடற் பயணம் மேற்கொண்டார் என்று காலை தகவல் வந்தது உண்மையா?"

"உண்மை"

"மீண்டும் போர் வருமோ?"

"கடல் கடந்த போரோ?"

"ஆமாம்."

"கேட்கவே சந்தோஷமாக இருக்கிறது. ராஜேந்திரர் அகிலும், சந்தனமும், யானைத் தந்தங்களுமாய் இறங்குவார் என்று சொல்லுங்கள். விநோதமான பொருட்கள் இனி வீதிகளில் கிடைக்குமில்லையா?"

'போர் நடக்கட்டும் நண்பரே, பிறகு பார்ப்போம்.'

"போர் நடக்க வேண்டும் படை வீரரே. சோரு தேசம் வளமானதற்கு காரணமே இடைவிடாது நடக்கும் போர்கள் தானே. இது சாளுக்கிய தேசத்து வைர மோதிரம். மூன்று கழஞ்சுக்கு வாங்கினேன். குடந்தையிலும், நாகையிலும் கிடைக்காத பொருளில்லை. எதை வாங்குவது எதை

விடுவது என்று தெரியவில்லை. எல்லாம் உங்களைப் போன்ற வீரர்களின் செயல். உங்கள் வரவு நல்வரவாகட் டும் சோழர் குலம் வாழ்க. புலிக்கொடி ஓங்குக."

அருண்மொழி வணக்கம் பதிலாய் தந்தான்.

வந்தவன் குதிரையேறிப் போக, ராஜேந்திரர் வெளியே வந்தார்.

ஊர்க்காவலனா?"

"ஆமாம்."

ஒருமுறை இவனை சாளுக்கிய போருக்கு அனுப்பு. கொள்ளிப்பாக்கைக் காட்டுக்கு கூட்டிப் போ."

"வழியிலேயே செத்துப் போவான். கோவிலுக்கு கிளம்ப லாமா மன்னரே..."

"நம்பி..." மன்னர் அதட்டினார்.

"மன்னிக்க வேண்டும் உபதளபதியாரே" அருண்மொழி திருத்திக் கொண்டான்.

செங்கல் கோயில். விமானம் முழுவதும் சுதைச் சிற்பங் கள்.

அந்த வீதி விடங்கருக்கு பிற்பகல் அமுது படைத்து அவர் உண்டதும், இடம் சுத்தம் செய்து தாம்பூலம் சமர்ப் பித்து உண்ட களைப்புத் தீரும் வண்ணம் சாமரம் வீசி, கண்ணுக்கு இதமாய் கொடி குடை, பாதகை உயிர்ப் பித்து, தாம்பூலம் இட்ட வாய் சிவந்திருக்கிறதா என்று காண கண்ணாடி காட்டி, தூங்கும் முன் தூபப் புகை போட்டு ஆரத்தி எடுத்த நேரத்தில் மன்னர் உள்ளே வந் தார்.

திருவாரூர் தியாகேசர் முன்பு கைக் கூப்பி மனம் குவித்து நின்றார். உள்ளே பொங்கும் வேதனை தீர்ப்பாய் எம் மானே என்று இறைஞ்சினார். நின்ற நேரம் நல்ல நேரம்.

“யார் நீங்கள்" சிவாச்சாரியார் கேட்க விபரம் சொன்னார் கள்.

“மன்னர் இப்பக்கம் வர வாய்ப்புண்டா?”

“எதற்கு?”

“இது செங்கல் தளி. கற்றளி உபயம் நடக்க வேணும். கோயில் கருங்கல்லாய் மாற்ற வேண்டும். வல்லத்து காளி கோவில் எல்லாம் கற்றளியாய் இருக்க திருவீதி விடங்கர் மட்டும் செங்கல் கோவிலில் இருக்கிறாரே. மன்னரிடம் இது பேச முடியுமா.”

“பேசிப் பார்க்கிறேன்.'' மன்னர் மறுபடியும் கை கூப்பி நின்றார்.

“வீதி விடங்கப் பெருமானே. ஆரூரா. வெற்றிகளுக் குப் பிறகும், என் மனம் அமைதியின்றி தவிக்கிறது. ஏனோ நிம்மதியின்றி சுழல்கிறது. எல்லோரையும் எதிரி யாய் நினைக்கிற தன்மை அதிகரிக்கிறது. இதிலிருந்து என்னை மீட்பாய், தயாபரா. உனக்கு கற்றளி எழுப்பு வேன்."

டிங்கென்று தாள ஓசை கேட்டது.

கோல் தட்டும் ஓசை எழுந்தது. குழல் ஒலி கேட்டது. ஜதி கள் துவங்கின. சதங்கைகள் கொஞ்சின.

"என்ன அது?”

“கோவிலுக்கு பின்னே நாடகம் நடக்கிறது.”

“பகலிலா?"

“ஒத்திகை. தளிச்சேரிப் பெண்டுகள் இரவு நாடகத்துக் குப் பகலில் இங்கே ஒத்திகை செய்வது வழக்கம்."

“தலைக்கோலி யாரோ?"

“பரவை. திருவாரூர் பரவை.”

"நம்பி, நாடகம் பார்க்கலாமா?"

"நல்லது உபதளபதியாரே."

பிரசாதம் இட்டுக் கொண்டு ஐந்து கழஞ்சுப் பொன் தட்டில் போட சிவாச்சாரியார் முகம் மலர்ந்தார். "ஊரில் இருப்பீர்கள் அல்லவா. நேர்ச்சை பற்றி நாளை பேசுவோம்."

"நல்ல து."

கர்ப்பக்கிரகம் விட்டு வெளியே வர, இரண்டு பெண்கள் உள்ளே நுழைந்தார்கள். புதிய துணியில் பூக்கள் தைத்து போர்வை போல் கொணர்ந்து வீதி விடங்கருக்குக் சார்த்தி னார்கள்.

பின்னே ஒரு பெண் நடந்து வந்தாள். நல்ல உயரம். கூர்மையான நாசி, சற்று வளைந்த கீழுதடு. பெரிய கண்கள். நீள வட்ட முகம். நடனம் ஆடி ஆடிகட்டமைந்த தேகம். நடையில் ஒரு அலட்சியம். மூடியிருந்த இதழ்களில் ஒரு நிரந்தரப் புன்னகை. கண்களில் அறிவின் சுடர். உடலில் அசையாது இறுக்கிக் கட்டிய ஆபரணங்கள். இடுப்பில் நீலப்பட்டு. காலில் சதங்கை.

ராஜேந்திரர் கர்ப்பக்கிரகம் விட்டு வெளியே வர, அவள் நுழைய, ராஜேந்திரர் நகர்ந்து பின்னடைய வேண்டியதாயிற்று.

அவள் கரம் குவித்தாள்.

ராஜேந்திரரும் கரம் குவித்தார்.

"விலகி நில்லுங்கள்" அந்த பெண் பேசிற்று.

"எதற்கு?" ராஜேந்நிரர் கேள்வி கேட்டார்.

*நந்தி போல் பாதி கர்ப்பக்கிரகம் மறைத்தால் தரிசிப்பதெப்படி?" அருண்மொழி அவளை உற்றுப் பார்த்தான்.

"வணங்கினீர்கள் என்று திரும்பினேன்."

"இது மனிதரை வணங்கும் இடமல்ல."

'அவமதிக்கும் இடமோ" ராஜேந்திரர் குரலில் கேலி பொங்கிற்று.

"உயர்வு தாழ்வு என்று பிரித்துக் கொண்டவருக்கு எங் கும் அவமதிப்பு நிகழும்."

ஐந்து விரல்களும் ஒன்றாகவா இருக்கின்றன?"

"கண்ணுக்குத் தெரியும் உருவங்கள் மட்டுமே வாழ்க் கையை நிர்ணயம் செய்வதில்லை. உள்ளிருக்கும் சக்தி முக்கியம். கட்டை விரலின் சக்தி பாம்பு விரலுக்கு இல்லை. உங்களைப் போல் உயரமாய் இருப்பதெல் லாம் உயர்ந்ததல்ல" அவள் ' ராஜேந்திரரைச் சுட்டிக் காட்டினாள். மன்னர் அசையவில்லை.

"உருவம் முக்கியமில்லாதவருக்கு வீதி விடங்கர் தரி சனம் எநற்கு? பாதி மறைக்கிறதே என்கிற பதட்டம் எதற்கு?"

அவள் கணநேரம் தடுமாறுவது தெரிந்தது.

"விளக்குக் குடுவையில் வீட்டில் பூச்சி உட்கார, நாம் விலக்கி விடுவதுண்டல்லவா?"

"மனிதர்களை பூச்சிகளாய் பார்ப்பது நல்ல பழக்கம் உயர்ந்த குணம்."

"ஒரு வகையில் மனிதர்களும் பூச்சிகளே."

அருண்மொழிக்கு அவள் யாரென்று தெரிந்து விட்டது. இந்த உரையாடலை நிறுத்த விரும்பினான். மன்னர் முதுகு தொட்டான்.

"உபதளபதியாரே, பூச்சி போகட்டும், வழி விடுங்கள்," அவள் முகம் சிவந்தது.

ராஜேந்திரர் வாய் விட்டுச் சிரித்தார். விலகிக் கொண் டார்.

அவள் உள்ளே நுழைய அறுவரும் சிரித்தபடி வீதி விடங்கர் கோயில் வலம் வத்தார்கள். சன்னதிக்கு நேர் பின்னே பதினாறு கால் மண்டபம். சுற்றி திரைச் சீலை தொங்கவிடப்பட்டிருந்தது. உள்ளே - பெண்கள் குரல் கேட்டன.

"இதுதான் ஒத்திகை நடக்கும் இடமா? நம்பி, ஒத்திகை பார்த்தால் என்ன? மா றன், போய் அனுமதி கேட்டுவா." மாறன் சீலை விலக்கி உள்ளே போனான். இடம் அமை தியாயிற்று.

பெண் பூச்சிகள் அனுமதிக்குமா? தெரியவில்லை, அருண்மொழி கேட்க, மறுபடி மன்னர் வாய் விட்டுச் சிரித்தார். என்றுமில்லாத சந்தோஷம் அவரின் முகத் தில் தெரிந்தது.

"உங்கள் முகமே புதியதாய் இருக்கிறது. அரசே" தாழ்ந்த குரலில் அருண்மொழி சொன்னான்.

"கூட்டமின்றி, கோலாகலமின்றி, சாமானியனாய் இருப் பது விடுதலையாய் இருக்கிறது அருண்மொழி. என்ன அலட்சியம் அந்தப் பெண்ணிடம். மனிதர்கள், ஒரு வகையில் பூச்சிகளாம். பூச்சி கோயில் கட்டுமா நாடகம் போடுமா?"

"அது இல்லை. அரசே."

"அருண்மொழி, இறைவன் படைப்பில் மனிதன் சிறந்த விஷயம். பிறந்து மடிவதால் மட்டுமே மனிதனைப் பூச்சி என்று கூறிவிடக்கூடாது. அவனது ஆறாவது அறிவு தேவகுணம்."

"உண்மை மன்னரே."

மாறன் வெளியே வந்தான். "சோழப் படைவீரர்கள் என் பதால் இடைஞ்சல் செய்யாது சற்று நேரம் பார்க்க அனு மதி அளித்திருக்கிறார்கள்."

உள்ளே நுழைந்தார்கள்.

"என்ன. எதுவரை முடித்திருக்கிறீர்கள்?"

சன்னதியில் பார்த்த அந்தப்பெண் இருவர் துணையுடன் உள்ளே வந்தாள்.

"சபை வணக்கம்."

"என்னடி விளையாடுகிறீர்களா? காலையிலிடுந்து சபை வணக்கம்தானா? வெட்கமாய் இல்லை?"

"ஒரே அரட்டை. சொல் பேச்சு கேட்காமல் ஆளுக்கு

ஆள்..."

"நிறுத்து உன் புலம்பலை. யார் அரட்டை அடிப்பது? பெயர் சொல். வெட்டிப் பேச்சு, வெட்டிப் பொழுது கழிக் கவா கோவிலுக்கு வந்தீர்கள்? பரமு, வா இங்கே. நந்தி மாதிரி வளர்ந்திருக்கிறாயே தவிர கச்சு சரியாக அணி யத் தெரிகிறதா? இறுக்கிக் கட்டு."

"நெகிழ்கிறது. பரவை."

"திரும்பு..." சரக்கென்று பரமுவின் கச்சு சுருக்கை அ விழ்க்க,

"ஐயோ" என்று அவள் கச்சுத்துணியை நெஞ்சோடு பொதித்துக் கொள்ள...

"என்னடி?"

"அன்னியர்கள் இருக்கிறார்கள்" சுட்டிக் காட்டினாள்.

வெளிச்சத்திலிருந்து இருட்டில் வந்தவளுக்கு வரிசை யாய் உட்கார்ந்திருந்தவர்கள் தெரியவில்லை போலும். கண் சுருக்கினாள்.

"யாரது?" அதட்டினாள்.

“பூச்சிகள்” தென்னவனையும், மாறவனையும் தவிர நாலு பேர் குரல்கள் ஒன்றாய் பதில் சொல்லின. மன்னர் நகைத்துக் கொண்டிருப்பது உணர முடிந்தது.

“திமிரா? இது ஒத்திகை நடக்கும் இடம் யார் உங்களை அனுமதித்தது? வெளியே போங்கள்.”

“அம்மா நான் தான்...” ஒரு பெண் தயங்க மேலும் சீறினாள்.

“அறிவிருக்கிறதா உனக்கு. யார் இவர்கள் ஏன் அனுமதித்தாய்?”

“சோழப் படை வீரர்களாம். உபதளபதியாம். சற்று நேரம்...”

“ஏன், இன்னும் அரை நாழிகையில் கடல் கடந்து கடாரம் போய் விடுவார்களா மாலை நாடகம் வரை பொறுக்க மாட்டார்களா. போகச் சொல் வெளியே” கூவினாள்.

மன்னர் எழுந்தார்.

“ஆக கோவில் என்பது மனிதரை மனிதர் அமவதிக்கும் இடம். திருவாரூர் எனக்குத் தெளிவு கொடுத்துவிட்டது. மிக்க நன்றி” மன்னர் கை கூப்பினார்.

“என்ன அவமதித்து விட்டார்கள் உம்மை...”

“வந்து உட்காரச் சொல்லி விட்டு உடனே துரத்துவது நல்ல மரியாதையோ, திருவாரூர் பழக்கமோ.”

“ஆண்களுக்கும் கூச்சம் கொஞ்சம் வேண்டும்.”

“எது குறித்து?”

“பதினாறு பெண்கள் உடை தளர நாட்டியமாடும் போது, நல்ல ஆண் மகன் கால் நீட்டி அமர்ந்து வேடிக்கை பார்க்க மாட்டான்.”

“எனக்கு கச்சு கட்டிவிட்டு பழக்கமில்லை.”

"அடடா. நீர் சோழப் படையின் உபத ளபதியல்லவா கங்கை வரை போய் பல நாடுகள் வென்று வந்திருப் பீரே."

"ஆமாம்."

"உமக்கு கச்சு அறுத்துத்தான் பழக்கமிருக்கும். பெண்க ளின் கைவளை நொறுக்கியும், கூந்தல் பிடித்து இழுத்து வந்தும், நன்கு பழகியிருப்பீரே. இணங்க மறுத்த பெண் களை எட்டி உதைத்து பழகியிருப்பீரே?"

"ஏய்" ராஜேந்திரர் முகம் மாறியது.

"ஆகா...போர்க் குணம் வந்து விட்டது சோழ வீரருக்கு."

"ஆமாம். அவமரியாதையைப் பொறுத்துக் கொள்ள சோழ வீரன் பயின்றதில்லை."

"என்ன செய்வீர்" இடுப்பில் கை வைத்து மிரட்டினாள்.

"நாடு காக்கும் வீரரிடம் நயமாய் பேசுவது முறை."

"நயமாய் நடப்பவரிடம் நயமாய் பேசுவது எங்கள் வழக் கம்."

"அம்மா, அனுமதி பெற்றே உள்ளே வந்தோம். ஏன் ஆத் திரப்படுகிறீர்கள்?" அருண்மொழி இடையில் புகுந்தான்.

"இப்போது அனுமதி மறுக்கப்பட்டு விட்டது."

"வெளியேறி விடுகிறோம். அவ்வளவுதானே, வார்த்தை களில் கடினம் எதற்கு?"

"என் பெண்டுகளை அதட்டும் போதே போயிருக்க லாம், அசையா தேர்ப் பொம்மைகள் போல அமர்ந்தி ருந்தால்..."

"ஒரு சந்தேகம்" காரி இடையே புகுந்தான். "இது என்ன நாடகம்?"

"மனுநீதிச் சோழர் நாடகம்."

"மனுநீதிச் சோழரா, யார் அவர்."

"உங்கள் மன்னர் ராஜேந்திரரைப் போல அவரும் இந்த தேசத்து மன்னர். ஆனால் நூறு ராஜேந்திரர் வந்தாலும் ஒரு மனுநீதிச் சோழருக்கு இணையாக மாட்டார்கள்?"

"எப்படி?"

"நாடகம் பாரும் மாலையில் வாரும்?"

"பயமின்றி நமது மன்னரை இழிவாகப் பேசுகிறீர்களே, உங்கள் மன்னர் என்கிறீர்களே, நீங்கள் அவர் குடி மக்கள் இல்லையா? அருண்மொழி கேட்டான்.

"இல்லை" பதில் சொன்னாள்.

"ஏன்? பாண்டிய தேசமோ, ஈழக் கூட்டமோ?"

"நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம். ஏமாப் போம். பிறப்பறியோம்."

"என்ன இது?"

"நாடகம் பாரும், மாலையில் வாரும், இப்போது போக லாம்" வெளியே கை நீட்டினாள்.

அறுவரும் திரைச்சீலை விலக்கி வெளியே வந்தார்கள்.

"யார் இவள், அருண்மொழி."

"பரவை என்று கூறிக் கொண்டார்கள். அந்தப் பெண் கள், திருவாரூர் தலைக்கோலியாக இருக்கலாம்."

"நாமார்க்கும் குடி அல்லோம் என்கிறாளே."

"தளிச்சேரி பெண்கள் இறைவனுக்கு வாழ்க்கையைச் சமர்ப்பித்தவர்கள்...."

"அழகி, ஆனால் என்ன திமிர்...."

"அறிவார்ந்தும் பேசுகிறாள். தர்க்கம் படித்து இருப்பாள் போல..."

“மாலையில் நாடகம் பார்க்கவேணும். அருண்மொழி.”

“தனி இடம் கேட்கவா?”

“வேண்டாம். மக்களுக்கு நடுவே அமர்ந்து பார்ப்போம். நூறு ராஜேந்திரனுக்கு ஒரு மனுநீதி சோழனை மக்கள் எப்படி ரசிக்கிறார்கள், தெரிய வேண்டும்.”

வாயில் வந்து, நிலம் பட வணங்கி, குதிரையேறிச் சுற்றி யுள்ள கிராமங்கள் நோக்கிப் போனார்கள்,

வளம் கொழிக்கும் அந்த பூமியைப் பார்த்து நெஞ்சு பூரிப்பால் நிமிர்ந்தது அந்த மன்னனுக்கு.

# 6

சுற்றுப் புற கிராமங்களைப் பார்த்து விட்டுத் திரும்புகையில் இருட்டி விட்டது. நெடுந்தூரம் குதிரை யில் அலைந்த களைப்பும், தூசும் நீக்க வாய்க்கா லில் இறங்கிக் குளித்தார்கள். மன்னருக்கு இந்த மாறு வேடம் நிலை கொள்ளா மகிழ்ச்சி. துளைந்து துளைந்து இளைஞனைப் போல் குளித்தார்.

கரையேறினார்கள். கழஞ்சு பொன் கொடுத்து ஒரு வீட் டில் சமைத்து வைக்கச் சொன்னார்கள். அருகே உள்ள காளி கோவிலில் அமர்ந்து நீலகங்கனிடம் ஓலைகள் எடுத்து வரச்சொல்லி தான் பார்த்த ஊர் விவரங்களை குறித்துக்கொண்டார். என்னென்ன திட்டங்கள் செய்ய வேண்டும் என்று விவாதித்தார்.

அருண்மொழி தனியே அமர்ந்து கண்மூடி காயத்திரி மந்திரம் சொன்னான். முப்புரி நூல் இல்லாதது மனசுள் உறுத்தலாய் இருந்தது. பேய் வேடம் பூண்ட பிறகு ஆடை

கேட்பது எப்படி? மனசு குவித்து எண்ண அலைகள் அடக்கி ஆழ உள்ளே மூழ்கினான்.

"நம்பி" மன்னர் அழைத்தார்.

"நேரமாகி விட்டது. உண்டு ஆரூர் போக வேண்டும்."

மிளகு தூவிய ரசம், வெல்லம் தூவிய தயிர், அவரையும் மொச்சையும் கலந்து கூட்டு. கேட்டுக் கேட்டு உண்டார்கள். பானை திறந்து சோறு சாய்த்ததும் வெளேர் என்ற அன்னம் பசியை அதிகமாக்கிற்று.

கையலம்பி தாம்பூலம் தரித்து கிளம்பினார்கள். உண்ட களைப்பு குதிரையை மெல்லத்தான் ஓட்ட முடிந்தது. மன்னர் மட்டுமே நாடகம் பார்ப்பதில் முனைப்பாக இருந்தார்.

திருவாரூர் கோயிலுக்கு அருகே போக உள்ளே தீப்பந்த வெளிச்சமும். தாள ஓசையும் கேட்டன. துவங்கி விட்டது போலும். குதிரைகளை கோவில் வாசலில் கட்டி விட்டு வசந்த மண்டபம் நோக்கிப் போனார்கள்.

நல்ல கூட்டம். பெண்கள் பகுதி இடப் புறம் இருக்க, உயர்ந்த மர மேடை முன்னே போடப்பட்டிருந்தது. பின்னே திரைச்சீலைகள் தொங்கியது.

"கைகாள் கூப்பித் தொழீர்..." பதினாறு பெண்களும் அங்கம் அங்கமாய், சொல்லி சிவபெருமானை லணங்கினார்கள்.

இறுமாந்திருப் பன் கொலோ" என்று பாட்டு முடிந்தது. கடவுளால் எப்போதும் எண்ணப்படுகிற நான் இறுமாந்து இருப்பேன். எது குறித்தும் அஞ்சேன், என்று சொல்லப் பட்டது.

விஜயாலய சோழன் முதல் ராசராசர் வரை சோழ சரித்திரம் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. கங்கை கொண்ட ராஜேந்திரரை தனியே பாட்டு சொல்லி வாழ்த்தியது.

சபை வணக்கம் சொல்லப்பட்டது. குற்றம் இருப்பின் பொறுத்தருள வேண்டியது.

வேண்டுதல் முடிய, எல்லா பெண்களும் திரைக்குப் பின்னே போனார்கள். இனிதான் நாடகம் ஆரம்பம்.

பரவை முன் வரிசையில் வாத்தியக்காரர்களுடன் அமர்ந்திருந்தாள். பாட்டு பாடுகிற பெண்கள். குழலூது பவள், உடுக்கை கொட்டுபவள். மேளம் முழங்குபவள் யாவரும் மேடையில் இருந்தார்கள். மேடையிலும் தீப் பந்தங்களை மெல்ல மரப்பலகையால் மறைத்தார்கள்.

மேடை இருட்டாகியது. ஒரு தீப்பந்தப்பலகையை நகர்த்த மீண்டும் மெல்லிய வெளிச்சம் படர்ந்து மேடை நடுவே மனுநீதிச் சோழன் நின்று கொண்டிருந்தான். அவன் மெய்கீர்த்தி சொல்லப்பட்டது. சற்று ராசராசனின் சாயலில் உடை அணிந்லு இருந்தான்.

மனுநீதிச் சோழன் நீதி தவறாதவன், கடைசி குடி மகன் வரை நேரே பேசி குந்றம் குறை களைபவன். எவ்வு யிர்க்கும் தீங்கெண்ணா தவன். சோழ குலத்தின் சுடர் விளக்கு. அவன் ஆட்சியில் மாதம் மும்மாரி பொழிந்தது மக்கள் வளமாய் வாழ்ந்தார்கள்.

ஒருவேளை மன்னனை அணுக ஒட்டாது யாரேனும் அதிகாரிகள் மக்களைத் தடுத்து விடக்கூடாதென்று அவன் பெரிய மணியை அரண்மனை வாசலில் கட்டிந் தொங்க விட்டிருந்தான்.

அந்த மணி அசைந்தால், ஒலி மன்னன் செவிகளுக்கு எட்டும். உடனே அசைத்தவனை அழைத்து குறை கேட்கப்படும்.

ஆனால் அந்த மணி அசையவே இல்லை.ஏன்? மக்க ளுக்கு குறையே இல்லை. மாற்றரசனை வெற்றி கண்டு

அவவன அரண்மனை வாசலில் கழுவேற்றியது போல் மணி அசையாது தூசு படிந்திருந்தது.

மனு நீதிச் சோழன் வீரன். உண்மையான வீரன் அவன் அநீதியைக் கொன்று வாசலிலேயே மாட்டி வைத்திருக் கிறான். அவன் வறுமையைக் கொன்று அரண்மனை வாயிலில் நிற்க வைத்திருக்கிறான். எல்லா வகை குடிக ளின் வேதனைகளையும் அழித்து அசையாத மணியாக நிறுத்தியிருக்கிறான்.

அந்த மணி அசையவேயில்லை பன்னெடுங்காலமாக.

ஆனால் விதி வலிது.

அந்த அரசனுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான், செல் லமாய் வளர்ந்த பிள்ளை... வேறு வாரிசு யாருமில்லை. அவன் சகோதரிகளை குச்சியால் அடித்தான். சேடிப் பெண்களைத் துன்புறுத்தினான். பெரியவர்களை ஏசி னான். மன்னவன் நல்லவன் எனினும் பிள்ளை பாசத் தால். தடுமாறினான்.

“வீட்டில் இருந்தால் தானே வம்பு போருக்குப் போ” என்று கட்டளையிட்டான். மரணம் பார்த்தாவது மனசு மாற மாட்டானா என்று நினைத்தான், வகையான படை யுடன் போருக்குப் போன பிள்ளையின் வக்கிரம் இன் னும் அதிகரித்தது. கள் குடித்த குரங்கை தேள் தீண்ட கை அடங்காது ஆட்டம் போட்டது. தேசங்கள் எரியூட் டப்பட்டன. மாற்றரசர்கள் சிறைப் படுத்தப்பட்டார்கள். அவர்கள் மனைவியரை கூந்தல் பிடித்து இழுத்து வந்து அம்மன்னர்கள் எதிரேயே படைத் தளபதிக்கு பரிசளித் தான். அவன் போர் வெறியால் மக்கள் துன்பப்பட் டார்கள். கணவனும், மனைவியும் பிரிந்தார்கள். தாயும், சேயும் திசைமாறிப் போனார்கள் தமக்கையும், தங்கை யும் பங்கு போடப் பெற்றார்கள், ஆந்தைகள் மிரண்டு நாலா திசையும் ஓடின. கொடிய மிருகங்கள் அஞ்சிப்

பதுங்கின. படைகள் - குறுக்கும் நெடுக்கும் நடந்து நிரந்தரமாய் தூசுப்படலம் பூமியை மூடியது. செடி கொடிகள் துவண்டன. நீர் கலங்கியது எங்கும் மரண ஓலம். கொக்கரிப்பு. அந்த இளவரசனுக்கு ஒரு அத்தை இருந்தாள்.

"இதுவா - வாழ்க்கை. இதுவா நாகரீகம். இதற்காகவா நீ இளவரசனானாய்? மாற்றரசர்கள் வலிவை குறைக்கலாமே தவிர மனித நாகரீகத்தை அழிப்பதா. மன்னரோடு தான் சண்டைதானே தவிர மக்களோடா, வீரர்களுக்கு இடையேதானே தவிர, பெண்டுகளை சிறைபிடித்தலா."

அழைத்து சபையில் நிந்தித்தாள்.

இளவரசன் பதிலுக்கு சீறினான், அத்தையை கேலி செய்தான். அலட்சியப்படுத்தினான்.

ராஜேந்திர சோழர் இமை கொட்டாது நாடகம் பார்த்துக் கொண்டிருந்தார். அருண்மொழிக்கு வயிறு கலங்கியது. இது தவறாய் முடியும் என்று தோன்றியது.

சந்தையில் பெண்ணடிமைகள் விற்கப்பட்டனர். வீரர்கள் குடித்து விட்டு வீதியில் புரண்டார்கள். குல மாதர்கள் கண்களில் நீர் பொங்கியது. குழந்தைகள் கவனிப்பாரின்றி ஆடினார், ஐந்து வயதுத் தங்கையை ஏழு வயது அண்ணன் தலைமுடியைப் பற்றி 'ஹா... ஹா...' என்று சிரித்தான். தேசம் முழுவதும் துயர் சூழ்ந்தது.

"நிறுத்து... இதை" யாரோ எழுந்து சப்தமிட்டார்கள். எல்லா தீப்பந்தங்களும் ஒளி பெற்றன.

ஐம்பது வயது ஆள் கூட்டத்தில் நடுவே எழுந்து நின்று கூச்சலிட்டான்.

"என்ன நாடகம் இது. யார் எழுதியது இதை?"

"ஏன். நானெழுதினேன். என்ன அதற்கு..." பரவை எழுந்து கூட்டம் பார்த்து பதில் சொன்னாள்.

“நமது மன்னர் ராஜேந்திரரை அவமதிப்பது போல் இருக்கிறது. பெயர் சொல்லாது ராஜேந்திரரை இந்நாடகம் குற்றம் சொல்கிறது.”

“எனக்கும் அப்படித்தான் தோன்றியது. கிழவன் பெருங்கூத்தன் சொல்வது உண்மை.” கூட்டத்தில் சலசலப்பு எழுந்தது.

‘இல்லை...ஆமாம்’ என்கிற வாதப் பிரதி வாதங்கள் எழுந்தன. ஆடிய பெண்கள் திரைக்குப் பின்னே ஓடினார்கள்.

“இது மனு நீதி சோழ நாடகம்” பரவை, கூட்டம் பார்த்து சீறினாள்.

“மனு நீதிச் சோழன் கதை எனக்குத் தெரியும். கன்றின் மீது தெரியாமல் தேரோட்டிய மகனை அவன் தண்டித்தான் என்றுதான் படித்திருக்கிறேன். இப்படி மகளிரை அவமானப்படுத்தும் சிறுவன் என்று யார் சொன்னது உனக்கு” கிழவன் இரைந்தான்.

"ஓ... அதை வைத்துத்தான் இதை ராஜேந்திரர் கதை என்று கண்டுபிடித்தீரோ.”

கூட்டம் சிரித்தது. கிழவன் வெகுண்டான்.

“அத்தைக்கும் - இளவரசனுக்கும் – சண்டை - என்கிறாயே.”

“அதனால் என்ன?”

“மன்னர் ராஜேந்திர சோழருக்கும், அவரது அத்தை குந்தவை பிராட்டிக்கும் மனத்தாங்கல் என்பது ஊரறிந்த ரகசியம்.”

“நான் ரகஸ்யங்களை நாடகமாக்குவதில்லை. சரித்திரங்கள் தான் என் காவியம்” பரவை எச்சரித்தாள்.

வேறொரு ஆள் எழுந்து வாள் உருவினான்.

“இந்த நாடகம் இதற்கு மேல் தொடர்ந்தால்...”

“சீவி விடுவீரோ" சீறினாள்.

“இரு. பெண்ணிடம் வாள் - உருவிப், பேசாதே. அம்மணி, உன் நாடகத்தில் குற்றம் இருக்கிறது" கிழவன் பெருங் கூத்தன் அமைதியாய் பேசினான்.

“சிவனார் எழுதிய கவிதை முழுவதும் சொல்லிய பிறகே நக்கீரன் குற்றம் சொன்னதாகக் கேள்வி. நாடகம் முடிய வில்லை.”

“ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.”

“நானும் பழமொழி சொல்ல முடியும். குருடர்கள் பார்த்த யானையாய் நீங்கள் மிரளுகிறீர்கள் என்று சொல்ல முடி யும். கருத்துக் குருடர்கள் என்று சுட்டிக் காட்ட முடியும்”

“நான்கு தினங்களுக்கு முன் அரசவையில் குந்தவை பிராட்டிக்கும், ராஜேந்திரருக்கும் வாக்குவாதம் என்று சேதி வந்தது”

“நான் அரண்மனை நாட்டியக்காரியல்ல. வீதி விடங்க ருக்கு என்னை அர்ப்பணித்தவள். திருவாரூர் தியாகரா சன் தளிச்சேரி பெண் தேவரடியார்.”

“அதனால் எதைப் பற்றியும் எப்படியும் பேசலாமோ?”

“இது ஒரு கவி உத்தி. காவியச் சிறப்பு. மனு நீதிச் சோழன் மகனைத் தேர் ஏற்றி கொன்ற காரணம் என்ன வாய் இருக்கும் என்பது என் கற்பனை”

“ஏனம்மா, நீ ராமகாதை நாடகம் போட்டால் ராவணனை நல்லவன் என்றும், ராமனைக் கெட்டவன் என்றும் சொல்வாயா?"

“இதுவரை அப்படி எண்ணமில்லை. இனிமேல் எழுதி னாலும் தவறில்லை."

“என்ன...என்ன... தெய்வ நிந்தனையும் செய்வாயா?”

“கவி எழுதுபவருக்கு வானளாவிய அதிகாரம் உண்டு. கண்ட காவியங்கள் வடமொழியில் இருக்கின்றன.”

“இவள் திமிர் பிடித்தவள். சோழர் குல துரோகி.”

“தெய்வ நிந்தனையும் செய்வாளாம்.”

“இனி இந்த நாடகம் நடத்தப்படவே கூடாது.”

மூலைக்கு மூலை கூச்சல்கள் எழுந்தன.

“ராம காதையில் என்ன மாற்றுவாய். பரவை?”

"ராமர் சீதையை தீக்குளிக்க பணித்ததை கேலி செய்வேன். உடன் கட்டை ஏறுவதை தவறு என்று சொல்வேன்.”

“குலப் பெண்கள் குமுறலை தேவரடியார் தெரிந்து கொள்ள முடியாது. எல்லோருக்கும் சூல இலச்சினைக் குத்தி தேவரடியாராகவும் மாற்ற முடியாது.''

“நீங்கள் மாற்றியிருக்கிறீர்கள்."

“என்ன சொல்கிறாய் நீ...?”

“மாற்றரசர் பத்தினிகளை, குலப் பெண்களை கட்டி இழுத்து வந்து உங்கள் படைகளுக்கு ஏவல் செய்ய விட்டு அவர்களுக்கு வீரர்கள் மூலம் குழந்தைகள் கொடுத்து... சோழர் நாகரிகம் தானே இது. குலப்பெண்கள் சோழரில் மட்டும் தானா, பாண்டியரில் இல்லையா. சாளுக்கியரில் கிடையாதா.”

கூட்டம் வாயடைத்தது.

“இவள் ராஜத் துரோகி. இவளைப் பேசவிடாதீர்கள். இந்த நாடகம் நடைபெறக் கூடாது. எழுதியவளை சும்மா விடக்கூடாது" கூச்சல் எழுந்தது. வாட்கள் உருவப்பட்டன ராஜேந்திரர் தீவிரமாக யோசித்தார்.

“மன்னர் தலையிட வேண்டும்” அருண்மொழி காதோரம் சொன்னான்.

“அமைதி” ராஜேந்திரர் குரல் கம்பீரமாய் சபையைத் திருப்பிற்று.

மன்னர் மேடையேறினார்.

“சபைக்கு என் வணக்கம். நாடகக் குழுவினர்க்கும் எழுதிய கவிக்கும், என் மரியாதைகள், என் அன்பு மக்களே, என் பெயர் பரஞ்சோதி. தஞ்சையில் தெரிஞ்ச கைகோளப் படையின் ஏழாவது உபதளபதி. இவர் நம்பி. என் படையின் குதிரைச் சேவகர். திருவாரூர் வீதி விடங்கப் பெருமானுக்கு நேர்ச்சை செய்ய விரும்பி இங்கு வந்தோம். நாடகம் கண்டோம்.

அவர் பெயரென்ன, கிழவன் பெருங்கூத்தன். அவர் குற்றச்சாட்டு இது-ராஜேந்திரர் கதைபோல் இருக்கிறதே என்பது. இது சரியில்லை என்பது என் எண்ணம். சற்றுப் பொறுங்கள்.

“நான் பிரம்மராயரிடம் நேரிடையாய் வேலை செய்பவன். மன்னரோடு பல போர்கள் போனவன். குந்தவைப் பிராட்டியிடம் பலமுறை பேசியிருக்கிறேன். ஏனெனில் எனக்குப் பயிற்சி அளித்தது. வல்லவரையர் வந்தியத்தேவர் எனக்கு அரசவையில் ஒரு இடமுண்டு. அத்தை குந்தவைக்கும், மருமகனார் ராசேந்திரருக்கும் சிறு பிணக்கு கூட இல்லை.”

கூட்டம் மறுத்தது.

“அமைதி. ஆனால் அரசவையில் காட்டமான விவாதங்கள் நடப்பதுண்டு. உங்கள் கிராம சபையில் ஒரு திட்டம் நிறைவேற விவாதம், வாதப் பிரதிவாதம் வருவதில்லையா சர்ச்சை நடப்பதில்லையா. அரசவை என்பது அரசன் அவையல்ல. அரசாங்க அவை. வெட்டிப்

பேசுதலும், ஒட்டிப் பேசுதலும் நடக்கும். சமீபமாயும் இது நடந்தது என்பது உண்மை. இதனால் பிராட்டியாருக்கும் மன்னருக்கும் மனத்தாங்கல் என்பது கற்பனை. கொஞ் சம் கட்டுக் கதை. ஒரு உபதளபதி என்கிற நிலையில் இருந்து இதை இங்கே சொல்வது என்பது என் கடமை. இரண்டாவதாக. ஒரு கவிஞர் தனது படைப்பு முழுவ தும் சொல்லும் முன் அவரை நிறுத்தி அவர் படைப்பை மறுத்து தடுத்தல் கலைமகளுக்கு செய்யும் அவமானம். சோழ குடி மக்கள் அறிவாளிகள். அகங்காரர்கள் அல்ல.

அப்படி குற்றம் இருப்பினும் நயமாய் இடித்துரைத்தல் முறை. படைப்பை புறக்கணித்தல் தண்டனை. இங்கே வாள் உருவ முற்பட்டவர்கள் உணர்ச்சி வசப்பட்டவர் களே தவிர, விவேகம் உள்ளவர்களாக மாட்டார்கள். ஒரு கவிஞன் மன்னரை, தெய்வத்தை, மக்களை இடித் துரைக்கலாம்.

ஏன் திருவாரூர் தியோகேசுவரரை வாழ்ந்ததே போம் நீரே என்று சுந்தரர் கோபித்துக் கொள்ளவில்லையா. நீங்கள் மட்டுமே நன்றாய் இருங்கள் என்று அலுப்பு டன் பதிகம் பாடவில்லையா. கடவுள் நிந்தனை என்ற பெயரா இதற்கு இது கவி நயம்."

"நாடகம் என்ன சொல்கிறது என்பதை நாம் பொறுமை யுடன் கேட்க வேண்டுமே தவிர, குழப்பம் உண்டாக்கு வது நல்லதல்ல."

"மன்னரைக் குற்றம் சொல்வதை உம்மால் பொறுத்துக் கொள்ள முடியுமா."

"முடியாது. இந்த நாடகம் தவறாய் இருப்பின் தடை செய் யப்படும். இது இயக்கிய, ஆக்கிய கவிஞர் பற்றி அரச ருக்கு தகவல் போகும். தண்டிப்பது மன்னர் விருப்பம். அது நம் வேலையல்ல. எனவே நாடகம் தொடர்ந்து நடத்தும்படி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்."

"உட்காருங்களய்யா. பாதி சோற்றில் பருப்பு வேக வில்லை என்று எழுந்திருக்கிறீர்களே."

"அதைத்தான் சொல்கிறேன். இதையே ஜீரணிக்க முடி யவில்லை, மிச்சமும் பார் என்றால்..."

"கலை சோறல்ல தம்பி, சிந்திக்க வைப்பது. சிந்தனைக் குப் பொறுமை அடிப்படை. உட்கார்." ராஜேந்திரர் அதட் டினார்.

கூட்டம் கட்டுப்பட்டது.

மறுபடி பந்தங்கள் பலகையால் மறைக்கப்பட்டன.

ஒரு நாள் ஒரு பசு கண்ணீருடன் மணி அசைத்து இழுத் தது. நகரமெங்கும் ஒலி பரவிற்று.

மன்னன் ஓடோடி வந்தான். தன் மகனது தேரின் கால் பட்டு சிதைந்த கன்று எடுத்து அழுதான். எழுந்தான். பசு வேதனையுடன் கதறிற்று. நாடகம் பார்த்தவர்கள் கண் கள் கலங்கின.

"உன் குழந்தையை இழந்து நீ எப்படி தவிக்கிறாயோ, அதைப்போலவே இதைச் செய்தவன் தகப்பனும் தவிப் பான் உன் குழந்தை எப்படி இறந்ததோ அதே போல் இதைச் செய்தவனும் இறப்பான். இது சத்யம்" மகனைப் பிணைத்து வர கட்டளையிட்டான்.

மகன் திமிறித் திமிறித் தந்தையிடம் வந்தான்.

"நான் உன் மகன். உம்முடைய ஒரே வாரிசு, எப்படிப்பட்ட மனசு வந்தது உமக்கு."

"இல்லை. நீ என் பிள்ளை இல்லை. நீ குற்றம் புரிந்தவன். நான் நீதிபதி."

"நீர் நீதிபதியா... சுய நலமுள்ள தகப்பன்."

"எப்படி?"

“உன் நீதி கண்டு பார் புகழ பரவ வேண்டும். உம்மை மனுநீதிச் சோழன் என்று பலர் கூப்பிட வேண்டும். அது கேட்டு நெஞ்சு பூரிக்க வேண்டும் என்கிற சுய நலம் உமக்கு. சொந்த சுகத்துக்காக மகனை பலி கொடுக்கும் சுய நலம்”

“இல்லை மகனே. மனுநீதிச் சோழன் என்கிற கர்வத் துக்கு நான் ஆசைப்படவில்லை. நான் அரசன். சரி கன்று தானே ஒழிந்து போகட்டும் என்று நான் சொன் னால் எனக்கு கீழே உள்ள அமைச்சன் பசுவையே கொல்வான், என் தளபதி எவர் மகனையாவது கொல் வான். தளபதியின் சேவகன் எவன் பெண்ணையாவது அடிப்பான். குடிமக்கள் எதுவும் செய்வார்கள்.

மன்னன் என்பவன் ஒரு முன் மாதிரி, மகனே. என் பிள்ளையை நானே தேர்க்காலில் கட்டிக் கொல்ல, என் அதிகாரிகள் குற்றம் செய்ய அஞ்சுவார்கள். கள வாடவோ, கையூட்டு பெறவோ பயம் கொள்வார்கள். பிள்ளையைக் கொன்ற மன்னன் என்ன செய்வானோ என்று அஞ்சுவார்கள். மன்னனுக்கு சொந்த பந்தம் மக் களே. பட்ட மகிஷியோ, இளவரசனோ, அத்தையோ, மாமனோ தளபதியோ முக்கியமில்லை. அவனுக்கு சொந்த வெறுப்பு விருப்பு இல்லை. மன்னனின் வாழ்வு கத்தி முனையில் நடப்பது அதில் சுகமில்லை.

"உன் கள் வெறியால் தேர்க்கால் பட்டு கன்று சிதைந்தது போல, என் தேர்க்கால் பட்டு நீ சிதைய வேண்டும் படு.”

இளவரசன் மெல்ல தலை நிமிர்ந்தான்.

“புரிந்தது மன்னரே. என் தவறு புரிந்தது. நான் ஒரு பெண்ணைத் தீண்ட என் ஆயிரம் ஆயிரம் படை வீரர் கள் ஊரில் எல்லாப் பெண்டிரையும் தீண்டினார்கள் நான் மாற்றரசர்கள் அரசவை எரித்தேன். என் வீரர்கள்

ஊரையே எரித்தார்கள். நான் மிக மோசமான முன்மா திரி, புரிகிறது தந்தையே."

படுத்த இளவரசனை நோக்கி தேர் பறந்து வந்தது. அவன் உடல்மீது ஏறி துள்ளி சிதைந்து விழும்படிச் செய் தது.

ஐயோ என்று நாடகம் பார்த்த ஜனங்கள் கண் பொத் திக் கொண்டார்கள். அரசே என்று கதறினார்கள். குழல் அழுதது. மரண பேரிகை முழங்கியது. நீண்ட தாரைகள் சோகம் சொல்லின.

மன்னன் தள்ளாடி நடந்து சோகத்தால் மூர்ச்சையா னான்.

மத்தளம் முழங்கியது. வரிச்சங்கு பொங்கியது. ஓம் மென்ற மந்திரம் பரவியது. புகையெழுந்தது. தீவெட்டி கள் ஒளி மங்கியது இருட்டாகியது.

மெல்ல ஒரு பந்தம் எழுந்து வர, திரைச்சீலைக்குப் பின் நிழலுருவாய் சிவனும், உமையும் ஒரு பனை உயரத் துக்கு நின்றார்கள்.

'மகா தேவா, சர்வேஸ்வரா' மன்னன் எழுந்து அலறி னான்.

'அமைதி மனு நீதிச் சோழனே, அமைதி. உன்னை நாம் சோதிக்க விரும்பினோம்.' உமையவள் மென்குரலில் பேசினாள்.

நாமும் சிவனாருமே பசுவும், கன்றாகவும் வந்தோம். உற வைவிட, பாசத்தைவிட நீதியே முக்கியம் என்பதையும், மக்களே மன்னனின் முதன்மைப் பொருள் என்பதை யும், எல்லா உயிரும் சமம் என்பதையும் உம் வாழ்க்கை மூலம் உலகுக்குச் சொன்னோம். கடைசி வரை நிலை மாறாத உமது புகழ் சந்திராதித்தர் உள்ள வரை இப் புவியில் இருக்கும், சோழர் குலம் உயர்வாய் பேசப்ப

டும். உமது மகன் எழுவான். வாழ்க மனு நீதிச் சோழன். வாழ்க சோழர் குலம். வாழ்க நீதி நெறி'.

பளீரென்று சில தீப்பந்தங்கள் உயிர் பெற்றன.

இளவரசன் துள்ளியெழுந்து சிவனாரையும், உமையவளையும் வணங்கினான்.

சபை நோக்கிக் கும்பிட்டான். சபை சிலிர்த்து எழுந்தது "வாழ்க ராஜேந்திர சோழர். வாழ்க சோழர் குலம். வாழ்க புலிக்கொடி" என்று கூவிற்று. உணர்ச்சி வசப்பட்டு இடைவிடாது குரல் கொடுத்தது.

மன்னர் உடம்பு சிலிர்த்தது. கூட்டம் விட்டு விரைவாய் வெளியே ஓடினார், குதிரையில் தாவி ஏறினார்.

சேணம் சொடுக்கி இருளில் விரைந்தார். அருண்மொழியும், மற்றோரும் அதே வேகத்தில் மன்னரைப் பின் தொடர்ந்தார்கள். நீலகங்கனையும், தென்னவனையும் "அங்கே இருங்கள். பரவைக்குத் துணையாய் இருங்கள்" ஓடியபடியே அருண்மொழி கட்டளையிட்டான்.

மன்னர் அடர்ந்த சோலைக்குள் புகுந்து குதிரையை நிறுத்தினார்.

அவர் காதுகளில் ராஜேந்திரர் வாழ்க என்ற கோஷம் இன்னமும் ஒலித்தது.

"அருண்மொழி... அருண்மொழி என் மக்கள் என் மீது கொண்ட காதலைப் பார்த்தாயா. இளவரசன் துள்ளி எழ என் பெயர் சொல்லி... அருண்மொழி இந்த அன்புக்கு என்ன கைமாறு செய்வேன்."

மன்னர் அழுதார். தவித்தார். இடதும் வலதும் அலைந்தார்.

"அருண்மொழி, அந்த நாடகம் என்னைக் குறித்து போடப்பட்டிருக்கிறதே."

“ஆம் அரசே.”

“அது நானா அருண்மொழி.”

அருண்மொழி பேசாதிருந்தார்.

மன்னர் அலைந்தார். யோசிக்க வேண்டும். யோசிக்க வேண்டும். மன்னன் ஒரு முன் மாதிரி. அவனுக்கு சொந்த பந்தம் இல்லை... அவன் ஒரு தவறு செய்தால் அவன் படை ஆயிரம் தவறு செய்யும். உண்மையா...யோசிக்க வேண்டும். மனது குழறிற்று.

“அருண்மொழி...”

“அரசே...”

“என்னை விட்டுப் போ. தனியே விடு. அவளைப் போய்ப் பார்.”

“யாரை.”

“பரவையை. மக்கள் அவளுக்கு ஊறு செய்யாமல் தடு, போ.”

“நான் நீலகங்களையும், தென்னவனையும்...”

“நீ போ அருண்மொழி. மாறன் துணை போதும் எனக்கு போ உடனே. அவளையும், நடனப் பெண்டிரையும் பாது காத்து இருப்பிடம் சேர்த்துவிட்டு வா.”

“இது என் கட்டளை.”

அருண்மொழி குதிரையேறினான். கோவில் நோக்கி, திரும்பினான். சோலை விளிம்பு வர... மெல்லிய சீழ்க்கை ஒலி கேட்டது. மரத்தின் பின்னே ஒரு உருவம் நின்றது

# 7

மரத்தின் மறைவிலிருந்து நீண்ட சட்டையும் சுருள் மீசை தலைப்பாகையுமாய் ஆள் வெளியே வந்தான்.

அருண்மொழியின் கைகள் வாள் மீது பதிந்தன.

"நந்தி புலம்புகிறதோ நாடகம் பார்த்து விட்டு."

ஓ... இது அதிகாரிச்சி முத்தான பொன்னங்கை. இங்கு வந்து விட்டாளா. என்ன வேலைக்கு செய்தி சொல் லவா? வேவு பார்க்கவா?

"என்ன மறுமொழி சொல்லக் காணோம்."

"பச்சைப் பட்டு இருட்டில் தெரியாது. அருகே வா, என்ன விஷயம்."

"பரவையை அதிகம் மன்னரிடம் நெருங்கிப் பழக விட வேண்டாம் என்று பிராட்டி எச்சரிக்கச் சொன்னார்கள். மன்னரைத் தனித்துவிடல் கூடாது என்றார்கள்."

"இது ஒரு மானங்கெட்ட வேலை எனக்கு."

"நூறு மரக்கலம் கட்ட அதிக ஆட்கள் வேண்டும். ஆட் கள் திரட்டி நாளைக்கு கொண்டு வர பயிர் வேலை கள் நிற்கும். எனவே இவ்வருட வரிவிதிப்பு தளர்த் தும்படி உத்தர விடலாமா என்று பிரம்மராயர் கேட்டு வரச் சொன்னார். நாடகம் அற்புதம் இல்லை. அப்படியே ராஜேந்திரர் வரலாறு."

"ஏய்... உன் வேலை செய்தி சொல்வது, முடிந்து விட்ட தா...போ. இடத்தை விட்டு நீங்கு."

"உன்னையும் ஒரு பாத்திரமாக கொண்டு வந்திருக்க வேண்டும். பூணூல் கழற்றி எறிந்த உத்தமச் சோழ பிரம்

மராயர். வீர அந்தணர் என்று." பளீரென்று ஒரு அறை பொன்னங்கை கன்னத்தில் இறங்கியது. அவள் தடுமாறி கன்னம் பொத்தினாள்.

"குந்தவை பிராட்டி அதிகாரிச்சியெனில் கொழுப்புடன் பேசி விடலாமா... இன்னொரு முறை ராஜேந்திரரை கேலி செய்தால் சவுக்கு பிய்ந்து விடும். அந்தணன் என்று கேலியா, எப்படியிருக்கிறது அறை."

"இன்னுமொரு செய்தி உண்டு."

"சொல்."

"உம்மைப் பற்றியது."

"சொல்."

"உனக்கு மகிழ்ச்சி தரக் கூடியது."

"சொல் உடனே."

"சேனாதிபதி சோழ மண்டலத்து உய்ய கொண்டார் வள நாட்டு, வெண்ணாட்டு, அமண்குடியான் கேதளாந்தகச் சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீகிருஷ்ணன் ராமனான் மும்மு டிச் சோழ பிரம்மராயருக்கு...."

"என்ன பிரம்மராயருக்கு."

"புரட்டாசி உத்திரத்தில் விடிகாலை மூன்று நாழிகைக்கு பேரன் பிறந்திருக்கிறான், தாயும் சேயும் நலம்."

"பொன்னங்கை."

"உமக்கு மக்கு மகன் பிறந்திருக்கிறான்."

அருண்மொழி அவளைத் தாவிப் பற்றிக் கொண்டான் சொல் பொன்னங்கை, நீ பார்த்தாயா, பார்த்தவர் சொன் னதைச் சொல்கிறாயா."

"உமது மகனை நமது திருக்கரங்களால் நாம் தூக்கி னோம். முத்தமிட்டோம்."

அருண்மொழி பரவசமாகி அவள் கரங்களை. முத்த மிட்டான், சர்வேஸ்வரா என்று வானம் பார்த்தான்.

“சீதை எப்படியிருக்கிறாள்.”

“வாடிய கொடியைப்போல. சுகமான பிரசவம். நோவு அதிகமிருந்ததாம். நான் உம்மை நோக்கி போகிறேன் என்றதும் கட்டிக் கொண்டார்கள். இப்போது நீரும் கட்டிக் கொள்கிறீர்.”

“பொன்னங்கை, உனக்குப் பரிசு அளிக்க என்னிடம் ஏதுமில்லையம்மா.”

“அம்மா வா... ஐயன் பரிசு தந்துவிட்டீரே.”

“எப்போது.”

“வகையாய் கன்னத்தில் ஒன்று கொடுத்தீரே போதாது?”

“மன்னித்துவிடு பொன்னங்கை.'

“பரவாயில்லை ஐயன். மன்னர் வாழ்க்கை மட்டும் கடினமான தல்ல. மன்னருக்கு கீழ் பணிபுரியுய் அதிகாரிகள் வாழ்வும் கடினம்தான். சீதைக்கு சேதியுண்டா.'

“இது வீதிவிடங்கர் பிரசாதம். ஆரூரான் பேர் சொல்லி அவளிடம் கொடு.” வாழை மட்டையில் மடிக்கப்பட்ட விபூதியைத் தந்தான். பொன்னங்கை கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

“இதை மன்னரிடம் எப்படிச் சொல்லுவேன். உன் சந்திப்பு ரகசியமாயிற்றே.”

“நாளை வணிகர் மூலம் மன்னருக்கு இச்செய்தி வரும் பிரம்மராயர் ஆள் அனுப்பிவிட்டார்.”

"நல்லது.”

“நான் வருகிறேன் ஐயன், ஒரு வேளை தஞ்சைக்கு வந்தால் இவளிடம் கருணை கொண்டு சில கழஞ்சு

கள் கொடும்." மெல்ல இருட்டில் நடந்து மறைந்தாள தொலைவே குதிரை குளம்படி நகர்ந்து மறைந்தது. -

சோழ தேசத்தில் பெண்களின் பங்கு ஏகமாய் வளர்ந்து விட்டது. இது நல்லதா கெடுதலா தெரியவில்லை.

கோவிலில் கூட்டம் கலைந்து விட்டிருந்து. பரவை வீடு போய் விட்டதாய் தெரிந்தது. அவள் இருப்பிடம் விசாரித்துக் கொண்டு போனான்.

பெரிய திண்ணைகளும் உயரமான நிலைக் கதவுகளும் கொண்டு ஓட்டு வீடு. வாசலில் கிராம அதிகாரியும் காவலனும் நிற்பது தெரிந்தது.

"இதோ குதிரைச் சேவகர். உபதளபதி எங்கே."

"உறங்கப் போய்விட்டார். என்ன விஷயம்."

"அவருக்கு நன்றி சொல்ல வேணும். இல்லையெனில் நல்லதொரு நாடகம் பார்க்க முடியாமல் போயிருக்கும். கிழவன் பெருங்கூத்தன் பரவை காலில் விழுந்து அழுது விட்டார்." -

'பரவையார் எங்கே."

"உறங்கப் போய்விட்டார்கள்."

மறுபடி குதிரையேறி திரும்பியபோது வீதிமுனையில் கங்கன் வழிமறித்தான்.

"என்ன கங்கா?"

"பரவையார் உங்களிடம் தனித்துப் பேச வேண்டுமாம். வீட்டில் கொல்லைப்பகுதியில் காத்திருக்கிறார்கள். குதிரை வேண்டாம். சுற்றி நடந்து போய் சுவர் ஏறிக் குதிக்க வேண்டும்."

"எந்தச் சுவர்"

“உங்களை வரச் சொல்கிறார்கள். அவர்களே அழைப் பார்களாம்.”

சுற்றி வீடுகளின் பின்பக்கமாய் நடக்க, “நந்திதேவர் நலமா” என்று குரல் கேட்டது.

“பச்சைப் பட்டு இருட்டில் தெரியாது.” பதில் கொடுத் தான்.

“சுவர் ஏறி வாரும்.” மறுபடி குரல் கேட்டது.

ஏறி குதிக்க, பரவை நின்று கொண்டிருந்தாள் அருகே தென்னவன் கைகட்டி நின்றிருந்தான்.

“தென்னவன் நீ வெளியே இரு.” அருண்மொழி கட்ட ளையிட்டான்.

தென்னவன் வாசல் நோக்கிப் போனதும், பரவையை வணங்கினான்.

“மும்முடிச் சோழ பிரம்மராயர் மகன் உத்தம சோழ பிரம் மராயர் வரவு நல்வரவாகுக. முகம் மலர்ந்திருக்கிறதே. நாடகம் பார்த்த மகிழ்ச்சியா.”

“அது மட்டுமில்லை, பரவையாரே”

“வேறு எது.”

“எனக்கு மகன் பிறந்திருக்கிறான். சற்றுமுன் சேதி கிடைத்தது.”

“வாழ்க பிரம்மராயர் குலம். தாயும் சேயும் நலமா.”

“நலம்.”

“யாரடி அங்கே...அதிமதுரம் எடுத்து வா.”

ஓலைக் குடுவையில் அதிமதுரம் வர, ஒன்று எடுத்து வாய் திறவுங்கள் என்றாள். அவன் வாயில் போட்டாள். இனித்தது மனசு முழுவதும் இனித்தது. தானும் போட் டுக் கொண்டாள்.

"என்ன நட்சத்திரம்"

"புரட்டாசி மாதம் உத்திர நட்சத்திரம்." -

"அடேயப்பா-வளர்பிறை உத்திரம் கவிபாடும். நாடகம் பிடித்திருந்ததா அவருக்கு?'

"மனசு நெகிழ்ந்து தனியே உட்கார்ந்திருக்கிறார்."

"ஒருவேளை என்னைத் தேடினால் செங்கழு நீர் ஓடைக்குக் கூட்டி வாரும். வாயாடினேனே தவிர அவர் மன்னர் என்கிற பயம் உடம்பெல்லாம் இன்னும் இருக்கி றது."

"நாடகத்தில் காட்டிய மன்னர் அதீதம். நமது மன் னர் இளகிய நெஞ்சு கொண்டவர். இதுவரை சிகை பிடித்து எந்தப் பெண்ணையும், அவர் இழுத்துப் பார்த்த தில்லை."

"குடிபடைகள் செய்யும் தவறு மன்னர் தலையில் தான் விழும். என்ன சொல்கிறார் என்னைப் பற்றி."

"வியந்து போற்றுகிறார்."

"ரசனை உள்ளவருக்கு வியப்பு இருக்கும். வியப்புள்ள வர்களை விவேகமுள்ளவராக மாற்றி விடமுடியும் ரச னையற்றவரை மாற்றுவதுதான் கடினம்.''

"அப்போது நான் விடைபெறுகிறேன். சொல்ல மறந்து விட்டேன். சரபன் தொண்டவையைச் சந்தித்தேன்.''

"அப்படியா நலமா? நானும் கேள்விப்பட்டேன் நீங்கள் அவரை தாயாய் போற்றுகிறீர்கள் என்று. இந்த பாட்டு, நாட்டியம். கவித்திறன் அவர் போட்ட பிச்சை. யாரும் கவனிக்கும் முன் போய் வாருங்கள்."

சுவரேறி சோலைக்குத் திரும்பினான். மன்னர் குதிரை சேணத்தை தலையணையாக்கி மேல் பட்டையை தரையில். விரித்து கண்மூடி உறங்கிக் கொண்டிருந்தார்.

அருண்மொழிக்கும் தூக்கம் வந்தது. தூக்கத்தில் இனி மையான கனவுகள் வந்தது. -

விடிந்த பிறகு ஓடைக்குப் போகும் வழியில் திருவாரூரில் ஒரு வீடு வாங்கும்படி மன்னர் கட்டளையிட்டார். காலை கோயிலுக்குச் சென்று இருபத்தைந்து கழஞ்சு பொன் முதலீடு செய்து அதை வட்டிக்கு விட்டு அந்தக் காசில் தினமும் விளக்கெரிக்க இலுப்ப எண்ணை வாங்க என்று பட்டயம் எழுதினார்.

காலைப் பூஜைகள் முடிந்து வெண் பொங்கலும், வெள்ளை அப்பமும் பிரசாதமாய் தர அங்கே உண்டு விட்டு நாடகம் நடந்த இடத்தில் உலாவினார். அவர் நெஞ்சுக்குள் ஆயிரம் கேள்விகள் புரண்டு கொண்டிருப்பதை முகம் காட்டிற்று.

பரவை, உச்சிக்கால பூஜைக்கு வந்து கோவில் வலம் வர, கை கூப்பினார்.

“நேற்றே சொன்னேனே. கோவில் மனிதர் மனிதரை வணங்கும் இடமல்ல என்று.”

“உண்மை.”

“பிறகு.”

“நான் மனிதரை வணங்கவில்லை.”

“ஏன்... நான் மனுஷியில்லையா?”

“இல்லையென்று படுகிறது. குழந்தையின் உள்ளம், கவியின் நாக்கு, அறிவு முதிர்ந்தோரின் புத்தி, ஞானியின் கை. இங்கே கடவுள் வசிக்கிறார் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்.”

“இருபத்தெட்டு வயதுப் பெண்ணை குழந்தையாகப் பார்க்கிற வீரரை இப்போது தான் சந்திக்கிறேன்."

“வஞ்சனையற்றது குழந்தை உள்ளம். வாழ்த்துவதே கவியின் நாக்கு. வளர்ச்சியைச் சொல்வதே ஆன்றோர் புத்தி. வாழ்வை விளக்குவது ஞானியின் கை. இவைய னைத்தும்...”

“இவையனைத்தும்”

“சில சமயம் ஒன்றாக சிலரிடம் வந்து விடுகின்றன.”

“அதாவது என்னிடம்.”

“ஆமாம்.”

“நேற்று பூச்சி. இன்று கடவுளா. பூச்சி கடவுளாகுமா?”

“சிலந்தி சிவபூஜை செய்ததாகக் கதை உண்டு. அங்கு ஓர் யானை வந்து சிலந்திக் கூட்டை கலைத்தது.”

“சிலந்தி யானையின் செவியேறி கடித்தது.”

“பூச்சியும் யானையும் சிவலோகம் போயின.”

“அதுதான் இங்கும் நடந்திருக்கிறது.”

“அதாவது நான் பூச்சி நீங்கள் யானை, நானும் நீங்களும் ஒத்திகையில் சண்டையிட்டோம். பிறகு...?”

“பிறகு சிலந்தி யானையின் செவியேறி...”

“அதாவது நாடகம் மூலமாய் உங்கள் காதுக்குள் நுழைந்து....”

“என் புத்தியைக் கடிக்க.”

“சிவலோகப் பிராப்தி வரவில்லையே.”

“தெளிவே சிவம்.”

“என்ன தெளிவு வந்ததே உமக்கு.”

“கேள்விகள் வந்தது தெளிவின் நிலை.”

“என்ன கேள்விகள்?”

“போர் தவறா. வன்முறை குற்றமா. மனுநீதி சோழன் போரே செய்யாத மன்னனா?"

“உபதளபதியாரே.”

“சொல்லுங்கள்.”

"அந்த மண்டபம் போய் பேசுவோமா.”

“ஆஹா.”

மண்டபம் போனார்கள்.

“உட்காருங்கள்."

மன்னர் மண்டபப் படிகளில் உட்கார்ந்தார்.

“என்னிடம் மூட்டை மூட்டையாய் உங்கள் கேள் விகளுக்கு பதிலிருப்பதாய் நினைக்காதீர்கள். நீங்கள் கேள்வி நான் பதில் என்று பிரிக்க வேண்டாம். கேள்விக் கான பதிலை தேடுவோம், எவர் துணையுமின்றி இருவ ரும் தேடுவோம், சரியா.”

“சரி.”

"ஒரு கவிதை சொல்கிறேன் புரிகிறதா... பாருங்கள், தமிழ்க் கவிதைகளில் உப தளபதியாருக்கு பரிச்சய முண்டா?"

“சிறிதளவு” -

“அது போதும்.” அவள் இடுப்பாடை சொருகி, கை வளையல்கள் மேலேற்றி. தொண்டை செருமி சொல்லத் துவங்கினாள்.

“அற்றைத் திங்கள், அவ்வெண்ணிலவில் யாம்எந்தை யும் உடையேம். எம் குன்றும் பிறர் கொள்ளார். இற்றைத் திங்கள், இவ்வெண்ணிலவில் வென்று ஏறி முரசுவேந்தர் எம்குன்றும் கொண்டார் யாம் எந்தையுமிலமே.” -

“புரிகிறதா?"

“விளக்கிச் சொல்லுங்கள்.”

“பாரி மகளிர் எழுதிய கவிதையிது.”

“பாரி பறம்பு மலையின் மன்னன். அழகும் புலமையும் வாய்ந்த அவன் மகளிரைத் திருமணம் செய்ய மன்னர் களிடையே கடும் போட்டி. பாரியோதன் பெண்களின் திருமணம் அவர்கள் விருப்பம்போல் அமைய வேண்டும் என்று கருதினான், மகளின் திருமணத்தை அரசியல் தொடர்பாக்க மறுத்தான். மறுத்த பாரியின் மீது பெண் கேட்ட சேர, சோழ, பாண்டியர்கள் படையெடுத்து வந் தார்கள்.

முரசுகள் முழங்கின. பெண்களின் வயிறு கலங்கும்படி ஒலியெழும்பின. சண்டை நடந்தது. பாரி கொல்லப் பட்டான். பறம்பு மலை முடி மன்னர்கள் வசமாயிற்று. பாரி மகளிர் தங்கள் கோட்டையிலிருந்து தப்பி கபிலர் என்கிற புலவரின் துணையோடு காடுகளூடே சென்று கொண்டிருந்தார்கள். மேலே நிலவு, முழு நிலவு இரவு தங்க ஒரு மரத்தடியில் அமர்ந்த பாரி மகளிருக்கு அப்பா நினைவு வருகிறது. அவரோடு வாஞ்சையுடன் பேசிச் சிரித்தது நினைவுக்கு வருகிறது.

போன பௌர்ணமியில் தந்தை உயிரோடு இருந்தார். எமது குன்றும், எம்மிடமே இருந்தது. ஆனால் இந்த பௌர்ணமியில், கோட்டை, வேந்தர்கள் வசம் அகப் பட்டது. எப்படிப்பட்ட வேந்தர்கள்...வென்று எறி முரசு வேந்தர்கள். அதாவது போரெனில் பாரி மகளுருக்கு வில், வேல் வாள், யானை, குதிரை இல்லை. அவர்கள் போரை நேரே பார்க்க வில்லை. வெட்டுபட்டுத் துடிப் பதை கண்டதில்லை. போர் எனில் மகளிருக்கு ஒலி ரூபம், தம தம தம என்கிற முரசுச் சத்தம். அடி வயிறு கலங்குகிற ஓசை முரசு சத்தம் கேட்டதும் பாரி மகளிரை அப்புறப்படுத்தி விட்டார்கள்.

குன்று சூறையாடப்பட்டது. தந்தை கொல்லப்பட்டான் என்கிற செய்தி வருகிறது. உயிர் தப்பி ஓடுகிறார்கள் இரவு பகலாய் நடக்கிறார்கள். மறுபடி முழு நிலவு இது வேறு நிலவு. முதல் முழு நிலவுக்கும் இரண்டாம் முழு நிலவுக்கும் இடையே எத்தனை வித்தியாசம்? அரச குமாரிகளாய் இருந்த பாரிமகளிர் இன்று அநாதைகள். உயிர் தப்பி ஓடுகிறவர்கள் பஞ்சணையில் படுத்த பெண் கள் இன்று மரத்தடி மண்ணில்... ஆனால் மேலே நிலவு. அன்று பார்த்த அதே நிலவு.

போகட்டும். கோட்டை போகட்டும், அரச வாழ்க்கை போகட்டும், மதிப்பு அழியட்டும். அகம் குறையட்டும்.

ஆனால் பேசிச் சிரிக்க அப்பா இல்லையே யாம் எந்தை யும் இலமே."

பரவை வேதனையுடன் கண்களை மூடிக் கொண்டாள். கண்ணிலிருந்து நீர் வழிந்தது.

"புரிகிறதா, உபதளபதியாரே. நீங்கள் கொக்கரித்து செய்யும் யுத்தம் பெண்களை என்ன பாடு படுத்துகிறது என்று புரிகிறதா உபதளபதியாரே. பெண்ணைத் திரும ணம் செய்யத் தந்தையைக் கொன்று விட்டால், கோட் டையை எரியூட்டி விட்டால் முடிந்ததா. ஒரு தனிப்பட்ட மன்னனின் போக ஆசைக்கு எத்தனை பேர் பலி. எவ்வ ளவு ரத்தம். எத்தனை சாவு. எத்தனை விதவைகள். எவ் வளவு அநாதைகள். ஒரு கணம் ஒரே கணம் நீர் பெண் ணாய் இருந்து இவ்வேதனையை உணர்ந்து பாரும்."

ராஜேந்திரர் கண் முன் பல பெண்களின் கதறல்கள் தோன்றின. உள்ளே கனத்த மௌனம் சூழ்ந்தது.

"இந்தக் கவிதை என் கேள்விக்கு பதிலாகவில்லை. பரவை. அந்தப் பெண்களின் வேதனை புரிகிறது பெண் ணுக்காகப் போர் என்பது கேவலம் தான். பெண் இங்கே காரணம். காரியம் தனது நாட்டை பலப்படுத்துதல். மாற்

றரசன் படைபலம் திரட்டுகிறான் என்று தெரிந்ததும் படையெடுத்து அவனை அழித்தல் அரசன் கடமை. அழுளைகளுக்கு அஞ்சி வாளாவிருந்தால் அவன் இருப்பிடம் அழிந்து போகும், அவன் மண் மாற்றரசன் வசமாகும்."

"மண்ணில் என்ன இருக்கிறது. உபதளபதி. இது உமது மண்ணா. நீர் கொணர்ந்ததா. விஜயாலயர் காலத்துக்கு முன் இதை பல்லவர் ஆண்டார்கள். பல்லவருக்கு முன் வேறு முத்தரையர்கள் இருந்தார்கள். இது யாருடையது. பழங்குடிகள் முதற்கொண்டு தனது என்று சொல்லமுடி யுமே. போர் தவறில்லை பரஞ்சோதியாரே.

வாளோடுவாள் மோதி ஜெயித்ததும் வரும் வகையற்ற எக்களிப்பு இருக்கிறதே. போரின் விளைவு தரும் பயங் கரம் இருக்கிறதே சொல்லி மாளாது.

துஷ்ட நிக்ரஹம் நடப்பதுண்டு. தண்டிப்பதற்கு வன் முறை தேவைதான். ஆனால் வன்முறையே வாழ்க்கை என்கிற சோழ மன்னரைத்தான் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கங்கை கொண்டான். எப்படி கங்கையை மனிதன் கொள்ள முடியும்? கங்கை கொண் டது ராஜேந்திரர் அல்ல. பகீரதன் காடு மலையெல்லாம் தாண்டி ஒரு நதியை வறண்ட பூமிக்கு கொணர்ந்தவனே கங்கை கொண்டான் பானையில் நீர் கொண்டு வந்த வர்கள் அல்ல. அவர் மெய் கீர்த்தி பொய் சொல்கிறது. இரண்டு லட்சம் வீரர்களோடு காடுகள் அறுத்துப் போய் கண்ணில் பட்டவரைக் கொன்றுவிட்டு வந்தது போரு மல்ல. அரசுமல்ல.

ஒரு லட்சம் விதவைகளை உருவாக்கி விட்டு அவர் கள் அழுத கண்ணீரில் ஜலஸ்தம்பம் செய்தது என்ன பெருமை எல்லையில் சாளுக்கியன் வாலாட்டுகிறானா தடுத்து நிறுத்துங்கள். பாண்டியர் படை திரட்டுகிறாரா

எச்சரிக்கை செய்து பலம் கொண்டு களையுங்கள், திக் விஜயம் என்கிற பெயரில் நகரமழித்து பெண்களைக் கொண்டு வருகிறீர்களே. உத்தமசிலி வேளம் முழுவதும் மாற்றரசர் மனைவியர் ஆடு மாடுகள் போல் நடத்தப் பெறுகிறார்களே.

தேசம் தேசமாய் போர் செய்து, பொன்னும் பண்டா ரமும், பெண்டிரும் கொண்டு வந்த வீரன் வீட்டுக்குப் போய் மனைவியைக் கொஞ்சுவானா, மகனை முத்தமி டுவானா. ஆளுக்கு நாலு போகப் பெண்டிரோடு சிறைபி டித்த பெண்களோடு... ஒரு நாட்டின் நாகரிகம் அழிந்து போவது புரியவில்லை?"

“புரிகிறது. மீதியை நாளை கேட்கிறேன்.” மன்னர் எழுந்து மெல்ல நடந்தார். சற்று தளர்ந்த நடை பர வையை வேதனைப்படுத்திற்று.

“இவரா முரடர்... இவரா மூர்க்கர். தவறு குந்தவையாரே. தவறு. இவர் மகா மனிதர். கேள்விகள் உள்ளவனை, ஞானி என்கிறது பௌத்தம். இந்த மன்னன் புத்தன். அரச மரத்தடிக்கு பதிலாய் என் காலடியில் உட்கார்ந்து என்னைக் கேட்பது போல் தன்னைக் கேட்கிறான். புலியை ஈன்ற பெண்மான் என்று ராசராசரின் தாயைச் சொல்வார்கள். இது களிறு... மத யானை... மதம் குறைய வல்லமை உள்ள களிறு குழந்தை போல் அடங்கும். இவன் தாய் புலியைப் புணர்ந்து களிறைப் பெற்றவள் வாழ்க அவள்."

திரும்பி தன் வீடு நோக்கிப் போனாள்.

# 8

மன்னர் வீட்டினுள் அமர்ந்து ஓலையெழுதிக் கொண்டிருந்தார். திண்ணையில் மாறனும் அருண்மொழியும் சாய்ந்திருந்தார்கள். உணவு தயாரிக்கத் தனியே ஒரு திருவாரூர் ஆள் நியமிக்கப்பட்டிருந்தான். வாசற்படியில் நிழல் ஆடிற்று.

வணிகர் ஒருவர் படியேறி வந்தார். "சோழ உபதளபதி பரஞ்சோதி இருக்கிறாரா."

"நீங்கள் யார்" அருண்மொழி வினவினான்.

"வணிகன் சாத்தான். திருவாரூர் நந்தி தேவருக்கு ஒரு நேர்ச்சை."

"பச்சைப் பட்டுப் போர்த்த விரும்பினீரோ. உள்ளே வாரும்" அவரை உள்ளே அழைத்துப் போய் கதவு மூடினான்.

"மாமன்னர் ராஜேந்திரர் வாழ்க."

"உஸ்...மெல்லப் பேசும். எங்கிருந்து வருகிறீர்?"

"பிரம்மராயரிடமிருந்து."

"என்ன விஷயம்?

"மன்னரிடம் மட்டும் பேச உத்தரவு."

வணிகர் கூடத்துக்கு வர, மன்னர் தலை நிமிர்த்தினார்.

"பிரம்மராயரிடமிருந்து ஆள் வந்திருக்கிறது."

"அப்படியா. அருண்மொழி நீ வெளியே இரு." ஓலைகளைத் திரட்டினார். அருண்மொழி திண்ணைக்கு வந்தான்.

“சொல்லுங்கள் வணிகரே.”

“மன்னர் வாழ்க. குந்தவை பிராட்டி உடல் நலக் குறை வாய் இருக்கிறார். உங்களோடு கடிந்து பேசியது அவர் மனதைப் பாதித்திருக்கிறது. வந்தியத்தேவர் அருகிலிருக்கிறார். ராசராசாதித்தர் நலம்."

“பிறகு”

“மரக்கலங்களுக்கு வேலையாட்கள், தச்சர்கள் அதிகம் தேவைப்படுகிறார்கள். எனவே கிராமங்களில் பயிர் பச்சைகளை சரிவர கவனிக்க இயலாது. வரி குறைப்பு அவசியம்.”

“பிறகு”

“ஒரு கடற்கொள்ளைக் கப்பலை போசன் கைப்பற்றி ஈழத்துக்கு போய்விட்டார். அவர்கள் தேசமற்றவர்கள் ஸ்ரீவிஜய நாட்டில் குற்றங்களுக்கு தண்டிக்கப்பட்டு தப்பியோடிய கைதிகள், கொள்ளையே தொழில்."

"பிறகு?”

“உத்தமச்சோழ பிரம்மராயருக்கு அதாவது அருண்மொழிப்பட்டருக்கு ஆண் மகவு பிறந்திருக்கிறது. புரட்டாசி உத்திரம். தாயும் சேயும் நலம்.”

“சர்வேஸ்வரா. வாழ்க பிரம்மராயர் குலம்.”

“செய்தி உண்டா என்று கேட்கிறார் பிரம்ம ராயர்.”

“என் பரிசாய் இந்தக் குத்துவாளை அவருக்கு கொடு பட்டுத்துணியில் கட்டித்தருகிறேன். இங்கேயே இரு.'

அறைக்குள் போனார். பட்டுச் சுற்றோடு வெளியே வந்தார். " இது முக்கியம். மிகுந்த கவனத்துடன் தரவும்.”

எல்லைகளுக்கு அனுப்பிய வீரர்கள் போக, கடற்படைகளுக்கு வேண்டியவரை கவனமாய் தேர்ந்தெடுத்து,

மற்று முள்ளோரை சோழ நாட்டின் பல பாகங்களுக்கு அனுப்பும்படி உத்தரவு அதில் இருந்தது.

“நான் விடை பெறுகிறேன் மன்னா.”

“நல்லது.”

வணிகர் திரும்ப தடேரென்று வாசற்கதவு திறந்து கொண்டது. அங்கே பரவை நின்று கொண்டிருந்தாள்.

“அடேடே இந்த வீடு வாங்கி விட்டீர்களா சொல்ல வில்லையே. திருவாரூர் குடியேற உத்தேசமா?"

வணிகர் திகைத்தார்.

“இல்லை பரவையாரே. இது ஓய்வு விரும்பும் போதெல் லாம் வந்து தங்குவதற்கு.”

'ஒரு விஷயம் சொல்ல மறந்து விட்டேன்.”

“என்ன?”

“அன்று நாடகத்தில் நீங்கள் எழுந்து பேசியிரா விட்டால் குழப்பம் அதிகரித்திருக்கும். நான் நன்றியே சொல்ல வில்லை.”

“அவ்வளவுதானா. கதவு திறந்த வேகம் பார்த்தால் கன் னத்தில் அறைய வருவது போல் இருந்தது.”

“ரகசியமாய் ஏதாவது பேசிக் கொண்டிருந்தீர்களா?”

“ஏதுமில்லை. இவர் நமக்குத் தெரிந்த வணிகர் கண்டு பேச வந்தார்.”

“இன்னொரு விஷயம்.”

“என்ன?”

“நேர்ச்சைக்கு வந்திருக்கிறீராமே.”

“ஆமாம்.”

“என்னவோ.”

“ஏதேனும் வீதி விடங்கருக்குச் செய்ய வேண்டும் ஊன மின்றி கங்கைவரை சென்று வந்ததின் நன்றியால்...”

“ஆடை ஆபரணங்கள் போலவா?”

“திட்டமிடவில்லை.”

ஒரு ஆதுரச்சாலைக்கு உதவ முடியுமா. திருவாரூரில் வைத்தியர்கள் உண்டு. வைத்திய சாலை இல்லை. பெண்களுக்கென்று தனியாகவும்...மற்றவர்க்கு..."

“செய்யலாம். என்ன செலவாகும்.”

“சில ஆயிரம் கழஞ்சுகள்.”

“அடடே அத்தனை எடுத்து வரவில்லையே. இவ் ஆரில் கடன் கொடுப்பார் யாரையும் தெரியாதே."

“இவர் வணிகர்தானே. இவருக்கு ஒரு கடனோலை எழுதித் தந்தால் பொன் தர மாட்டாரா.”

“கட்டளையிட்டால் இரண்டு நாட்களில்..." வணிகர் தடு மாறினார்.

“நான் சொல்லி அனுப்புகிறேன். போய் வாரும்."

“உணவு இங்கே தயாராகிறதா.”

“ஆமாம். இங்கே உண்டு விட்டுப் போகலாம்.”

“வந்த விருந்தாளிகளிடத்தே விருந்துண்பதா? என் வீட் டிற்கு ஒரு முறை வரலாமே.''

“வரலாம், நீங்கள் திருமணமானவரா.”

"நானா? நான் தேவரடியார் அதாவது பதியிலார். அதா வது...”

“ஒரு கவிதை சொல்லி விட்டு என்னை எதுவுமே தெரி யாத மூடனாக்கி விடாதீர்கள் பரவையாரே பதியிலாரில் பதி உள்ளவரும் உண்டு.”

“யாருக்கேனும் சில வருடங்கள் ஆசை நாயகியாய் இருப்பார்கள்.”

“அப்படி அவசியமில்லை.பிரம்மராயரின் சரபன் தொண்டவை கேள்விப்பட்டிருக்கிறீரா.”

“தெரியும். பிரம்மராயர் லட்சத்தில் ஒருவர். அப்படி எனக்கு எந்த ஐயனும் கிடைக்கவில்லை.”

“அந்தணர்கள் மீதான பதியிலார்களுக்கு நாட்டமா?”

“ஒரு வகையில் நல்லது. குடித்து கும்மாளம் இருக்காது. நல்ல பேச்சுத் துணையிருக்கும்.”

“ஓ...”

“அது தவிர ஆறு மனைவி ஏழு மனைவியர் இருக்காது. மனைவியர் பெயரே மறந்து போய், ஏய் உன் பெயரென்ன என்று கேட்க மாட்டார்கள். உபதளபதியாருக்கு எத்தனை மனைவியாரோ.”

“எனக்கு பதியிலாரோடு தொடர்பு வைத்துக் கொள்ளும் எண்ணமில்லை.”

“ஏனோ.”

“ஒரு நம்பிக்கையின்மைதான்.”

“அதாவது...”

“தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்தவர்கள்....'

“அதனால்...?”

“எல்லா ரிடத்திலும் இறைவனைத் தேடலாம்.”

“தளிச்சேரி பெண்டிரை வேசி என்கிறீரோ?”

“சில ஊர்களில் அவ்விதமாகவும் உண்டு.”

"அதாவது கங்கை ஓரத்தில் மேலை, கீழை சாளுக்கிய நாட்டில்.”

"ஆமாம்.'

"பல புருஷர்கள் கொண்டவள் வேசி. பல பெண்களைக் கொண்டவன்...அவனுக்கு என்ன பெயர்?"

"ஆண் விதை- பெண் நிலம் என்கிறது சாஸ்திரம். நிலத்தின் மீது விதைக்கு உரிமை உண்டே தவிர நிலம் இது என் விதை என்று..."

"போதும். ஆண் மாடு. பெண் சொறி கல் என்றும் கூறலாமே."

"இது உலக நியதி."

"கெடுக இவ்வுலகம்." கால் உதைத்து பரவை திரும்பினாள் "உமது காசால் ஆதுரச்சாலை அமைப்பது கூடப் பாவம். மனைவியையே புரிந்து கொள்ளாதவரா பாரி மகளிர் கவிதை புரிந்து கொள்ள முடியும்."

"ஒரு வேளை உணவு இங்கே..." -

"விஷம் தந்து விட்டீர்களே. அது போதும் ஆயுசுக்கு."

பரவை கதவு தாண்டி தெரு இறங்கிப் போனாள். மன்னர் வாசல் வரை வந்து அவளையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன நடந்தது மன்னா." அருண்மொழி கேட்டான்.

"உலகத்தை இந்தப் பெண் உள்ளங்கையில் வைத்து ஆடுகிறாள். இதுவரை நடந்ததெல்லாம் தவறு என்றாள்."

"பௌத்தர்கள் அவ்விதம் பேசுகிறார்கள். ஒரு வேளை இவள் பௌத்தம் படித்திருக்கலாம். பௌத்தம் புதிது புதிதாய் மாறிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு விஹாரமும் ஒவ்வொரு கொள்கை கடைபிடிக்கிறது. சட்டங்களை தர்மங்களை மறுபடி யோசிக்கிறது."

“இவளோடு இன்னமும் பேச வேண்டும். அருண் மொழி. ஆதூரச்சாலைக்குப் பணம் வேண்டும். நாளையே வேண்டும்.”

“உத்தரவு மன்னரே”

“அருண்மொழி, ஒரு நல்ல செய்தி. உமக்கு ஆண் குழந்தை. தாயும், சேயும் நலம்.”

“அப்படியா...?”

“ஏதோ நட்சத்திரம் சொன்னார் வணிகர்-மறந்து விட் டது” அருண்மொழிக்கு உள்ளே மெல்லிய வருத்தம் படர்ந்தது.

மன்னருக்கு மட்டும் வேதனைகள் இல்லை. மன்ன ரிடம் பணிபுரிபவர்களும் தாம் வேதனைப்பட்டாக வேண்டும் - பொன்னங்கை பேச்சு நினை வில் ஓடிற்று.

மறு நாள் கோவிலுக்கு அருகே நிலம் வாங்கினார்கள் ஊர்ச்சபை கூட்டி சபையில் பெரும் தொகையை முத லீடு செய்தார்கள். அங்கே அத்தொகையை பல பகுதி களாகப் பிரித்து கடனுக்கு விட்டு அதிலிருந்து கிடைக் கும் பலிசை வட்டியை ஆதூரச்சாலைக்கு பிரதிமாதம் தரச்சொன்னார்கள். விளை நிலங்களை வாங்கி நிவந் தம் விட்டார்கள்,

'பரஞ்சோதி ஆதூரச்சாலை' என்று பெயரிட ஊர்ச் சபை முன் வந்தது

“இல்லை. இது வீதிவிடங்கரின் ஆதூரச்சாலை."

ஆதூரச்சாலைக்கு கல் நடப்பட்டது. கள்ளி எல்லையாக இடப்பட்டது. கட்டிடம் எழுப்ப அளவுகள் போடப்பட்டன.

"உபதளபதியாளருக்கு திருவாரூர் மேல் இத்தனை கரி சனத்துக்கு என்ன காரணம்."

“சமீப யுத்தத்தில் நெஞ்சில் அம்பு தைத்தது. மரண வேதனை திருவீதி விடங்கரை வேண்டினேன். வேதனை குறைந்து மீண்டேன் எனவே...”

“திருவாரூர் தியாகேசர் பெருமையே பெருமை. கண் கண்ட கடவுள். வரப்ரஸாதி.” கூட்டம் தலை மேல் கை தூக்கிற்று.

அவர் நெஞ்சு தைந்த அம்பு, அருண்மொழிக்கு மட்டுமே புரிந்தது. புரட்டாசி போய் ஐப்பசி கார்மேகங்கள் சோழ தேசத்திற்கு மேல் திரண்டன. புழுங்கின. புழுக்கத்திற்கு எதிர்ப்பதமாய் பேயாய் காற்று வீசிற்று. மேற்கு கரை யோரம் நல்ல மழை. காவிரியில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. உள்ளூர் வாய்க்காலில் சுழல்கள் ஏற்படுகின் றன.

திருவாரூர் வடபகுதி கிராமங்களுக்குப் போனார்கள். வேறு ஒரு நாள் இன்னும் கிழக்காய் குதிரை நடத்தி போனார்கள். நீர் நிலைகள் நிரம்பியிருந்தன... காவிரி யின் பாய்ச்சல் உள்ளூர் கிராமங்களில்

ஊடறுத்துப் போகும் வேகம் கண்டு விவசாயிகள் கவ லைப்பட்டார்கள் இதற்கு மேல் மழையும் பெய்தால்...

மன்னருக்கு வயது முதிர்ந்த ஒரு விவசாயி மேகங்களை சுட்டிக் காட்டினான். வளையம் வளையமாய் நடுவே கருமை அடர்ந்து விளிம்போரம் நீர் வெளிச்சம் தெறிக்க வரும் மேகங்கள் கடினமான மழையை தரக்கூடியவை “மேகம் உறுமுகின்றது பாரும் உபதளபதியாரே. இடி இடிக்கவில்லை. வாய்விட்டு பேசும் மேகம் வேகமாய் நகரும்.

“மேலும் காற்று தரை நோக்கி வீசுகிறது. சில நாழிகைப் பொழுதில் மேகம் தரையிறங்கும். பத்துபனை உயரம் ஒவ்வொரு மேகம் இருக்கும். பல நாட்கள் மழை பெய் யும்.” அவன் கவலையானான்.

“பயிர் நாசமாகும் என்கிறீர்களா.”

“பயிர் போகட்டும். வள்ளிக் கிழங்கு விதைத்து கீரை தெளித்து ஏதேனும் உண்ணலாம். வீடு, வாசல் அடித்துக் கொண்டு போகும். ஆடு, மாடுகள் போய் விடும். திருவாரூரில் மலையில்லையே குடையாய்ப் பிடிக்க.”

மேகம் திரள் திரளாய் சூழ்ந்தது. சட்டென்று காற்று நின்றது.

மன்னர் குதிரையேறி திருவாரூர் விரைந்தார். போகும் வழியிலேயே பெருந்தூறல் துவங்கி விட்டது. முதுகு வலிக்க தாக்கிற்று. -

ப்பாடப் தர பட்டம்

பேய் மழை தரை இறங்கிற்று. தரையில் அடித்து அரைக் கோல் உயரம் மேலே சிதறிற்று

வீட்டிற்குள் நுழையும்போது முற்றிலும் நனைந்து விட்டார். அருண்மொழி அவர் தலை துவட்டி நல்ல உடைகள் எடுத்துக் கொடுத்தான். இரவு நெருங்க காற்றும் சேர்ந்து கொண்டது. மரங்கள் பேயாட்டம் ஆடின. இரவு முழுவதும் மன்னர் கூடத்தில் உலவிக் கொண்டிருந்தார்.

விடிய, மாறனையும், தென்னவனையும் வெளியே அனுப்பினார். திருவாரூர் எல்லை தாண்ட முடியவில்லை என்று வந்தார்கள். மறுபடி மழை வேகமாயிற்று. மன்னர் முண்டாசு கட்டி வீதியில் விழுந்த பனையோலை எடுத்து தலைக்கு மறைப்பாக்கி ஊர் சபை நோக்கி ஓடினார்.

அங்கே தாழங்குடைகள் சூழ்ந்து கொண்டு நின்றன.

'தளபதியாரே மேடைக்கு வாரும்” யாரோ கூவினார்கள், ஊர் சபைக்கு வேளாளர்கள் பாதுகாப்பான இடம் கேட்டு விண்ணப்பிக்க, ஊர் சபை விழித்துக் கொண்டிருந்தது. பிரம்மதேய மகாசபை- மேடான இடத்தில்

உடனே ஒரு கூரை போடலாம் என்று பேச சிலர் கோப மாய் கூவினார்கள். “இந்த மழையில் இந்த காற்றில் எப் படி கோல் ஊன்றுவது, கூரை கட்டுவது?”

வீதி விடங்கர் கோயில் இருக்கிறதே, பாதுகாப்பான இட மாயிற்றே" மன்னன் கூறினார்.

“வேளாளர் வரலாம். நாலாவது வர்ணத்தாரும் இடம் கேட்கிறார்களே." -

"கொட்டுகிற மழையில் வர்ணமாவது ஒன்றாவது. மழை நின்றதும் கோயிலை சுத்திகரிக்கலாம்."

“தெரிந்து அனுமதிக்கக் கூடாது. தெரியாது நுழைந்து விட்டால் தான் சுத்திகரிப்பு."

“செத்துப் போவார்கள் ஐயா."

“மரங்களின் மீது ஏறி இரண்டு நாள் இருக்கச் சொல் ஒன்றும் ஆகாது."

“குழந்தைகளும் பெண்டிருமா... உணவுக்கு எங்கே போவது...?”

“உணவு நான் தருகிறேன். கோவிலில் இடம் கொடுங் கள்." மன்னர் கேட்டார்.

“தர முடியாது. இது தெய்வக் குற்றமாகும்."

“தெரியாது போனான் என்று நினைத்துக்கொள்ளுங் கள்."

“பிறகு நாங்கள் கோவிலுக்கு பூசையும் அவர்களே செய் யட்டும்."

வீதி முனையில் ஒரு கூட்டம் கொட்டும் மழையில் இரண்டு அந்தணர்கள் குடையோடு போய் இங்கு வரக் கூடாது என்று தடுத்தார்கள்,

மன்னரின் ரத்தம் கொதித்தது.

# 9

ஊர் சபைக்கு நான்காவது வர்ணத்தவர் வேதனை தெரிந்திருக்காது என்கிற நினைப்பில் பரவை புடவைத் தலைப்பை தலையில் போட்டுக் கொண்டு ஓடி வந்தாள். துணி ஓட்ட நனைந்திருந்தாள்.

“ஓடை மதகின்மீது மரம் விழுந்து தண்ணீர் திரும்பி விட்டது, நாம் ஏதாவது செய்தாக வேண்டும்.”

வருண பூஜை செய்து தியாகராசரை பிரார்த்தித்திருப்பது தவிர வேறு வழியில்லை, பரவை” ஒரு அந்தணர் பேச, பாவை, விழிகள் உருட்டி முறைத்தாள்.

“நான் தடுக்கவில்லை ஐயன். நேற்றிலிருந்து மக்கள் உண்ண உணவின்றி சொட்டச் சொட்ட நனைந்து இருக்கிறார்கள்.'

“கோவிலைத் திறந்து விடுங்கள்” மன்னர் சீறினார்.

“ஒருகாலும் அது நடக்காது.”

“நடந்தால் தடுப்பீரோ.”

“தியாகேசன் தடுப்பான்.”

பெரிய இடி இடித்துத் தரையில் இறங்கிற்று. “பார்த்தீரா தியாகேசன் தடுப்பேன் என்கிறான்.”

“பார்த்து விடலாம் அதையும்.” மன்னர் கிளம்பினார்.

“உபதளபதி, உமது வேலை சோழ சமூகம் காப்பது. சபைக்கு எதிரே பேசுவதல்ல.”

அருண்மொழி மெல்ல மன்னரை தனியே இழுத்துப் போனான்.

"அரசரே, வேகம் காட்ட வேண்டாம்."

"என்ன சொல்கிறாய்?"

"மன்னன் ஒரு முன்மாதிரி. ஒருவேளை இப்படி அழைத்துப் போனது நீங்கள் தான் எனத் தெரிந்தால் பிற்பாடு குழப்பம் வரும். மன்னரே, தருமம் மீறினால்... சம்பிரதாயம் உடைத்தால்..."

"குளிரில் மக்கள் சாகிறபோது என்ன தருமம்?"

"மன்னா, யோசியுங்கள். காலங்காலமாய் உள்ளதை உடைவாளால் உடனே மாற்ற முயற்சிக்க வேண்டாம்."

"உனக்கு உறுத்துகிறதோ... அந்தணன் என்கிற நினைப்பு அதிகரிக்கிறதோ."

"இல்லை மன்னா. என்று இடுப்பில் வாளைக் கட்டினேனோ அன்றே நான் அந்தணன் இல்லை என்று தெரிந்து கொண்டேன். வேறு ஏதேனும் செய்வோம். தயவு செய்து வேகம் கொள்ள வேண்டாம்."

பரவை கூச்சலிட்டாள். "உயிர்கள் துடித்துக் கொண்டிருக்கும் போது சாத்திரமா சொல்கிறீர்கள். அவர்களுக்கு என் வீட்டில் இடம் தரப்போகிறேன். தளிச்சேரி பெண்டிர் இல்லங்களில் தங்க வைக்கப் போகிறேன்."

"பிறகு நாங்கள் அங்கு வர முடியாது. நினைவில் கொள்."

"உங்கள் வீட்டு நாய்கூட வர வேண்டாம்."

"அருண்மொழி, பரவை சொன்னது சரி. நான்காவது வர்ணத்தார் ஆண்களை நமது வீட்டிற்கு அனுப்பு, வணிகர்களிடம் தஞ்சம் பெறச் சொல். பெண்கள் மடவார் விளாகத்தெருவுக்குப் போகட்டும். தளிச்சேரி பெண்டிர் பாது காக்கட்டும். அனைவருக்கும் உணவு நாம் போடுவோம். கலத்துக்கு கழஞ்சு பொன் என்று அரிசி வாங்கு, நம்மி

டம் இருப்பதை போடு. பரவை, நான் பெண்களை உன் வீட்டிற்கு அழைத்து வருகிறேன். முன்னால் போ."

பரவை நிமிர்ந்து பார்த்தாள். துணைக்கு ஆள் கிடைத்த மகிழ்ச்சியில் ஓடினாள்.

"யார் இந்த பரஞ்சோதி. விருந்தாளி என்கிற மரியாதைக் குப் பார்க்கிறேன். இவன் யார் வீட்டிற்கு கூட்டிப் போக?"

"கோயிலுக்கு வரவில்லை அல்லவா. இனி பேசாது பொத்திக் கொண்டிரும்." அருண்மொழி அதட்டினான்.

பரவை தன் வீட்டின் கதவு திறந்தாள். பல தளிர்ச் சேரி பெண்டிர் வீடுகள் திறக்கப்பட்டன வீதியில் இடுப்பு ஜலம் இழுத்துப் போயிற்று. ராஜேந்திரர் மெல்ல மெல்ல முன்னே போனார். தடுமாறும் ஒரு பெண்ணிடமிருந்து குழந்தையை வாங்கி தோளில் போட்டுக் கொண் டார். ஒவ்வொரு பெண்டிராய் பரவை வீட்டுப் படியில் நின்று மேலேற்றி விட்டார். குளிர் மக்களை உடலை நடுக்கி யது.

"உபதளபதியாரே, என்னிடம் எட்டு கலம் அரிசி இருக்கி றது."

"இருக்கட்டும். தேவைப்படும். நான் புதிதாய் வாங்கி சமைக்கச் சொல்கிறேன். கவனம். விழித்துக் கொண்டே இரு. தண்ணீர் மேலேறுகிறது." இறங்கி மறுபடி தன் வீட் டிற்குப் போனார்.

கூடம் முழுவதும் ஆட்கள் நின்று நடுங்கிக் கொண்டிருந் தார்கள்.

இருட்டி இருட்டி மழை பெய்தது. விடாது இடித்தது. வணிகர் வீட்டிலிருந்து பெரிய தவலைகள் வந்தன, ஒரு மூட்டை பருப்பும், நிறைய கீரைக் கட்டும் வாங்க முடிந் தது. சற்று பிஞ்சு வாழை பிய்த்துக் கொண்டு வரப்பட்டது.

மன்னர் நேரடியாய் நின்று சமையல் கவனித்தார்.

"புண்யமில்லை ஐயா. நம் தெருவிலும் தண்ணீர் வேகம் அதிகரித்து விட்டது. மடவளாகம் போக முடியாது."

"முடிந்தே தீர வேண்டும், நம்பி. முடியாது என்கிற சொல்லே நம்மிடம் இல்லை."

"ஐயா, நாம் ஆறு பேர் எவ்விதம்?"

"நான் மட்டும் போதும் போ..." மன்னர் சீறினார் அருண் மொழி தலைகுனிந்தான்.

"அந்தணர் சபை முன்னே நான் அடைக்கலம் என்று சொன்ன பிறகு பின் வாங்க முடியுமா. என் உயிரே போனாலும் கவலையில்லை. நீ காட்டாற்றில் அடித்துக் கொண்டு போனாலும் கவலையில்லை. இதைச் செய் தாக வேண்டும் என் கட்டளை."

"உத்தரவு ஐயா."

முழங்கால் உயரத் தவலைகளில் சோறு கொதித்துக் கொண்டிருந்தது. ஒரு கறுப்புக் கிழவன், கொல்லைப் புறம் நகர்ந்து மரக்கதவு பெயர்த்தான். மூங்கிலைத் தேடி மேலும் கீழும் கட்டினான். தெப்பம்போல் அது தெரு நீரில் மிதந்தது. நான்குபேர் ஏறி நின்றார்கள். தாங்கியது.

"அற்புதமான யோசனை. இதன் மீது சோற்றுத் தவலை வைக்கலாம்." மன்னர் கைலாகு கொடுக்க கயிறு கட்டி தவலை தூக்கி தெப்பத்தில் வைத்தார்கள். வைத்த வேகத்தில் தெப்பம் நகர சுழல் அடித்துக் கொண்டு போக மன்னர் நீரில் இறங்கினார். குறுக்கே பாய்ந்து மரக்கதவு பிடித்து நிறுத்தினர். அருண்மொழி பின்பக்கம் பிடிக்க, நீலன் வலப் பக்கம் நிற்க, நான்காவது வர்ணத்த வர் தயங்கி இறங்கினர். சுழல் வேகத்தில் தெப்பம் இஷ் டத்துக்கு நகர்ந்தது. எதிர்த்து தள்ள முடியவில்லை.வ லது தெரு திரும்பி மறுபடி வலது மடவிளாகம் திரும்ப

நீரோடு போய்விடலாம். தெரு முனை வரை தெப்பம் போகுமா... கவிழ்ந்தால் சோறு சேறாகும்.

சற்று தூரம் தள்ளி விட்டு நீர்வேகத்தோடு மறுபடி வீட்டுக்கு அருகே வந்தார்கள்.

கயிறுக்கு நடுவே மன்னர் பெரிய மூங்கில் கட்டை நுழைத்தார். காவடி போல் முன்பக்கம் கைகொடுத்து தூக்க பின் பக்கம் குடி வந்த ஆட்கள் தூக்கினார்கள்.

தெரு இறங்கி தலை மீது கோல் வைத்தார் தவலையை தொட்டபடி நீர் போயிற்று. வேறு வழியே இல்லை. இப்படித்தான் தெருமுனை வரை போயாக வேண்டும். -

மன்னர் தடுமாறினார். மழை விடாது பெய்தது "யாராவது என்னைத் தாங்கிப் பிடியுங்கள்." மன்னர் கைகள் பளு தாங்காமல் ஆடின. குடி பெயர்ந்து வந்தவன் நீரில் குதித்து அருகே நின்றான்.

"பிடி என்னை."

"ஐயா. நான் தாழ்ந்தவன்."

"பிடியடா என்னை." மன்னர் இரைய, அவர் இடுப்பை இறுகப் பிடித்தான். பின்னால் அருண்மொழி. அருண்மொழியைப் பிடித்தபடி ஒரு ஆள் நடந்தார்கள். மெல்ல மெல்ல நீர் எதிர்த்து தவலை ஆட நடந்தார்கள்.

தெரு முனையில் நீர் சுழித்து ஓடிற்று. ஆளை அசத்தி இழுத்தது. கால் பறித்தது. முள் செடிகள் புரண்டு வந்து வழி மறித்தன.

உடம்போடு உடம்பொட்டி நடந்தார்கள். அவன் இறுக்கி இடுப்புப் பிடித்து தாங்க, மன்னர் மெல்ல மெல்ல முன்னேறினார். திரும்பி மடவிளாகம் அடைய நீர் இழுத்து முன்னே தள்ளிற்று.

“அருண்மொழி, இறுக்கிப் பிடி. தவலையைக் கவிழ்த்து விடாதே.” செத்த பசுவை புரட்டி வந்து வெள்ளம் அருண்மொழி முதுகை தாக்கிற்று. நகர்ந்து வழி விட மாடு புரண்டு மன்னர் முகத்தில் குளம்புபட்டது. பிடி நகர வில்லை. சற்று வேகமாக பரவை வீடு வந்தார்கள்.

வாசலில் உள்ள பெண்கள் குரல் கேட்டு பரவை ஓடி வந் தாள்.

மன்னர் வீடு நெருங்கிகால் தூக்க “படி புரண்டு விட்டது” என்று கூவினாள்.

படிக்கு கால் தூக்கிய ராஜேந்திரர் விஷயம் தெரியாது தவறாய் காலை வைத்தார். வலது புறம் சரிந்தார். பரவை எட்டி அவரை இழுத்துக் கொண்டாள். கையில் உயரத் தூக்கிய மூங்கில் ஆடிற்று. பளுவில் நடுங்கிற்று.

“மூங்கிலை வாங்கு பரவை” மற்ற பெண்கள் மூங்கில் தூக்க மன்னர் குனிந்து திண்ணையில் கை வைத்து மேலேறினார். கயிரோடு தவலையை இழுத்தார். தவ லைகரை சேர்ந்தது. ஓவென்று பெண்களும், குழந்தை களும் கூச்சலிட்டார்கள்.

மன்னர் காலில் கல்மோதி ரத்தம் வழிந்தது. மாட்டுக் குளம்படி பட்டு கன்னத்தில் கீறல் இருந்தது. மார்பு முழு வதும் அட்டை பூச்சிகளும், முள் கீறலும் இருந்தன. பரவை துணி கிழித்துக் கட்டுப் போட்டாள். பெண்கள் சூழ்ந்து பூச்சியை எடுத்தார்கள். அருண்மொழியை கை தூக்கி விட்டார்கள்.

அருண்மொழி முதுகில், கௌவியிருந்த அட்டையை ஒரு பெண் கடித்து வெட்டித் தூக்கிப் போட்டாள். யாரோ ஆள் வந்து திண்ணைத் தூண் பற்றினான்.

“ஐயா”

“என்ன?”

“கோவில் சுவர் இரண்டு கை நீளம் இடிந்து விழுத்து விட்டது. எங்கள் மாடுகள் எல்லாம் தாங்களாகவே கோயிலுக்குள் போய் விட்டன.”

“ஆஹா அப்புறம். அந்தணர்கள் பசுக்களையும் விரட்டு கிறார்கள்.”

“இல்லை ஐயா. ஆனால் கறவைகள் பசியில் கதறு கின்றன. எண்ணைச் சுவர்களை நக்குகின்றன. இடியில் பயந்து மிரளுகின்றன.”

“எத்தனை மாடுகள்?”

“ஆயிரம் இருக்கும்.”

“ஐயோ.”

"உள்ளே போய் நந்தவனப் பூட்டை உடைக்க விரும் பினேன். நான் உடைத்தால் தண்டிப்பார்கள். பயந்து திரும்பி விட்டேன். மாடுகள் பசியில் செத்து விடு மய்யா..."

“மனிதரே தவிக்கும் போது மாடுகள் பற்றி கவலைப் பட முடியுமா தம்பி."

“ஐயா, என் மாடுகள் அனைத்தும் நிவந்தம் விட்டவை. தினமும் படி நெய் தர நிபந்தனை. தினம் இரண்டு படி நெய் கிடைக்கும். பசியால் தவிக்கும் மாடுகளைக் காப் பாற்றா விட்டால், என் வாழ்வே முடிந்தது.”

"கவலை வேண்டாம். கோவிலுக்குப் போகலாம் வா..."

“உபதளபதியாரே. ஒரு கை சோறு தின்றுவிட்டு..."

“மற்றவர்களுக்குப் போடு பரவை. குழந்தைகளுக்குக் கொடு, மாடுகள் முக்கியம்.”

கோயில் பகுதி முழுவதும் வெள்ளக்காடு கண்ட இடங்க ளில் நீர் இழுத்துச் சுழற்றியது. உயிர் பிழைக்கும் ஆசை யில் மாடுகள் இடிந்த சுவர் வழியே எவர் அனுமதியும்

இன்றி உள்ளே நுழைந்து விட்டன. மன்னரும் இடைய ரும் நந்தி பிளவு வழியே உள்ளே போனார்கள். கோவில் மேட்டுப் பகுதியில் பத்திரமாய் இருந்தது. மாடுகள் மிரண்டு அலைத்தன. பயத்தில் முட்டி மோதிக் கொண் டன. கன்றுகள் இரண்டு மிதிபட்டு இறந்து கிடந்தன.

மன்னர் பாறையெடுத்து நந்தவனக் கதவு பூட்டை உடைத்தார். விரியத்திறந்து விட்டார். மாடுகள் உள்ளே நுழைந்தன. வெற்றிலைக் கொடிக்கால், பூச்செடிகள் காய்கறித் தோட்டம், அகத்திகீரைச் செடி எல்லாம் அழிந்தன. இரண்டு நாள் உணவுக்குக் கவலையில்லை. மன்னருக்கு பசியெடுத்தது. வெற்றிலைக் கொடிக்கால் இழுத்து வந்தார். மண்டபத்தில் உட்கார்ந்தார் மெல்ல தழைகள் துடைத்து உண்டார் உள்ளே வெற்றிலைச் சாறு ஜீவரசம் போல இறங்கிற்று.

விதம் விதமாய் உண்டவருக்கு வெற்றிலைச் சாறே சோறாயிற்று,

அருண்மொழி சொன்னது சரி. வாளெடுத்து நான் மிரட்ட மன்னன் என்று பின்னால் தெரியவர. சகல இடங்களி லும்...கோவில் எல்லா வர்ணத்தாருக்கும் என்று போகும் எண்ணம் வரும். பெரும் பூசல் வரும். இது நேரமல்ல இது வழியல்ல.

வேறு வழி உண்டு. யோசிக்க வேண்டும்.

பரவை என் வீட்டிற்கு அழைத்துப் போகிறேன் என் றாளே. அதுபோல் உடனே சொல்ல என்னாலும் முடிய வில்லை. பரவை மனசு எனக்கில்லை. கூட வந்தவன் எங்கே?

ஏய்... கைதட்டிக் கூப்பிட்டார் பதிலில்லை. கதவு உடைத்து மாடுகள் நந்தவனம் புக சந்தோஷமாய் ஓடி யிருப்பான். உள்ளே நிற்பது யாரும் பார்த்தால் வெட் டிப் போடுவார்கள் என்று பயந்து ஓடியிருப்பான். பாவம்

இவன் மட்டும் வந்து சொல்லாதிருந்தால் இந்த மாடு கள் முட்டி மோதி பசியால் செத்திருக்கும். நந்தவனம் மேய்ந்த மாடுகள் மெல்ல மெல்ல சுற்று மண்டபங்களில் ஒதுங்கின. நின்று அமர்ந்து அசை போட்டன.

பிளவு பட்ட மண்சுவர் மறுபடி தடதடவென்ற பெரிய ஓசையுடன் இடிந்து விழுந்தது. ராஜேந்திரர் எழுந்து நின்று பார்த்தார்.

மழைக் கம்பிகளுடே யாரோ வருவது தெரிந்தது.

"யார் அது... அருண்மொழியா...? சுவர் இடிந்து விழுகி றது. நிதானமாய் வா."

தலைமேல் ஏதோ வைத்தபடி கழுத்து நீரில்...அருண் மொழி உயரமாயிற்றே இல்லை, அது பரவை

"பரவை. அங்கேயே இரு. ஏன் வருகிறாய்...சுவர் மறுப டியும் விழும். நிதானம்." வலது பக்கப் பிளவு மறுபடி சரிந்தது. பிளவு பெரிதாயிற்று. இடிந்த கற்குவியல்களின் மேலே மெல்ல ஏறினாள் சறுக்கிற்று கால் வைக்கக் கற் கள் நகர்ந்தன.

நாட்டியமாடும் உடம்பு. மெல்ல மெல்ல எல்லா கல் அசைவுக்கும் ஈடுகொடுத்து தாண்டித் தாண்டி வந்தது. புல் தரையில் கால் வைத்து மேடேறிற்று.

"உபதளபதியாரே நீங்கள் ஓதும் உண்ணவேயில் லையே..."

"இதற்காகவா வந்தாய்."

"கறவைகள் உண்டனவா?"

"வயிறு நிரம்ப நந்தவனம் பார்."

"போகட்டும். இன்னும் ரெண்டு நாள் தாங்கும்." இறங்கி உடம்பு உதறினாள். ஒட்டிய உடையில் மெல்ல நடுங்கி னாள்.

“எதற்கு பரவை இத்தனை சிரமம். அருண்மொழியிடம் தந்திருக்கக் கூடாதா.”

"அருண்மொழிக்கு அட்டை கடித்து ரத்தம் அதிகம் போய் விட்டது. துவண்டு விட்டார். ஏதோ இலையை சுட்டு அந்த இடையர் பெண்கள் போட்டுக் கொண்டி ருக்கிறார்கள். எனக்கும் நல்ல பசி. வாருங்கள். கலம் ஏதுமில்லை. கை நீட்டுங்கள்.”

சோறு ஆறியிருந்தது. மணம் குறையவில்லை. மன்னர் கை நீட்ட ஒரு கவளம் உருட்டி வைத்தாள். அவர் உண்ண, ஓரமாய் உள்ள திரு நீறு குடுக்கையை சுவர் ஓரமாய் தட்டி மழை நீரில் கழுவி நீர் பிடித்தாள். “இது தான் குடிநீர். கை நீட்டுங்கள்.” மறுபடி மறுபடி போட் டாள்.

“போதும். உனக்கு?”

“நீங்கள் கை கழுவி வாருங்கள். எளக்குப் போடுங்கள்.”

மன்னர் துள்ளி எழுந்து மழை நீரில் கை கழுவி பானைக்கு அருகே வந்து குத்திட்டு அமர்ந்து நீட்டிய அ வள் கையில் கவளம் உருட்டி வைத்தார்.

“உபதளபதியார் இதற்கு முன் யாருக்கும் சோறு பரிமாறி யதுண்டா?”

“இல்லை.”

“எனக்கு அந்த பாக்கியம் கிடைத்தது.”

“பல்லக்கு தூக்கியதும் இல்லை. இன்று அன்னப் பல் லக்குத் தூக்கும் பாக்கியம் கிடைத்தது.”

*நடுவே அலுப்பு வந்து விட்டதோ, இங்கே வந்து மாட்டிக் கொண்டோமோ என்று.”

"இல்லை பரவை. சுவையான அனுபவம். நூறு பேர் இந்தத் தவலைக்கு காத்திருப்பார்கள் என்கிற எண்ணம் தான் முன்னே நின்றதே ஒழிய..."

"இது தான் வாழ்க்கை உபதளபதியாரே...

"ஒரு கட்டுவிரியன் குட்டி, சோற்று தவலை தூக்கி வந்த உங்களைக் கடித்திருந்தால்? மரணம் வாழ்க்கையின் வேடிக்கையான விஷயம், உபதளபதி. அது மன்னர், மந்திரி, கீழோர் மேலோர் யாரையும் விட்டு வைப்பதில்லை. இடம் பொருள் ஏவல் பார்ப்பதில்லை. ஏன் இது நிகழவில்லை, என் மீது சுவர் ஏன் இடிந்து விழவிலலை. எது காப்பாற்றுகிறது. யார் காக்கிறார்கள். தர்மம் என்கிறது பௌத்தம். அள்ளி அள்ளி வழங்கு என்கிறது சைவம். இருக்கும் வரை பிறருக்கு உதவி செய் என்றது எல்லா மதங்களும். இல்லையா."

"புரிகிறது பரவை."

"உங்களுக்கு என் மேல் கோபம் தானே?"

மன்னர் மௌனமாக இருந்தார். -

"உங்களுக்கு எத்தனை மனைவியர் என்று கேட்டதில் ஆத்திரம் தானே. எண்ணிக்கையை நான் கேலி செய்யவில்லை தளபதி. நேர்ச்சைக்கு வந்தவர் எவரையும் கூட்டிவராது தான் மட்டும் படை வீரர்களோடு வருகிறீர்களே நியாயமா...என்று கேட்க முனைந்தேன். ஏன் மனைவியரை மதிப்பதில்லை என்று கேட்க ஆசைப் பட்டேன். பசுவைக் கொல்வது பாவம் என்கிற வீரன் மாற்றரசர்கள் மனைவியை முடி பிடித்து அடிப்பது எப்படி என்கிறேன். மாட்டைவிட மட்டமா மனுஷி. ஏன் இப்படி பசுவை தெய்வமாக்கி விட்ட மனிதன், பெண்டிரை போகப் பொருளாக்கிவிட்டான்."

"தவறுதான். போரின் தீய குணங்களில் இதுவும் ஒன்று."

“இதை மறுபடியும் செய்யக் கூடாது உபதளபதியாரே.”

“புரிகிறது பரவை. போர் வீரத்தை பெண்களிடம் காட்டு வது தவறுதான்.”

“இது தவிரவும் வேறொரு வேதனை இங்கு நிலவுகிறது.”

“என்ன அது?”

“குலத்தாழ்வு. நாளை மழை நின்றதும் அழிந்த பொருள் களுக்கெல்லாம் தாழ்ந்தவன் பதில் சொல்ல வேண் டும். என் மாடு செத்தது, காசு கொடு என்று மடியைப் பிடிப்பார்கள். காசு இல்லாதவன் தன்னை விற்று செத்த மாட்டுக்கு ஈடாவான். ஆண் தன்னை விற்க அவனுக்கு உடமையானவளும் அடிமை, அவர்களுக்குப் பிறந்ததும் அடிமை.”

“அந்தணர்கள் பேச்சு எனக்கும் பிடிக்கவில்லை. சாத் திரம் பேசும் நேரமா இது. அருண்மொழி அடக்கி விட் டான்.”

“ஆட்களைக் குற்றம் சொல்வதைவிட அமைப்பைக் குற்றம் சொல்வது தான் சரி, அன்பே சிவம் என்கிற சைவத்தில் உயர்ந்தவனா தாழ்ந்தவனா. உபதளபதி, எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா. ஆரியம் வேறு சைவம் வேறு. ஆர்யர்கள் வடதேசம். சைவர் தென் புலம். ஆர்யர் இங்கு நுழைந்துப்பு சைவம் தழுவி. சைவத்தை தன தாக்கி தனது சாத்திரங்களை உள்ளே புகுத்தி, தென் புலத்து மக்களைப் பல கூறாக்கி ஜெயித்து விட் டார்கள். உண்மையான சைவனுக்கு உயர்வு தாழ்வு இல்லை.சகல உயிரும் இறைவனே. ஆகம விதிகளை நமது கோயில்கள் எடுத்துக் கொண்டு அன்பைப் புறக் கணித்து விட்டன.”

“பரவை”'

“உபதளபதி.”

“இப்படியெல்லாம் யோசிக்க எங்கு கற்றாய். எப்படி இவ் விதம் யோசிக்கிறாய்.”

“நான் என்னைப் பற்றி மட்டும் யோசிப்பதில்லை, உபத ளபதியாரே. என்னைப் பற்றி யோசிப்பது போல் பிறரை யும் யோசிக்கிறேன்.”

“எனக்கும் அப்படியே ஒரு யோசனை இருந்து வருகிறது பரவை.”

"என்ன யோசனை?”

“என்னை மணம் செய்து கொள்.”

“ஏன்?”

“இடையறாது என்னுடன் இரு. எனக்கு பலம் தா இறை உணர்வு கொடு. உன்னால் நானும் என்னால் மக்க ளும்...''

“உபதளபதி மன்னரைப் போல் பேசுகிறீர்களே."

மன்னர் அமைதியாய் இருந்தார். உதடுகள் ஏதோ சொல்லத் துடித்தன.

“விருப்பம் இல்லையானால் வேண்டாம்.”

“இப்போது என் விருப்பம் பற்றி யோசிக்கவில்லை உப தளபதி. என்னால் உமக்கு அமைதியெனில் ஆக்கம் வருமெனில் எனக்கு சம்மதம். ஆனால் நான் தேவரடி யார், பதியிலார். என்றும் நான் தீர்க்கசுமங்கலி. உங்க ளுக்கு கட்டுப்பட்டு காதலாவேனே தவிர மனைவியாக மாட்டேன். என்னை அணுக்கியாக நடத்துவதானால் எனக்கு சம்மதம்.”

“அணுக்கியா?”

“ஆம். ஸ்நேகிதி. உமது தோழி நான். உமது இருப்போ இறப்போ என்னை பாதிக்காது. உம்மால் ஊர் பயன்

பெறுமாயின் என்னை உமக்குத் தருவதில் அச்சமே யில்லை. ஊருக்கு உதவ பரவை உமக்குத் தேவையா?"

"ஆம்."

"தந்தேன், உபதளபதி" அவள் சன்னதி நோக்கி நடந் தாள். உள்ளே கைவிட்டு தாழ் நீக்கினாள். உற்சவர் சன் னதியிலுள்ள தாலி எடுத்து வந்தாள். மன்னர் எதிரே நின்றாள்.

மன்னர் கை நீட்டினார்.

"இல்லை, உபதளபதியாரே. இதைத் தொட்டுக் கொடும்."

மன்னர் தொட சுவாமிசன்னதி நோக்கி நின்று தன் கழுத் தில் தானே முடிந்து கொண்டாள்.

"சர்வேஸ்வரா, உமக்கென்று உண்டான நான், ஊருக் கென்று இவரைச் சேர்கிறேன். எல்லா உயிரிலும் இருக் கின்ற இறையே, இவரிலும் உம்மைக் காண்கிறேன்.' சுவாமியை விழுந்து வணங்கினாள். மன்னரின் பாதம் தொட்டாள்.

மன்னர் தோள் தொட்டு எழுப்ப, அவர் நெஞ்சில் முகம் புதைத்தாள்.

"உபதளபதி, உடம்பு சுடுகிறதே."

"ஆம். களைப்பு. காலில் பட்ட காயம். நீரில் வெகு நேரம் நீந்திய குளுமை, ஒரு வேளை என் ஆதுரச்சாலையின் முதல் நோயாளி நான் தான் போலிருக்கிறது."

"அங்கெதற்கு நீங்கள் போக வேண்டும். நானே உமக்கு மருந்து. உண்டு முடித்தாயிற்று. சற்று தூங்குங்கள்." தோள்கள் அழுத்தினாள்.

"பரவை" மன்னர் தூணில் சரிந்து உட்கார்ந்தார்.

"என்ன?"

"இந்த இடம் சரியா?"

"ஏன்?"

"இறைவனை அவமதிப்பதாகாதா?"

"அங்கே இடையறாது இதைத்தானே வீதிவிடங்கன் செய்கிறார். ஆவுடையாரும் லிங்கமும் புணர்ச்சியின் விளம்பல் தானே...அன்பின் சின்னம் தானே."

"ஏனோ களைப்பாய் இருக்கிறது, பரவை."

"பொறுப்பு கொடுத்த அயர்ச்சி. விடிய சரியாகும்."

"இல்லை. இதுகாறும் பல விஷயங்கள் எனக்குத் தெரிய வில்லையே என்கிற வேதனை."

"தெரிந்து விட்டதல்லவா, தூங்குங்கள். நான் தூங்க வைக்கிறேன். பாருங்கள்."

நெற்றி தடவி, நெஞ்சு தடவி, தோள்கள் பிடித்து, இருட்டு கவித்து வந்தது. மழை விடவில்லை. காற்று பூவாய் சாரலை அவர்கள் மீது தூவியது.

மன்னர் ராஜேந்திரர் தேடலுக்கு பரவை பொருளானாள்.

## 10

விடியல் நேரம் பரவை எழுந்து நின்றாள். கீழே கிடந்த கச்சு எடுத்து உடுத்திக் கொண்டாள். புடவையை உதறி போர்த்திக் கொண்டாள். வெளியே இன்னும் மழை பெய்து கொண்டிருந்தது.

தலையணை இன்றி ராஜேந்திரர் ஒருக்களித்து தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

"மன்னரே" உலுக்கி எழுப்பினாள்.

“என்ன பரவை.”

பரவை சிரித்தாள்.

“என்ன மழை நின்று விட்டதா?”

“இல்லை மாமன்னரே”

“என்ன...?

“திருமன்னி வளர இரு நிலமடந்தையும், போர் செயப் பாவையும் சீர்தனிச் செல்வியும் தன்பெரும் தேவியராகி இன்புற...” அவர் மெய்கீர்த்தி சொல்லத் துவங்கினாள்.

“மாமன்னர் ராஜேந்திரருக்கு அணுக்கி பரவையின் வணக்கம்.”

“நான் உபதளபதி பரஞ்சோதி.”

“இல்லையென்று எனக்கு இந்தப் படியில் சந்தித்த போதே தெரியும்.”

“எப்படி.”

“இந்தச் சந்திப்பே நாடகம்.”

“யார் போட்ட நாடகம்.”

“போட்டது நான். போடச் சொன்னது உங்கள் அத்தை.”

“எந்த நாடகம்.’

“மனுநீதிச் சோழன் நாடகத்திலிருந்து நேற்று இரவு வரை உபதளபதி உபதளபதி என்று நான் அழைக்க உதடு துடித்து நின்றீர்களே அதுவரை.”

“அத்தை போடச் சொன்னார்களா. ஏன்?”

“உங்களை வளைக்க உங்கள் பட்டமகிஷியால், மற்ற மனைவியரால் இயலவில்லை. உங்களை வழிப்படுத்த வேணும் என்றார்கள்.”

"ஒத்திகை விட்டு வெளியேறச் சொன்னது முதல்... நேற்று சோறு கொண்டு வந்தது வரை என்னை ராஜேந் திரன் என்று அறிவாயா..."

"ஆம்."

"மன்னனென்று அறிந்தே அணுக்கியானாயா?"

"ஆம்."

"அத்தை கட்டளையிட்டதால் செய்தாயா?"

"உண்மை."

"இப்போது ஏன் சொன்னாய்?"

"இனியும் தொடர முடியவில்லை."

"ஏன்?"

"நல்லவரிடம் பொய் பேச முடியவில்லை."

"என்ன நல்லது என்னிடம்."

"முரடன், மூர்க்கன், போர் வெறியன் என்று எனக்குச் சொல்லப்பட்டது. நான் இங்கே கண்டது அவரையல்ல, ஒரு மனிதனை. ஆதுரச்சாலைக்கு காசு விட்டெறிந்த வனை, ஊர் ஊராய் சென்று மக்களை கண்டவனை. குழப்பம் வந்த இடத்தில் உண்மை கண்டு கலைஞனை மதித்தவனை கவிதைக்குக் கிறங்கியவனை. எல்லா வற்றையும் விட தாழ்ந்த குலத்தவன் தழுவிக்கொள்ள சோறு தலையில் தூக்கிய பெரும் பேராளனைக் கண் டேன். தூசு ஒட்டிக்கிடந்த மாணிக்கம். சற்று துடைத் தேன். மாணிக்கம் தானாய் பிரகாசிக்கிறது."

"உன் அரசுப் பணி முடிந்து விட்டதா."

"மேற்கொண்டு கட்டளையிட்டால் தொடருவேன்."

"என் மீது காதலில்லையோ?" -

“இருந்ததால்தான் மேலும் பொய் சொல்ல முடியாமல் விஷயம் வெளியிட்டேன்.”

“ஒரு அரச கட்டளை நிறைவேற்றவல்லவா கர்ப்பக் கிர கத்து வாசலில் சண்டையிட்டாய்.”

“உண்மை. ஆனால் கண்டது முதல் காதல் கொண் டேன். இந்நாடகம் நடத்த என்னுள் நான் பட்டபாடு சிவனே அறிவான்."

“நம்பச் சொல்கிறாயா?”

“ஏழை ஜனங்களுக்கு தலை மேல் சோறு கொண்டு தள்ளாடி வந்த காட்சி கண்டு காலில் விழுந்து கதறத் தோன்றிற்று. இவரை எதற்கு யார் வழிப்படுத்த வேண் டும் என்று கேள்வி வந்தது. சுற்றி மக்கள். அடக்கிக் கொண் டேன். அருண்மொழி சோறெடுத்துக் கிளம்ப, மடக்கி நானே கொண்டு வந்தேன்.”

“அருண்மொழி அறிவானா?"

“தெரியும்.”

“நீலகங்கன், மாறன்?”

“தெரிந்திருக்கலாம்.”

“பிரம்மராயர்?”

“அவரும் உடந்தை."

“ச்சே. சூழ்ச்சிக்காரர்கள், நயவஞ்சகக் கூட்டங்கள் “

“இல்லை மன்னா.”

“போதும் பரவை.”

"உங்கள் கோபம் நியாயம் மன்னரே. கோபம் தீர்க்க சிகை பிடித்து அடித்து புரட்டுவது வழக்கமாயின் செய்ய லாம். சித்தமாய் இருக்கிறேன். ஆனால் உங்கள் மேலும் சில குறைகள் உண்டு”

“என்ன குறை.”

“ஐந்து மனைவியர். அழகான பிள்ளைகள். அரண்ம னைக்கு போவதேயில்லை என்றால் என்ன அர்த்தம்?”

“அங்கே ஆயிரம் பிரச்னைகள்.”

“பிரச்னைகள் உள்ள இடத்தில் மனைவியரைத் தள்ளி விடுவதா. உங்களை நம்பி வந்தவளை உதாசீனப் படுத் துவதா. அழைத்துக் கொண்டு திருவாரூர் வருவது தானே. அல்லது பழையாறை போவதுதானே. ஏன் உங் களுக்கு என்று ஒரு தலை நகரம் ஏற்படுத்திக் கொள் வது தானே.”

மன்னர் திரும்ப வெறித்தார்.

“அரசே, தந்தைக்கும், தாய்க்கும் பிணக்கு எனில் பிள் ளைகள் தாய் பக்கமே நிற்கும். தந்தையை வெறுக்கும். பகைமை பெருக்கும். உங்கள் சொந்தப் பிரச்னை சோழ வள நாட்டை சீரழிக்கும். மன்னன் ஒரு முன் மாதிரி அவன் குடித்துவிட்டு கூத்து பார்க்க ஒரு கூட்டமே குடி பழகத்துவங்கும். கூத்து மேடையே கதி என்று திரும்பும்.

“அரசியாரை இங்கு வரச் சொல்லுங்கள், பிள்ளைக ளோடு மறுபடி தென் திசை முழுவதும் சுற்றுங்கள். இறங்கி மக்களோடு பேசுங்கள். பெண்களோடு அரசிக ளைப் பேசச் சொல்லுங்கள். அரசியல் கற்றுக் கொடுங் கள். அங்கங்கே உங்கள் கொடி பறக்கும் தேசத்தில் பிள்ளைகளுக்கு முழு அதிகாரம் பொறுப்புக் கொடுங் கள். பாண்டியரை பாண்டியராகவும், சேரனை சேரனாக வும் மதியுங்கள். சோழனுக்கு அடிமை என்று நினைக்க விடாதீர்கள். பாண்டிய சோழன் என்று மகனை அங்கு மன்னராக்குங்கள்...அம்மகனை பாண்டியர்கள் தங்களு டையவன் என்று நினைக்க வையுங்கள்.

“எங்கு வறண்ட நிலம் கண்டீரோ அங்கு வாள் ஊன்றி இது என் தலை நகர் என்று முரசு கொட்டுங்கள். லட் சோப லட்சம் வீரர் கூட்டம், அங்கே தலை நகர் எழுப் பட்டும். நதி நீரை வறண்ட பூமிக்குத் திருப்புங்கள். புதிய மாளிகை எழும்பட்டும். புத்தம் புதிய நகர் வளரட் டும். உழுகிறவனுக்கு நிலம் கொடுங்கள். கல்தச்சனை கவிதை வடிக்கச் சொல்லுங்கள்.

“மன்னா. உமது தந்தையைவிட உங்கள் தீரம் பெரிய தென்று நிரூபிக்க கங்கைவரை உங்கள் படை போயிற்று அல்லவா? உள்ளூரில் செய்ய இயலாதா. உங்கள் தந் தையின் பெருமை எது? ஈழம் வென்றதா? காந்தளூர் சாலை கலமறுத்ததா? பாண்டியர் *தேசு கொண்டதா. இல்லை பெரியதொரு கோவில் எடுப்பித்தது. பிரகதீஸ் வரம் கட்டியது. அதையும்விட சிறந்த கோயில் உங் களால் முடியாதா.சோழதேசம் பரந்து இமயம் முதல் குமரிவரை இருக்க வேண் டியதில்லை. அதுபோலவே உயரமான கோவில் தேவையில்லை. சிறிய நாடு சிறிய கோவில் சிற்பங்கள் கவிதை சொல்லட்டும். காலம் கடந்து உங்கள் பெயர் சொல்லட்டும், கங்கை கொண்ட வனின் புகழ் பாடட்டும்.

“அரசே, இதுவரை என் பேச்சில் குற்றம் கண்டால் என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் மனசு புண்ப டும் படி பேசியிருப்பின் மறந்து விடுங்கள். நான் பதியி லார். தளிச்சேரிப் பெண். தேவரடியார். இறைவனுக்கு என்னை அர்ப்பணித்தவள்.

“மலர்ந்த பூவிலும், ஏழையின் சிரிப்பிலும், கலைஞனின் சிறப்பிலும் எமது மன்னன் தோள் நகுங்க சோறெடுத்து நீர் சுழித்து தள்ளாடி வந்த நடையிலும் அய்யா, என் சிவனே, சர்வேஸ்வரா. ஆதிக்கடவுளே, அன்புருவாய் நின்ற எம் பெருமானே, உம்மைக் கண்டேன், உம்மைக் கண்டேன்” திரும்பி நன்றி கூறி சன்னதி நோக்கி கை

உயரே தூக்கி, உடல் குலுங்க அழுதாள். ராஜேந்திரர் மனசு கலங்கியது,

“மீளா அடிமை உமக்கே ஆளாய் பிறரை

வேண்டாதே

மூளாத் தீப் போல் உள்ளே கனன்று முகத்தால்

மிகவாடி

ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல்

சொன்னக்கால்

வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்தேபோம் நீரே." சுந்தரரின் பதிகம் பாடினாள்.

மன்னர் முகத்தில் மெல்ல நகையோடியது. இப்போது இந்தப் பதிகம் இறைவனுக்கா எனக்கா என்று கேள்வி வந்தது.

மெல்ல அவளைத் திருப்பினார்.

“எனக்கு... என்னை புரிந்தது பரவை. உனக்கென்ன வேண்டும் கேள்..."

“இந்த செங்கல் கோயிலை கற்கோயிலாக நீங்கள் எழுப்ப வேண்டும்." -

“உனக்கென்ன வேண்டும் கேள்."

“இது கற்றளியாய், பெரும் கோவிலாய் எழ, தஞ்சையிலுள்ளது போல நல்ல சாலைகளும், உடையா மதகுகளும், கடிகையும் ஆதூரச் சாலையும் பெருக, வேளாண்மையும் பெருகும்.'

“உனக்கென்ன வேண்டும், பரவை."

“என்றென்றும் உங்கள் அணுக்கியாய் ஏழேழ் பிறவியிலும் உங்கள் தோழியாய் உங்களோடு சண்டையிட்டு

வாதாடி ஊர் மக்களுக்கு உதவும் பணிப்பெண்ணாய் தேவரடியாராய்..."

மன்னர் அவள் பேச முடியாதபடி இழுத்து அணைத்துக் கொண்டார். -

வெளியே வானம் வெளுத்தது. கன்றுகள் வெளியேறின. அத்தணர்கள் உள்ளே வந்தனர். வெள்ளம் வந்த வேகம் போல் வடியவும் துவங்கிற்று.

அருண்மொழி ஓடிவந்து பரவையைப் பார்த்தான். பரவை தான் கட்டிக்கொண்ட கயிறு காட்டினாள். தாமரை மலர்ந்தது, என்று அபிநயம் செய்தாள். எல்லாம் சொல்லப் பட்டது என்பதாய் நின்றாள்.

நீலகங்கன், மாறன், தென்னவன் ஓடி வந்தார்கள். அருண்மொழி சைகை காட்டினான்.

“திருமன்னி வளர இரு நில மடந்தையும் பேர் செயப் பாவையும் சீர்தனிச் செல்வியும்...” நீலகங்கன் மெய்கீர்த் தியை உரக்கக் கூற உள்ளே வந்த கூட்டம் திகைத்து நின்றது.”உபதளபதி பரஞ்சோதியாய் வேடமிட்டு திரு வாரூர் வந்தமர்ந்த மாமன்னர் கோப்பரகேசரி, உடை யார், கங்கை கொண்டார், ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் வாழ்க” என்று கூவினான். கூட்டம் கை கூப்பியது'

பிரம்மசபையாரும் வேளாளர் சபையும் அங்கேயே கூடி னர்.

வெள்ளத்தால் பாழ்பட்ட பிரம்மதேய நிலங்களை தாமே விலை கொடுத்து வாங்குவதாகச் சொல்ல, பிராம்ம ணர்கள் நல்லது என்று சொன்னார்கள். பொன்பெற்றுக் கொண்டார்கள். அந்த பிரம்மதேய நிலங்களை வெள் ளான் வகை நிலமாக்கி வேளாளர்கள், நான்காவது வர் ணத்தார் அனுபவித்துக் கொண்டு வரவும் அவர்களுக்கு அரசு வரி தருவதற்குப் பதிலாக திருவாரூர் கோவிலுக்கு

ஒரு வேலிக்கு இத்தனை கலம் இறையிலியாக விட வும் கட்டளையிட்டார். இனி திருவாரூர் கோவிலுக்கு வேளாளர்களே படியளப்பதாய் நிலைமை மாறிற்று.

நிலம் விலைக்குப் பொன் கொடுத்து போக மீதியுள்ள பொன்காசுகளை பரவையிடம் தந்தார். கற்றளியெடுக்கு மாறு வேண்டினார். திருவாரூர் கோவிலில் செங்கல் கட் டிடம் பெரிய கற்கோவிலாய் மாற திட்டங்கள் போடப்பட் டன.

அரசியாருக்கு தனித்தனியே ஓலையெழுதி அனுப்ப, ஆனந்தமயமாய் பிள்ளைகளுடன் அவர்கள் புறப்பட்டு வர பரவையை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். பிள்ளைகள் சகலமும் அருண்மொழியால் கேள்விப் பட்டு பரவையை வணங்கினார்கள். மறுபடியும் மனுநீதிச் சோழன் நாடகம் பார்த்தார்கள்.

வாழ்க்கை பற்றி பல நாட்கள் அவளுடன் விவாதித் தார்கள், அந்த வீர இளைஞர்கள் அப்பாவின் அணுக் கியை, தந்தையின் தோழியை. சோழ தேசத்துச் சரித்தி ரம் வலுப்படுத்திய தளிப்பெண்டிரை தாயெனப் போற்றி னார்கள்.

மன்னர் மறுபடியும் தென்திசை வலம் வந்தார். தமது பிள் ளைகளை பாண்டிய தேசத்தில், சேர நாட்டில் இன்னும் பல இடங்களில் முடி மன்னர்களாய் நிறுத்தி பூரண அதி காரம் கொடுத்தார். தஞ்சைக்கு வடக்கே கொள்ளிடக் கரை தாண்டி மேடான பூமியில் நீரற்ற வெட்ட வெளியில் வாள் உருவி நட்டார். -

கங்கை கொண்ட சோழபுரம் அங்கே துவங்கியது. தனக் கென்று கோட்டையும். சிவனுக்கு அருமையான கற் கோவிலும் எழுப்ப கல் நடப்பட்டது. மரக்கலங்கள் தயா ராயின. கடல் கடந்து பல நாடுகள் வென்றார். ஸ்ரீவிசயன் ராஜேந்திரரோடு சமாதானம் செய்து கொண்டு அழகான

தேர் அவருக்குப் பரிசளித்தார். பண்ணை மலையூர், மாயிருடிங்கம், பாப்பாளம், தக்கோலம், தமாலிங்கம், தக் கவாரம், இலாமுரிதேசம் என்கிற தேசங்களிலெல்லாம் புலிக்கொடி பறக்க விட்டார். கடார மன்னன் சாங்கிராம விசயோத்துங்கவர்மனை போரில் புறங்கண்டு பெருஞ் செல்வத்துடன் நாடு திரும்பினார். தொடர்ந்து வணிகர் நலம் காக்க அவர் கடற்படை கிழக்குக் கடலில் சுற்றிக் கொண்டிருந்தது.

திருவாரூர் கோவில் கற்கோயிலாயிற்று. கோவில் முழு வதும் விளக்குகள் அலங்கரித்தன. அணுக்கி பரவை நாச்சியாருடன் தேரில் உலா வந்து அவளும் ராஜேந்தி ரரும் வீதியிடங்கரைத் தரிசித்த இடத்தில் பெரிய குத்து விளக்கை நிவந்தமாய் எரிய விட்டார். -

ராஜேந்திரர் தனக்குக் கொடுத்த செல்வம் அனைத்தும் பரவை கோயிலுக்கு நிவந்தம் கொடுத்தாள். இருபதா யிரந்து அறு நூற்று மூன்று கழஞ்சு எடையுள்ள பொன் னால் கர்ப்பக் கிரஹம் முழுவதையும் தகடாக்கி போர்த் தினாள். நாற்பத் திரண்டாயிரம் பலம் எடையுள்ள பொன் தகடுகளால் கதவுகள் அமைத்தாள்.

அரசிகளுடன் ராஜேந்திரர் தஞ்சைக்கு வடக்கே கங்கை கொண்ட சோழபுரம் நகரம் போக, ராஜேந்திரர் நினை வாகவே பரவை கோவில் பணி செய்தாள், அதன் பிறகு அவர்கள் சந்திக்கவில்லை.

ராஜேந்திரர் * பரவைபுரம் என்கிற ஊரில் தன் அணுக்கி யின் பெயரால் பரவை ஈஸ்வரம் என்கிற கோவில் எழுப் பினார்.

இராஜேந்திரர் தமது முதுமையில் இறந்து போக, பரவை ஆருரான் திருக்கோயிலில் இராஜேந்திர சோழன் மண் டபம் கட்டி வைத்தாள்.

அவளும் முதுமைப்பட்டு இறக்க, ராஜேந்திர சோழர் மகன் இராசாதிராசன் தனது தந்தையின் அணுக்கிக்கு படிமம் எடுத்து அணுக்கி பரவை நாச்சியாரும், இரா ஜேந்திர சோழரும் நிற்கும் சிலை உருவு செய்து அதற்கு தினசரி பூஜை நடத்த நிவந்தங்கள் விடுத்தான்.

பட்டமகிஷியாகவோ, மனைவியாகவோ இல்லாமல் தளிச்சேரி பெண்டிர் என்கிற தேவரடியார் குலத்தில் பிறந்த இந்தப் பெண் அணுக்கி பரவை நாச்சியார், சோழகுல பெண் தெய்வமாய் இருந்தாள்.

இறந்து போனபின் துக்க நினைவாய் எழுப்பப்பட்ட தாஜ்மகாலாய் இல்லாது இருக்கும் பொழுதே காதல் நினைவாய் எழுப்பப்பட்ட பரவை ஈஸ்வரம் இன்னும் தமிழ் நாட்டில் பிரபல்யமற்று இருக்கிறது.

அருண்மொழியின் தகப்பனார் கிருஷ்ணன் ராமனான மும்முடிச்சோழ பிரம்மராயர் சென்னை நாடு என்கிற பகுதியை ராஜேந்திரரிடமிருந்து ஓய்வூதியமாகப் பெற்றார்.

அருண்மொழி உத்தமச்சோழ பிரம்மராயன் முதன் மந்திரியானான். ராஜேந்திரரின் ஆணைப்படி கங்கை நாட்டில் குவளாலபுரத்தில் (மைசூரில் உள்ள கோலார்) ஒரு பிடாரி கோவில் (கோலாரம்ம கோவில்) கட்டினான்.

ஆனால் ராஜேந்திரரால் அடக்கப்பட்ட அண்டை நாடுகள் மறுபடி மறுபடி கிளர்ந்தன. சோழ மன்னர்களின் இறுதிக்காலம் வரை போர் ஓயவில்லை.

ஆனால் பரவை நாச்சியாரின் காதல் சொல்லும் ராஜேந்திர சோழரின் நிவந்தம் மட்டும் கல்வெட்டாய் இன்னும் திருவாரூரில் வீதி விடங்கர் கோயிலில் இருக்கிறது. சந்திராதித்தியர் உள்ளவரை இருக்கும்.

**நிறைந்தது**